இராவணா

ஒரு வரலாற்று மாந்தனா?

ம.சோ. விக்டர்

நோவா - வரலாற்று மாந்தனா?

ம. சோ. விக்டர்

யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர்
அரியலூர் – 621 713
அலைபேசி: 98432 73914

நோவா – வரலாற்று மாந்தனா ?
(வரலாற்று ஆய்வு நூல்)

Dr. Ma.So. Victor, M.A., Ph.D.,
Cell : 9843273914

© ஆசிரியர்

முதல் பதிப்பு : 2010

பக்கம் : 152
படிகள் : 1200

பதிப்பு :
யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர்
அரியலூர் - 621 713
அலைபேசி: 98432 73914

வடிவமைப்பு :
எஸ். தனசேகர்

விலை : 125. 00

அச்சிட்டோர்:
ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 044-42664695, 90031 81586

பொருளடக்கம்

I.	பதிப்புரை	7
II.	ஆசிரியர் உரை	10
III.	முன்னுரை	13
1.	வெள்ளம்	17
2.	நோவா ஒரு வரலாற்று மாந்தனா?	21
3.	மெசபத்தோமியக் கதை	31
4.	சுமேரியக் கதை	37
5.	ஆரியக்கதை	39
6.	அராபியக் கதை	42
7.	விவிலியக் கதை	44
8.	பிற சமயங்களின் வெள்ளக் கதைகள்	49
9.	அறிவியல் நோக்கில் வெள்ளம்	51
10.	நோவா – அண்மைக் கால ஆய்வுகள்	55
11.	நோவா – புதிய கண்ணோட்டம்	68
	1. மெசபத்தோமியக் கதை விளக்கம்	
	2. சுமேரியக் கதை விளக்கம்	
	3. ஆரியக் கதை விளக்கம்	
	4. அரபுக் கதை விளக்கம்	
	5. விவிலியக் கதை விளக்கம்	
12.	உலகம் – புவியியல் வரலாறு	102

1. சமயப் பார்வை

2. அறிவியல் பார்வை

3. புவியியல் பார்வை

4. மாந்த இனத் தோற்றம்

5. குமரிக் கண்டம்

6. இலக்கியப் பார்வை

13. புதிய உலகம் 125

14. முடிவுரை 128

செம்மொழிச் சித்தர், முதுமுனைவர், செந்தமிழ் அந்தணர் இளங்குமரனாரின் சான்றுரை

வெற்றியர் திரு. விக்டர்

இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர் – 620 101.
திருச்சி மாவட்டம்.

நாள்: 09.04.2012.

தமிழ்த் திருவாளர் ம.சோ. விக்டர் அவர்கள் அரிய தமிழ்ப் பற்றாளர்; ஆழ்ந்த ஆய்வாளர், பாவாணர் கருத்துகளில் பயின்ற தோய்வாளர்; அவர் கண்ட கொள்கைகளைப் பலப்பல நூல்களால் நிறுவி வரும் மொழி நல மீட்பாளர்.

தமிழன் தோன்றிய குமரிக் கண்டம்;

அவன் பேசிய மொழி தமிழ்;

அத்தமிழே உலக மொழிகளின் தாய்மொழி;

தமிழே ஆரியத்துக்கு மூலம்;

திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி ஆவது தமிழே;

என்னும் கொள்கைகளை உலகப் பேரறிவர் சான்றொடும் உள்ளார்ந்த ஆய்வொடும் நிறுவுவதே தமது வாழ்வாகக் கொண்டு, அசைக் கொணாச் சான்றுகளுடன் நூல்களைப் படைத்தவர் பாவாணர்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள், தம் ஆழிய ஆய்வொடும், கால வளர்ச்சியாலும் தம் உள்ளொளியாலும் மேலும் மேலும் அக்கொள்கைகளை நிறுவ ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப்

படைத்துவரும் தமிழ்த் தாயின் தவப்புதல்வர். அவர் தம் நூல்களை இயல்பான ஓட்டத்தில் தடையின்றிக் கற்கவும் தெளிவுறவும் வாய்ப்பாம் வகையில், வனப்புற ஓர் ஒழுங்கில், நல்ல கட்டமைப்பில் அச்சிட்டு, உலகத் தமிழர்க்குக் கொடை யாக வழங்க வல்ல யாத்திசைப் பதிப்பகமாம்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள் பன்மொழிப் புலமையாளர்; நுனிப்புல் மேயாத நுண்ணிய கல்வியர். தொல்காப்பியச் செல்வம், சங்க நூல்வளம், திருக்குறள் தோய்வு, காப்பியக் கவின் யாவும் ஒருங்கே கைவரப் பெற்றவர். புலமையர் வழக்கோடு பொதுமக்கள் வழக்கையும் ஊன்றி அறிந்து, உரிய வகையில் போற்றும் ஆற்றலர். இயல்பான ஆற்றொட்ட நடையில் எழுதவும் வல்லவர். ஆதலால், தம் பெயரை நிறுவு வார் போல், "வெற்றி" மேல் வெற்றிப் படைப்புகளைச் செய்து வருகின்றார்.

"க" என்னும் எழுத்துப் பற்றி விளக்கி ஒரு நூல்,

"எல்-யா" என்னும் இருமை ஒரு சொல் பற்றி ஒரு நூல்,

உலகளாவிய தமிழ், உலக மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள், எபிறேய மொழியில் தமிழின் வேர், தமிழும் சமற் கிருதமும், தமிழும் செமிட்டிக் மொழியும், இந்திய மொழி களின் தாய் தமிழே, பஃறுளி - யூப்ரடீசு, குமரிக்கண்டம், குமரிக்கண்டமும் ஆப்பிரிக்கக் கண்டமும், தமிழும் ஆரியமும், மேற்கிலும் தமிழ், வாழும் தமிழ், தமிழ் மணம், சேயோன், சேயன், தமிழரின் எண்ணியல், வானியலும் தமிழரும், சிந்துவெளி நாகரிகம், தமிழும் எபிறேயமும், பாபிலோனியர் தமிழ், தமிழ்நாட்டுக் கிறித்துவம், இசுலாம் தமிழர் சமயமே என அடுக்கடுக்காக ஆய்வு நூல்களைப் படைத்து வருபவர்.

ஒய்விலாப் படைப்பாளியாம் திரு. ம.சோ. விக்டர் அவர்களின் நூல்கள் "தனித்தனி முனைவர் பட்டம் பெறத் தக்கவை" எனினும், பட்டம் பற்றிக் கவலைப்படாமல், கருதாமல், கடமை புரிதலே பிறவிப் பேறு எனக் கொண்டு, தொண்டு புரிந்து வரும் தோன்றல் அவர்.

பன்முகப் பார்வைப் படைப்பவராம் திரு. ம.சோ. விக்டர், நன்முகத் தோற்றத்தர்; நவில் தோறும் நயமாம் நூல்போல், பழகுந்தொறும் “தேனோடு பால் கலந்த” இனியர். தமிழ்த் தொண்டரை மதிப்பவர். தமிழ்த் தொண்டரொடு தாமும் தொண்டராய் ஊன்றி நிற்பவர். மேலும் மேலும் அவர் படைப்புகள் தமிழ் வளமாய்த் தொடருமாக! இன்பமே மல்குக.

இரா. இளங்குமரன்

ஆசிரியர் உரை

கடைக்கழக இலக்கியங்களும், சில சமற்கிருத இலக்கியங்களும், குமரிக்கண்டத்தைக் கொடுங்கடல் கொண்டதாகத் தெரிவிக்கின்றன. அக்கண்டம் அழிவுற்றபோது இலக்கக் கணக்கான மக்களும், இலக்கியச் செல்வங்களும் சேர்ந்தே அழிந்தன. உலகமே அழிந்தபோது, அவ்வழிவை விளக்கிப் பிற்காலத்து மக்களுக்குச் சொல்ல ஒருவனாவது உயிர் பிழைத்திருந்தால்தான் இயலும் என்பதைப் போல, குமரிக்கண்டம் அழிந்த போது, அதன் அழிவைப் பற்றிக் கூறப் பலர் இருந்தனர். அவர்கள் கூறிய செய்திகளே வெள்ளம் பற்றிய கதையாகும். இந்நிகழ்வு கதையா, வரலாறா எனப் பார்க்கும் போது, இரண்டுமே அச்செய்திகளில் உள்ளதை அறியலாம்.

வெள்ளக் கதையை உலகின் அனைத்து சமயங்களுமே கூறுகின்றன என்பதால் அது ஒரு வராற்று நிகழ்வாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஊட்நா பிஷ்டிம், சேய் சூத்திரன், நோவா, தெற்காழியன் (தெக்காலியன்), நூஹ்நபி, மனு என்றவாறு பல பெயர்களைத் தாங்கிய மாந்தன் வெள்ளத்திலிருந்து மீண்டதாகக் கதைகள் கூறுகின்றன. கதையின் போக்குகளும் கருவும் கூட ஒன்று போலவே காணப் படுகின்றன. வெள்ளப் பாழ் நிகழ்வுற்றிராத மெசபத்தோமியா, எகிப்து, கிரேக்கம், ஊரோமை போன்ற நாடுகளில் தான் வெள்ளக் கதை பரவலாக அறியப் பட்டுள்ளது.

ஏற்கனவே என்னுடைய சில நூல்களில் வெள்ளம் இவ்வுலகை அழித்தது பற்றிய செய்திகள் விளக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பற்றி விளக்கமாக எழுதவேண்டும். பலரும் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. குமரிக்கண்டம் அழிந்த நிகழ்வையே, உலகச் சமயங்கள் வெள்ளக் கதைகளாகக் கூறி வந்துள்ளதை அறியலாம். ஆனால் ஆய்வாளர்களில் ஒரு சிலரே இத்தொடர்புகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். கங்காணியார் கால்டுவெல்லாரும், சமற்கிருத

அறிஞர் மோனியர் வில்லியம் இத்தொடர்புகள் பற்றிக் குறிப் பிட்டுள்ளனர். வில்லியம்ஸ், ஆரியக் கதையான மனுவின் கதையையும் இணைத்துக் கூறியுள்ளார். மேற்கண்ட இருவரும் கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதால், நோவா கதையை இந்தியச் சூழலோடு இணைத்துப் பார்த்தனர்.

உலக மக்களில் பெரும்பாலோருக்கு அறிமுகமான பெயரே நோவா என்பதாகும். ஆதாமையும் நோவாவையும் அறிந்திராதவர் மிகச்சிலரே எனலாம். நோவா என்பவன் உண்மையில் ஒரு வரலாற்று மாந்தனா அல்லது கற்பனையான கதையின் நாயகனா என்ற கேள்விகளுக்கு, முரண்பாடான பதில்களே கிடைக்கும். நோவா என்பானைப் பற்றிய உண்மை களைச் சான்றுகளுடன் அறிந்து கொள்ள கடந்த காலத்தில் பல ஆய்வாளர்கள் முயன்றுள்ளனர். தற்போதும் அம்முயற்சி தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றது. ஆனால் அதற்கானச் சான்றுகள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. நோவா பற்றிய செய்திகளுக்குச் சான்றுகள் இல்லாத போது, அவனை ஒரு வரலாற்று நாயகனாக அறிவியல் ஏற்றுக் கொள்ளாது.

இதுவரையிலும் நோவா - வெள்ளம் பற்றி ஆய்வு செய்த வர்கள், அச்செய்திகளை விளக்கும் சமய இலக்கியங்களை உன்னிப்பார்த்து ஆய்வுகள் மேற் கொள்ளவில்லை. வரிக்குவரி பொதிந்து கிடக்கும் உண்மைகளை அறிய முற்படவில்லை. மேற்கித்திய ஆய்வாளர்களுக்கு கிழக்கித்தியப் பார்வை இருந் திருக்கவில்லை. கிழக்கித்திய ஆய்வாளர்களுக்கு மேற்கித்திய இலக்கியங்கள் பற்றிய தெளிவு இருந்திருக்கவில்லை. வெள்ளம் பற்றிய செய்தியை குமரிக்கண்டத்தோடு இணைத்து நோக்கும் தமிழ்நாட்டு ஆய்வாளர்களும், மேற்கித்திய மெசபத்தோமிய, சுமேரிய, விவிலிய, கனானிய, எகிப்திய, கிரேக்க இலக்கியங்கள் தரும் செய்திகளை ஒப்பு நோக்கவில்லை.

மேற்கித்தியக் கதைகளில் காணப்படும் நிகழ்வுகளையும், பெயர்களையும் சொற்களையும், தமிழ்க் கண்ணோட்டத்தில் இதுவரை எவரும் அணுகவில்லை. குமரிக்கண்டம் அழிந்து பட்டதற்கு வெள்ளம் மட்டுமே காரணியாக இருக்க இயலாது. மேலும் பல இயற்கைப் பேரழிவுகளும் அந்நிகழ்வுடன் இணைந் துள்ளன. இன்றைய அறிவியல், உலகின் புவியியல் அமைப்பு களைத் தெளிவாக விளக்கியுள்ளது. எரிமலை வெடிப்புகள், ஆழிப் பேரலைகள், நில அதிர்வுகள் என இம்மூன்று கூறுகளும்

ஒன்றுக் கொன்று தொடர்புடையவைகளாக உள்ளன வென் பதை அறிவியல் தெளிவு படுத்தியுள்ளது. உலகில் ஆண்டு தோறும் பத்து இலக்கத்துக்கும் குறையாத அளவில் நில அதிர்வுகள் நிகழ்வதாகவும், அவற்றில் பத்துமுதல் இருபது வரையிலான நில அதிர்வுகளே அழிவுகளை ஏற்படுத்துகின்றன என்றும் அறிவியலார் கூறுகின்றனர். உலகின் உள் நடுப்பகுதியில் கனன்று கொண்டிருக்கும் நெருப்புக் குழம்பு உள்ளவரை, உலகின் மேற்பரப்பில் அசைவுகள் நிகழ்ந்து கொண்டுதானி ருக்கும் என்பது அறிவியல் கூற்று.

வெள்ளக் கதையை அறிவியல் நோக்குடன் இணைத்துப் பார்த்து, அந்நிகழ்வு பற்றிய செய்திகளை விளக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நோவா உள்ளிட்ட வெள்ள நாயகர்கள் பற்றிய செய்திகளும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அணுகப் பட்டுள்ளன. சமயமும் அறிவியலும் எப்போதும் முரண்பட் டவை யென்றாலும் கூட, சமயங்கள் பல்வேறு அறிவியல் தொடர்பான செய்திகளையும் கொண்டுள்ளன என்பதையும் மறுக்க இயலாது.

நோவா ஒரு வரலாற்று மாந்தனா என்ற இந்நூல், சமய மற்றும் அறிவியல் கண்ணோட்டங்களில் வெள்ளக் கதை களை ஆய்வு செய்துள்ளது.

இந்நூலை வடிவமைத்து அச்சிட்டு உதவிய ஸ்ரீராக வேந்திரா லேசர் பிரிண்டர்ஸ் நிறுவனத்துக்கும் எனது நன்றி.

ம. சோ. விக்டர்

முன்னுரை

பொதுவாக நல்லேர் பதிப்பகம் வெளியிடும் நூல்களில், பதிப்பாசிரியரின் பரிந்துரை மற்றும் அறிமுக உரையைத் தவிர மற்றவை இடம் பெறுவதில்லை. பதிப்பாசிரியரே சிறந்த திறனாய்வாளர் என்பதால், மிகவும் சரியான, உண்மையான, விருப்பு வெறுப்பற்ற, வணிக நோக்கற்ற அறிமுக உரையை அளித்து வருகிறார்கள். இந்த உரைகள் அனைத்தையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிடலாம் என்ற சிந்தனையும் உள்ளது.

ஒரு நூலைத் திறனாய்வு செய்பவர்கள், பெரும்பாலும் அந்நூலைப் பற்றிய பெருமைகளையும், சிறப்புகளையும் மட்டுமே குறிப்பிட்டு எழுதுவதென்பது நல்லதோர் மரபாகும். அது படைப்பாளருக்கும் வெளியீட்டாளருக்கும் தன்னம் பிக்கையை வளர்க்கும். நூல்களில் காணப்படும் சில குறை களையும், தரம் குறையாமல் சுட்டிக் காட்டும் திறனாய்வுகளும் உள்ளன. வரலாறு மற்றும் சொல்லாய்வு நூல்களைத் திறனாய்வு செய்ய, தமிழகத்தில் தற்போது மிகச்சிலரே முன்வருகின்றனர். திறனாய்வாளர்களின் என்ணிக்கை பெருக வேண்டும்.

பொதுவாகத் தமிழகத்திலுள்ள சில அறிஞர்கள், தமிழர் களால் உலகத்தரம் வாய்ந்த ஆய்வுகளை அளிக்க இயல வில்லை என்ற மனக் குறையுள்ளதாக அவ்வப்போது கூறி வருகின்றனர். திறனாய்வுகள் சரியாக மேற் கொள்ளப்படாததே இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். தமிழ்நாட்டில் ஆங்கில ஆய்வு முறைகள், பண்டைக் கால ஆய்வுகளுக்குப் பயன்படமாட்டா என்ற உண்மையைப் பலரும் புரிந்து கொள்வதில்லை. ஆங்கிலேயர்கள் ஒரு காலத்தில் தங்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த 52 க்கும் மேற்பட்ட நாடுகளில், அவர்களுடைய கண்டு பிடிப்பான ஆங்கில ஆய்வு முறையை அறிமுகம் செய்தனர். தமிழ்நாட்டிலும் அம்முறை புகுத்தப் பட்டது. இரண்டாம் ஞாலப் போருக்குப் பின், ஆங்கிலேயர்

களிடமிருந்து விடுதலை பெற்ற நாடுகளில் சில, தங்களது பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளில் ஆங்கில முறையை தொடர்ந்து பேணிக் காத்து வருகின்றனர். ஆங்கில உடுப்பை அணிந்து, கொண்டு, பட்டங்களைப் பெறுகின்றனர். இந்த உடுப்பு ஆங்கிலேயர்களின் ஆதிக்க அடிமைத் தனத்தின் சின்னம் என்று, அண்மையில் நடுவண் அமைச்சர் ஒருவர்கூட அவ்வுடுப்பைக் களைந்து, தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

ஆங்கில ஆய்வுமுறைகளைக் களைந்துவிட்டு, தமிழருடைய தொன்மையான வரலாற்றை ஆய்வு செய்வதற்கான புதிய முறையொன்றை இதுவரை தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்கள் மேற் கொள்ளவில்லை. பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் பல பேராசிரியர்கள், தாங்கள் ஆங்கில ஆய்வு முறைகளில் விற்பன்னர்கள் என்றும், அம்முறைப்படி செய்யப்படாத ஆய்வுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா என்றும் கூறி வருகின் றனர். இவர்களின் போக்கும் சிந்தனையும் ஏன் அடிமைத்தன மான ஆய்வு முறைக்குச் சார்பாக உள்ளதென்பதைப் புரிந்து கொள்ள இயலவில்லை. இவ்வாறான சிந்தனையுடையவர்களால் தமிழ், தமிழர் வரலாறு போன்ற துறைகளில் ஆய்வு செய்ய வருவோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. கதைகளும், நாவல்களும் கற்பனையாக, பொருளியல் நோக் கோடு எழுதப்படுபவை. அக்கதைகளின் நாயகர்கள், நாயகிகள் படும் இன்னல்களையும் இடையூறுகளையும் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெறுவதை, நெறியாளர்களும் ஊக்குவிக் கின்றனர். இவர்களிடம் வழிகாட்டுதல் பெறப்பட்டு முனைவர் களானவர்கள், எவ்வாறு பிறருக்கு வழி காட்டுவார்கள் என்று சொல்லத் தேவையில்லை. கதையின் நாயகியை ஆய்வதால் இந்த மக்களுக்கும் நாட்டுக்கும் என்ன பயன் கிடைத்துவிடப் போகின்றது? ஆய்வுகள் வழியே புதிய கண்டுபிடிப்புகளை வெளிக் கொணர வேண்டும் என்ற நோக்கமே பாழ்பட்டுப் போய், நேரமும் பணமும் வீணடிக்கப்படுகின்றன.

தேவநேயப் பாவாணர் தனது எம். ஓ. எல். பட்டத்துக்காக அனுப்பிய ஆய்வுக் கட்டுரை, சென்னைப் பல்கலைகழகத்தால், ஆய்வுக்குத் தகுதியில்லை என்று கருதப்பட்டு திருப்பியனுப் பப்பட்டது. பாவாணரினும் சிறந்த ஆய்வாளரை, அந்தப் பல்கலைக் கழகம் இதுவரை உருவாக்கியிருக்கின்றதா? பாவா ணரின் ஆய்வுகள் ஆங்கில முறைப்படி அமையவில்லை என்று

காரணம் கூறப்பட்டது. பாவாணரைக் காட்டிலும் சிறந்த மொழி ஆய்வாளர்கள் இதுவரை இங்கிலாந்தில் பிறந்துள் ளார்களா? ஆங்கிலேயர்கள் எவருக்காவது அத்தகைய ஆய்வுத் திறன் இருந்ததா? மொழியியல் அறிஞர்களிடையே ஞாயிறு போல் ஒளிவீசிக் கொண்டிருக்கும் பாவாணர், இன்று தமிழ கத்தின் ஆய்வாளர்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக் கிறாரே! பாவாணரையே புரட்டிப் போட்ட ஆங்கில ஆய்வு முறை, இன்று பாவாணரைக் காட்டிலும் சிறந்த ஆய்வாளர் களை உருவாக்கியிருக்கின்றதா?

பல தமிழறிஞர்களுக்கு, தமிழர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் உலகத் தரம் வாய்ந்தவைகளாக இல்லை என்ற சிந்தனை உள்ளது. அதாவது ஆங்கில முறைப்படி, தமிழறி ஞர்கள் சிந்திக்கவில்லை என்பதே அதன் உட்கருத்து. இப்படிக் கூறுவதால், தாங்கள் பெரிய ஆய்வாளர்கள் என மற்றவர்கள் கருதிக் கொள்ள வேண்டும் என நினைக்கிறார்கள். இது போலியான சிந்தனை. ஒவ்வொருவரின் தாய் மொழியைப் பற்றிய ஆய்வையும் அம்மொழி பேசுபவரே ஆய்வு செய்தால் அது சிறப்பானதாக இருக்கும். தமிழை ஆய்வு செய்த வெளி நாட்டவர் தந்த ஆய்வுகள் எல்லாம், தமிழரின் ஆய்வினும் மேம்பட்டதா? (நான், பல வெளி நாட்டவரின் தமிழாய்வு களையெல்லாம் படித்துப் பார்த்த போது, அவை தமிழின் ஆழத்தைத் தொடவேயில்லை என்ற உண்மையை அறிந்து கொண்டேன்) வெள்ளைத் தோலுடையவன் ஆங்கிலத்தில் ஆய்வு செய்தால், அது உலகத் தரம்வாய்ந்தது என்று கூறும் போலித் தமிழ் அறிஞர்களின் நிலையை என்ன வென்று கூறுவது?

கடந்த காலத்தில் ஆய்வாளர்களாகக் கருதப்பட்ட நீல கண்ட சாத்திரியார், இராகவ அய்யங்கார், பாவாணர், அருணா சலம் வெள்ளை வாரணனார், இலக்குவனார் போன்றவர் களின் ஆய்வுகளுக்கு இணையாக வெளிநாட்டுக் காரார்கள் எவராவது தமிழை ஆய்வு செய்துள்ளார்களா? மேற்கண்டவர் களின் ஆய்வுகள் உலகத் தர மற்றவைகளா? இன்னும் உலகத் தரம் வாய்ந்த தமிழறிஞர்கள் பலர் உள்ளனர். அவர்களது படைப்புகளும் பல வெளி வந்துள்ளன. அவற்றையெல்லாம் படித்துப் புரிந்துகொள்ள ஆற்றல் இல்லாதவர்கள், உலகத் தரம் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கின்றனர். உலக அளவில் மொழி ஆய்வில் பாவணர் செய்த புரட்சியை எவராவது

இதுவரை முறியடித்திருக்கிறார்களா? நோவாம் சோம்ஸ்கி போன்ற வாழும் மொழியியல் அறிஞர்கள் கூட, பாவாணரின் மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் உலகின் முதன் மொழி தமிழே என முழங்கிய பாவாணரின் ஆணித் தரமான கொள்கையை ஒட்டி, அத்தகைய தகுதி தமிழ்மொழிக்கு இருப்பதை மறுப்பதற்கில்லை என்று சோம்ஸ்கி கூறுவதை ஒப்பு நோக்க வேண்டும்.

தமிழ் - உலக மொழிகள் தொடர்பாக இதுவரையில் பல்வேறு தமிழறிஞர்கள் ஆய்வு நூல்களை வெளியிட்டிருக்கி றார்கள். அந்நூல்களைப் பற்றிய திறனாய்வுகளை தமிழ் நாட்டிலுள்ள எந்தப் பல்கலைக் கழகமாகவது கருத்துரைக்க முன் வந்துள்ளதா? அந்நூல்கள் பற்றிய கருத்தரங்குகளை நடத்தியதுண்டா? அத்தகைய அறிஞர்களுக்கு உதவி செய்ய முன்வந்ததுண்டா? தமிழர்களும் தமிழ் ஆர்வலர்களும், தமிழ் சார்ந்த அமைப்புகளும் தரும் ஊக்கங்களினால் மட்டுமே, இன்றைய தமிழறிஞர்கள் மேலும் மேலும் ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றார்கள். தொல்லியல் ஆய்வாளர் இராச வேலு, சிந்துவெளி ஆய்வறிஞர் மதிவாணன், வானியல் அறிஞர் வெங்காலூர் குணா ஆகியோரின் ஆய்வுகள் அனைத்தும் பல்கலைக் கழகங்களால் ஊக்கப் படுத்தப்படல் வேண்டும். தமிழ் மருத்துவம், நாட்டுப் புறக்கலைகள், தமிழ் இசை போன்ற களங்களில் சிறப்பானவர்களில் பலர் இப்போதும் கூட வெளிச்சத்துக்கு வரவில்லை. அரசு தரும் உதவிகள், சலுகைகள் எல்லாம் எங்கே சென்று கொண்டிருக்கின்றன என்பதை பலரும் அறிந்தே வைத்துள்ளனர். அவ்வப்போது, உலகத் தரம் பற்றியும் சிலர் பேசிக்கொண்டிருப்பது, வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்றதொரு செயலாகும்.

குமரிக் கண்ட அழிவிற்கு இலக்கியங்களையே சான்று களாக இதுவரை அளித்து வந்த நிலைமைகள் மாறி, புவியியல், ஆழ்கடலியல் போன்ற துறைகள் வழிச்சான்றுகளும் வெளி வரத் தொடங்கியுள்ளன. என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி களாகும். தமிழ் அறிஞர்களின் ஆய்வுகள் எதிர்காலத்தில் உலக அளவில் பேசப்படும் நாள் தொலைவில் இல்லை.

1. வெள்ளம்

வெள்ளக்காலத்துக்குப் பிறகு புதிய உலகின் தந்தையாக ஒரு மாந்தன் முன்னிறுத்தப்படுகின்றான். வரலாற்றுக் காலத் துக்கு முற்பட்ட, பிற்பட்ட சமயங்கள் அனைத்தும், வெள்ள நிகழ்வையும், அம்மாந்தனையும் முன்னிலைப் படுத்துகின்றன. மெசபத்தோமிய, பாபிலோனிய, அசீரிய, எபிரேய சமயங் களும், பிற்காலத்திய சமயமான ஆரியச்சமயமும் கூட, அம்மாந்தனைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. புதிய உலகின் சமயம், வரலாறு, மொழிகள், நுண்கலைகள், இசை, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு என விரிவடைந்த அனைத் துத் துறைகளும், அம்மாந்தனின் மரபினரையே சுற்றிச் சுழல் கின்றன.

அவனை நோவா என்று எபிரேயச் சமய இலக்கியமான தோராவும், கிறித்துவத்தின் விவிலியம் சுட்டுகின்றன. நூஹ்நபி என்று திருக்குர்ஆன் கூறுகிறது. சேய் சூத்திரன் என்று சுமேரிய இலக்கியமும், ஊற்று நாவிப் பித்தன் என மெசபத்தோமிய இலக்கியமும், மனு என்று ஆரியச் சமயமும் கூறுகின்றன. ஒவ்வொரு சமயமும் கூறும் பெயர்கள்தான் மாறுபட்டுள்ளன வேயன்றி, நிகழ்வுகள் அனைத்தும் ஏறக்குறைய ஒன்று போலவே உள்ளன. வெள்ளம் பெருக்கெடுத்த போது, கடவுள், மாந்தன் ஒருவனையும் அவனது குடும்பத்தாரையும், உறவினர் களையும் காத்த செய்திகளே, அனைத்துச் சமயங்களிலும் காணப்படுகின்றன. ஏறக்குறைய உலக சமயங்களின் நம்பிக் கைகளாகவும் அவை விளங்கி வருகின்றன

வெள்ளம் பெருக்கெடுத்து உலகை அழித்த செய்தியை, இன்றைய அறிவியல் உறுதிப் படுத்துவதோடு, அந்நிகழ்வுக்குப் பல்வேறு கரணியங்களையும் அறிவியல் சார்ந்த புவியியல், ஆழ்கடலியல், வானியல் போன்ற துறைகளும் விளக்குகின்றன. பனி உருகல், எரிமலை வெடிப்பு, கண்டத்தட்டுகளின் பெயர்ச்சி, ஆழிப்பேரலைத் தாக்கங்கள், பெருமழை எனப் பல்வேறு

கூறுகள் வெள்ளத்திற்கு அடிப்படைகளாக உள்ளன. உலகை அழித்துப் புதிய உலகைத் தோற்றுவித்த இப்பேரழிவுகள், அண்மையில் ஏற்பட்ட சுனாமி என்ற ஆழிப்பேரலையின் அழிவால் உயிர் பெற்றுள்ளது. இதுவரை நம்பாதவர்களும், கட்டுக் கதை என்று கூறியவர்களும் கூட, தங்களது எண்ணங் களை மாற்றிக் கொண்டுள்ளனர். வெள்ளப் பேரழிவு, கி.மு. 18000 - 12000 ஆண்டுகளில், ஏறக்குறைய 6000 ஆண்டுகளாக நிகழ்வுற்றிருக்க வேண்டும் என்பது புவியியலாரின் கருத்து. உலகின் நிலப்பரப்புகளும், நீர்ப்பரப்புகளும் இக்கால அளவில் பெரும் மாறுதல்களுக்குள்ளாயின என்பர். இன்று நாம் அறியும் உலக வரைபடம், கி.மு. 12000 ஆண்டுகளில் அறியப்பட்டதே எனவும், அதற்குமுன்பிருந்த உலக நிலை வேறொன்றாக இருந் தது என்றும் புவியியலார் கூறுகின்றனர். எனவே, சமயங்கள் கூறும் வெள்ள நிகழ்வுகள் உண்மையில் நடந்தவைகளே என்றும், அந்நிகழ்வுகள் கதைகளாகப் பின்னப்பட்டு, தங்கள் தங்கள் சூழலுக்கேற்ப சொல்லப்பட்டுள்ளன எனவும் கருதலாம்.

நோவா அல்லது சமயங்கள் கூறும் அவ்வெள்ள மாந்தர்கள் உண்மையில் வாழ்ந்திருந்தனரா? அவனது நாடு எது? மொழி எது? வெள்ளக் காலத்துக்கு முன்பு அவன் எங்கு குடியிருந் தான்? வெள்ளம் வடிந்தபின் அவன் எந்நாட்டில் கரை சேர்க் கப்பட்டான்? என்ற கேள்விகளுக்கு விடை காண்பது கடினம். பல சமயங்கள் ஒரே நிகழ்வை வெளிப்படுத்துவதால், அந் நிகழ்வு உண்மையே என்றும், அந்நிகழ்வின் தலைவன் ஒருவனே எனவும் அறியலாம். பல்வேறு பெயர்களால் அவன் அழைக் கப்பட்டிருந்தாலும், அம்மாந்தன் ஒருவனே எனக் கருதலாம்.

பல்வேறு சமயங்கள் கூறும் வெள்ள நிகழ்வுக் கதை களுக்கு மூலக்கதை ஒன்று இருந்திருக்க வேண்டும். அம்மூலக் கதையில் சொல்லப்பட்ட அம்மாந்தனின் மரபினர் உலகெங்கும் பரந்து விரிந்து சென்று வாழ்ந்திருந்த போது, அவர்தம் வாழ்க் கைச் சூழலுக்கேற்ப, அம்மூலக்கதை பல்வேறு நிகழ்வுகளால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அம்மாந்தனின் இனம், மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவையே, உலகெங்கும் பரந்து வாழ்ந்திருந்த அவனது மரபினரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும்.

கடவுள் இவ்வுலகைப் படைத்தார். மக்களைப் படைத்துத் தனக்குச் சார்புடன் இருக்கப் பணித்தார். கடவுள் மக்கள்

அளித்த நன்மைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு, கடவுளை மறந்து போயினர். உலகில் தீமைகளும் தீய ஒழுக்கங்களும் தலைவிரித்தாடின. சமூகத்தில் ஒழுக்கம்கெட, பாலியல் தொடர்பான நுகர்வுகள் பெருகின. மக்களின் நாகரிக வளர்ச்சி என்ற பெயரால் சமூகம் புரையோடிப் போயிருந்தது. உலகெங்கும் தீயவர்களே காணப்பட்டனர். அதனால் கடவுளின் சினத்திற்கு ஆட்பட்டனர். அப்போது கடவுளுக்கு அஞ்சி, சான்றோனாக ஒருவன் வாழ்ந்து வந்தான். கடவுள் அவன்முன் தோன்றி, உலகெங்கும் தீமைகள் மலிந்து போனதால், இவ்வுலகை வெள்ளத்தால் அழிக்கப் போவதாகக் கூறினார். நல்லவனான அம்மாந்தனை மட்டும் அவ்வெள்ளத்தினின்றும் காக்கப் போவதாகவும் உறுதியளித்தார். மிகப் பெரிய மரக்கலம் ஒன்றைக் கட்டிக் கொள்ளுமாறு பணித்தார். உலகிலுள்ள உயிரினங்களில் ஒவ்வோர் இணையை அம் மரக்கலத்தில் ஏற்றிக் கொள்ளுமாறும் கட்டளையிட்டார். அம்மாந்தன் அவ்வாறே செய்து கொள்ள, கடவுள் மழையைப் பெய்வித்துப் பெருவெள்ளத்தை உருவாக்கினார். அம்மாந்தனும் அவனது இல்லத்தாரும் வெள்ளத்தினின்றும் காக்கப்பட்டனர். வெள்ளம் வடிந்ததும், மரக்கலத்தைத்திறந்து விடுமாறு கடவுள் பணித்தார். மாந்தனும் விலங்குகளும் வெளியே வந்தனர். அம்மாந்தன் தன்னைக் காத்த கடவுளுக்கு நன்றி செலுத்தினான். மேடை அமைத்துக் காவு கொடுத்தான். புதிய தலை முறையோடு, புதிய உலகம் உருவாயிற்று. தீமைகள் அழிந்தன.

மேற்கண்டவாறு சொல்லப்பட்டுள்ள கதைதான் கருப் பொருளாக உள்ளது. இக்கருவையே பல்வேறு சமய இலக்கியங்களும் தத்தமது சூழல்களுக்கு ஏற்ப எடுத்துரைத்தன. மெசபத்தோமியர் கதையான கில்காமேசு (Gilgamesh), சுமேரியக் கதையான சேய் சூத்திரன் (Sei Sudra), எபிறேயக் கதையான நோவா (Noah), அரபுக் கதையான நூஹ் (Nuh), ஆரியக் கதையான மனு (Manu) ஆகியவை, மேற்கண்ட கருப் பொருளையே விரிவாக்கிக் கதைகளாகப் பின்னிக் கொண்டன. மேற் கண்ட கதைகளில் மெசபத் தோமியக் கதையே காலத்தால் முந்தியதாகக் கருதப்படுகின்றது. இருப்பினும் சுமேரியக்கதையே முதலில் அறியப்பட்டு, அதைத் தழுவியே மெசபத்தோமியக் கதை பின்னப்பட்டுள்ளதாகவும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்விரு கதைகளையும் தழுவியே எபிறேய இலக்கியக் கதையான நோவா கதை சொல்லப்பட்டுள்ளது. ஆரியக் கதை

யான மனுவும் மேற்கண்ட கதைகளைத் தழுவியதே. ஆனாலும் எபிறேய மற்றும் அராபிய மொழிகளில் சொல்லப்பட்ட கதைகளைத் தழுவியதே. ஆனாலும் எபிறேய மற்றும் அராபிய மொழிகளில் சொல்லப்பட்ட கதைகளே, பிற்காலத்தில் பலராலும் அறியப்பட்டன. மெசபத்தோமிய மற்றும் சுமேரியக் கதைகள் பற்றிப் பலரும் அறிந்திருக்கவில்லை. எபிறேய மொழிக்கதையே மூலமானது என்றும் பலர் தவறாகக் கருதியிருந்தனர். அதுவே உலகெங்கும் பலரால் அறியப்பட்டது.

மேற்கண்ட கதைகளுக்கெல்லாம் மூலக்கதை ஒன்று இருந்து, அக்கதை பற்றிய செய்திகள் கிடைக்காமற் போயின. வெள்ளத்தால் உலகம் அழிந்துபட்ட போது, அவ்வெள்ளத்தோடு அம்மூலக்கதையும் அழிந்து போயிற்று. உலகம் தோன்றியது முதல் வெள்ளக் காலம் வரையிலான தொடர்கதை அக்காலத்தில் சொல்லப்பட்டிருக்க வேண்டும். அதன் தொடர்ச்சியாகவே வெள்ளக்கதை அறியப்படுகின்றது. ஆனாலும் வெள்ளக் காலத்துக்கு முந்திய கதையை எபிறேய மொழி இலக்கியமான தோரா கூறுகிறது. அக்கதை, மற்றக் கதைகளைக் காட்டிலும் விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லப்பட்டுள்ளது. எனவே, படைப்புக் காலம் முதல் வெள்ளக் காலம் வரையில் ஒரு பகுதியாகவும், வெள்ளக் காலத்துக்குப் பிறகு தோன்றிய புதிய உலகம் இரண்டாவது பகுதியாகவும் அறியப் படுகின்றன. இந்த இரண்டாவது பகுதியின் தொடர் நிகழ்வுகளே விவிலியம் என்ற நூலில் விளக்கப்பட்டுள்ளன. படைப்புக் காலம் தொட்டு, எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்ட காலம் வரையிலான (கி.பி. 70) செய்திகளை, தோரா என்ற யூத சமய நூல் விளக்கிக் கூறுகிறது. படைக்கப்பட்ட முதல் மாந்தன் ஆதாமும், புதிய உலகின் முதல் மாந்தன் நோவாவும் தோரா மற்றும் விவிலிய நூல்களில் அறியப்படும் சிறப்புக்குரிய மாந்தர்களாவர். நோவா காலத்திலிருந்தே புதிய உலகின் வரலாறு தொடங்குவதாகப் பலரும் கருதுகின்றனர்.

2. நோவா ஒரு வரலாற்று மாந்தனா?

கி.மு. 3500 ஆண்டுகளில் வாழ்ந்திருந்த சுமேரியர் என்ற இனம், மெசபத்தோமியாவின் நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டது. சுமேரியருக்கு முன்பிருந்த மெசபத்தோமியர்கள், நாகரிக வளர்ச்சியின் எந்தவொரு தடயத்தையும் அங்கே பதித்ததாக அறிய இயலவில்லை. மெசபத்தோமிய மக்கள், வெள்ளக் காலத்துக்குப் பிறகே அங்கு குடியேறிய மக்கள் என்றும், அவர்களே அங்கு வேளாண்மை போன்ற வினை தொழில்களை உருவாக்கியவர்கள் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவர்கள் எக்காலத்தில் அங்கு குடியேறினார்கள் என்பதற்கானச் சான்றுகள் அறியப்படவில்லை. கி.மு. 3500 ஆண்டுகளில், சுமேரியர் என்ற கிழக்கித்திய இனம் ஒன்று, பாரசீக வளைகுடா வழியே படையெடுத்துச் சென்று, மெசபத்தோமியாவின் தென்பகுதியைக் கைப்பற்றி, அங்கு ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகள் நிலையான ஆட்சியைக் கொடுத்ததாக வரலாறு கூறுகிறது. இவ்விரு இனத்தாரின் இலக்கியங்களே, உலகின் மூப்புடைய இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. அவர்களுக்கு முன்பு உலகில் வாழ்ந்திருந்த மக்கள் பதிவு செய்திருந்த இலக்கியங்கள் எவையும் இதுவரையிலும் கிடைக்கவில்லை.

மெசபத்தோமியரும், சுமேரியரும் தங்களுக்கென சமய வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தனர் என அறியலாம். ஆனால் அவர்களது ஆளுமை முடிவுற்று புதுப்புது அரசுகள் தோன்றிய பிறகு, மேற்கண்ட இரு மரபினரும் மறக்கப்பட்டனர். அவர்களது சமயத்தை முன்னெடுத்துச் செல்ல எவருமில்லாது போயினர். கி.மு. 2000 ஆண்டுகளில் மெசபத்தோமியாவில் அறியப்படும் எபிரேயர் என்ற யூத இனத்தார், மோசே என்பான் தலைமையில் ஒரு புதிய சமயத்தை தங்களுக்கென உருவாக்கிக் கொண்டனர் (கி.மு. 1250) அச்சமயத்தின் விதி முறைகள், வழிபாட்டு முறைகள் ஆகியவைகளை யூதரின் கடவுளே மோசே

என்பானுக்கு அறிவித்துக் கொடுத்தார் என தோரா கூறுகிறது. யூத சமயம் இன்றும் பலராலும் பின்பற்றப்பட்டு வரும் உயிரோட்டமுள்ள சமயமாக உள்ளது.

யூத மரபில் தோன்றிய இயேசுக் கிறித்து, யூத சமயத்தின் கொள்கைகளில் பல மாற்றங்கள் செய்து, தமது புதிய கொள்கைகளையும் இணைத்துக் கொடுத்தார். இயேசுவின் தொண்டர்கள் பரப்பிய சமயம் கிறித்துவம் எனப்படுகின்றது. கிறித்துவ சமயத்தின் நூலான விவிலியம், மோசே - இயேசு ஆகியோரின் கொள்கைகளை அடக்கிய நூலாகும். யூத சமய நூலான தோரா, கிறித்துவர்களின் வணக்கத்துக்குரிய நூலாக ஏற்கப்பட்டு, அது பழைய ஏற்பாடு (old Testament) என்ற பெயரால், விவிலியத்தின் முதல் பகுதியாக விளங்கி வருகின்றது. இயேசுவுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக, யூதர்கள் விவிலிய நூலை ஏற்பதில்லை.

தோரா = யூதரின் சமய நூல், (இயேசுவின் கொள்கைகளை ஏற்காதது)

விவிலியம் = தோரா + கிறித்துவின் கொள்கைகள் கொண்ட நூல்

குர் ஆன்: தோரா + இயேசுவின் கொள்கைகள் + நபிகள் நாயகத்தின் அருளப்பட்ட கொள்கைகள்.

எனவே, தோரா, விவிலியம், குர் ஆன் ஆகிய மூன்று சமய நூல் களும் ஒன்றுக் கொன்று தொடர்பு கொண்டவை. பல்வேறு செய்திகளை ஒன்றுபோலவே கூறுகின்றன. இன்று உலகில் வாழும் மக்களில் பெரும்பாலோர் மேற்கண்ட மூன்று சமயங் களைப் பின்பற்றி வருவதால் நோவா என்ற வெள்ள மாந்தனைப் பற்றிய செய்திகள், உலகில் பலருக்கும் தெரிந்துள்ளது எனலாம். மெசபத்தோமிய, சுமேரிய, ஆரிய நூல்கள் கூறும் செய்தி களைப் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே உலக மக்களின் நினைவுகளில் சுழலும் மாந்தனாக நோவா கருதப் படுகிறான்.

பல நூற்றாண்டுகள் மேற்கண்ட மூன்று சமயத்தினரும் படைப்புக்காலம் தொடங்கி (ஆதாம் முதல்), வெள்ளக்காலம் (நோவா) வரையிலான காலங்களில் சொல்லப்பட்ட செய்தி களை அப்படியே ஏற்றுக் கொண்டிருந்தனர். ஏனெனில் அச் செய்திகள் கடவுளால் சொல்லப்பட்டதாகவே கருதப்பட்ட தால், அந்நிகழ்வுகளைப் பற்றிப் பேசுவதும், ஆய்வுகள் மேற் கொள்வதும் கூட, கடவுளுக்கு எதிர்ப்பானவைகளாகவே

கருதப்பட்டன. பலநூற்றாண்டுகள் வரையிலும் கூட அச்செய்திகள் ஆய்வுக் களங்களில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எடுத்துக்காட்டாக, எகோவா (Ehovha) என்ற யூதரின் கடவுள் (தன் பெயரை கடவுள் எப்போதும் கூறவேயில்லை)பற்றிய சொல், எம்மொழிச் சொல், அச்சொல்லின் மூலச்சொல் என்ன, வேர்ச்சொல் என்ன என்பது பற்றிய ஆய்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. பத்துக் கட்டளைகளில் முதல் கட்டளையான, கடவுளின் பெயரை வீணாகச் சொல்லிக் கொண்டிருக்காதே என்ற தடையால், எகோவா என்ற சொல்லை எவரும் சொல்லக் கூட அஞ்சினர்.

ஆனால் கடந்த நூற்றாண்டுகளில், ஆய்வுக் கண்ணோட்டம் வளர்ந்த நிலையில், சமய நூல்களும் கொள்கைகளும் கூட அக்கண்ணோட்டத்திற்குத் தப்பவில்லை. சமய நூல்களும், அவை எழுதப்பட்ட காலங்களும், அதன் நிகழ்வுகளும், கொள்கைகளும் இன்று திறனாய்வு செய்யப்படுகின்றன. கிறித்துவ சமயம், படைப்புக் காலம் தொட்டு நோவா காலம் வரையிலான நிகழ்வுகள், தொன்மக்கதைகள் போல் தெரிவதால், விவிலியத்தின் அப்பகுதியை (Prinitive stories) ஏற்பதற்குச் சான்றுகள் இன்மையால், அப்பகுதியை கதையாகவே கருதுகிறது. அதன்பிறகு சொல்லப்பட்டுள்ள நிகழ்வுகளை கிறித்துவர்கள் நம்ப வேண்டுமெனவும், ஏனெனில் அவை இறையருளால் எழுதப்பட்டவை என்றும் கூறுகிறது. இதனை சில சீர்திருத்தக் குழுக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே நோவா கதையில், கிறித்துவ சமயமே முழு ஈடுபாட்டைக் காட்டவில்லை எனலாம். இவையெல்லாம் வளர்ந்து வரும் ஆய்வுக் கண்ணோட்டங்கள் தந்த விளைவுகளே.

தொன்மக்கதைகள் இரண்டு வகைப்படும். ஒன்று பதிவு செய்யப்பட்டவை. மற்றொன்று பதிவு செய்யப்படாமல் தலைமுறைகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட, வாய்மொழிக்கதைகள் எனலாம். பதிவு செய்யப்பட்ட கதைகளில் (தோரா, விவிலியம்) இடைச் செருகலைத் திணிக்க முடியாது. வாய்வழிக் கதைகளில், ஒவ்வொரு தலைமுறையிலும் புதுப்புது செய்திகளும், துணைக் கதைகளும் இணைக்கப்படும். இராமாயணம் மகாபாரதம் போன்ற கதைகள், இவ்வாறான செய்திகளால் இணைக்கப்பட்டவைகளே. மகாபாரதக் கதை, கி.மு. 1000 ஆண்டுகள் தொடங்கி, கி.பி. 1000 ஆண்டுகள் வரையிலும்

பல்வேறு நிகழ்வுகளை இணைத்துக் கொண்ட தொகுப்புக் கதையாகும்.

தொன்மக் கதைகள் அறிவியல் பார்வைக்குக் கட்டுப் படாதவைகள் என்றாலும் கூட, அவைகளிலும் பல வரலாற்றுச் செய்திகள் பொதிந்து கிடப்பதை மறுப்பதற்கில்லை. பாரதப் போரில், இரு படையினருக்கும் உண்டி கொடுத்து உதவிய சேரமன்னன் பெருஞ்சோற்று உதியன் பற்றிய குறிப்பு கிடைப் பதால், கி.மு. 1000 ஆண்டுகளில், சேர மரபு வாழ்ந்திருந்தது பற்றியும், உதியன் என்ற பெயர் சேரருக்கு உரிய பட்டப்பெயர் என்பது பற்றியும், உதி என்பது தமிழ்ச் சொல்லே என்பது பற்றியும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. உதி என்பது சமற்கிருதச் சொல்லே என்ற மயக்கம் தெளிவடைகின்றது.

நோவா பற்றிய சிந்தனை உலகில் பெரும்பான்மையான மக்களுக்கு இருந்ததால் கடந்த நூற்றாண்டுகளில் நோவா பற்றிப் பலரும் ஆய்வுகள் மேற்கொள்ளத் தொடங்கினர். நோவா என்ற சொல், எம்மொழிச் சொல்?, அவன் வாழ்ந் திருந்த நாடு எது? அவன் பேசிய மொழி என்ன? அவன் காலத்துச் சமூகம் எவ்வாறிருந்தது? நோவா உண்மையிலேயே ஒரு வரலாற்று மாந்தனா? என்பனபோன்ற கேள்விகளுக்கு ஆய்வாளர்கள் விடை காண முற்பட்டனர்.

விவிலியம் நோவா பற்றி விளக்கமாகக் கூறுவதால், பெரும்பாலும் மேலை நாட்டுக் கிறித்துவ ஆய்வாளர்களே, இத்தகைய ஆய்வுகளில் ஆர்வம் காட்டினர். கடந்த சில நூற்றாண்டுகளில் பலரும் இத்தகைய ஆய்வுகளில் ஈடுபாடு கொண்டிருந்தனர். நோவா பற்றிப் பல ஆய்வு நூல்கள் (ஆங்கி லத்தில்) இதுவரை வெளிவந்துள்ளன. பல இணைய தளங்கள் திறனாய்வு செய்கின்றன. நோவாவின் நிகழ்வுகனை யொட்டி இருபது ஆண்டுகளுக்கு முன்பு, புதிய பார்வையில் ஒரு திரைப் படம் கூட வெளிவந்தது. நோவா காலத்து நிகழ்வை, தற்காலத் துடன் பொருத்தி அத்திரைப்படம் உருவாக்கப்பட்டிருந்தது. சின்னத்திரைகளில் பல விளக்கக் கூட்டங்கள் காட்டப்பட்டன. அறிஞர்களின் திறனாய்வுகள் ஒளிபரப்பப் பட்டன. ஆனால் இதுவரையிலும் உருப்படியானதொரு ஆய்வை வெளியிட் டுள்ளார்களா என்றால், இல்லையென்றுதான் விடையளிக்க வேண்டியுள்ளது.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட இவ்வுலகம் கி.மு. 4004 ஆம் ஆண்டு படைக்கப்பட்டதாகவும், நோவா என்பான், கி.மு. 3000 ஆண்டில் வாழ்த்திருந்ததாகவும் சிலர் நம்பிக் கொண்டிருந்தனர். உலகமும் கதிரவக் குடும்பமும் பேரண்டமும் தோன்றியது பற்றிய அறிவியல் பார்வை அப்போது தெளிவடையவில்லை. மேலைநாட்டுக் கிறித்துவ ஆய்வாளர்களுக்கு விவிலியமும், இசுராயெல் நாடும், ஐரோப்பாவும் மட்டுமே கண்முன் நின்றன. மொழி, அறிவியல், வானியல் போன்ற துறைகளில் அறியப்படும் புதிய செய்திகள் பற்றிய விளக்கங்கள், விவிலியத்தில் காணப்பட்டாலன்றி, அவற்றை ஏற்க மறுத்தனர். விவிலியச் சிந்தனை அவர்களது ஆழ்மனதில் புதைந்து கிடந்ததால், விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே ஆய்வுகளை மேற் கொண்டனர்.

சென்ற நூற்றாண்டின் இடைக்காலத்தில், விவிலியத்தையும் கூட அறிவியல் நோக்கில் காண்கின்ற புதிய சிந்தனைகள் தோன்றின. 1950 களில், அமெரிக்காவில் இருந்த இயேசு அவையைச் சார்ந்த விவிலிய வல்லுநர்கள், முதன் முறையாக, எபிறேய மொழியிலிருந்து, ஆங்கிலத்துக்கு விவிலியத்தை மொழி மாற்றம் செய்தனர். அக்காலத்திற்கு முன்பு அறியப்பட்டிருந்த, நடைமுறையிலிருந்த ஆங்கில விவிலியம், கிரேக்கம் - இலத்தீன் மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவைகளாகும். அவை எபிறேய மூலத்தின் உண்மையான, சரியான பொருளை விளக்கிக் கூறவில்லை என்ற குறைபாடு இருந்தது. தமிழில் அறியப்பட்டிருந்த விவிலியம் கூட, இலத்தீன் - ஆங்கில மொழிகளின் மொழி பெயர்ப்பு நூலே எனலாம். இந் நூல்களின் மொழிபெயர்ப்பு எபிறேய மூலத்திற்கு முரண்பட்டதாகவும் கூட இருந்தன. கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் தமிழில் விவிலியம் மொழி மாற்றம் செய்யப்பட்டது. சமஸ்கிருதம் கலந்த மணிப்பிரவாள நடையில் முதல் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியாயிற்று. இன்றும் கூட சிலர், இந்த மணிப்பிரவாள மொழிபெயர்ப்பையே பயன்படுத்தி வருகின்றனர்.

எபிறேய மூலத்திலிருந்து ஆங்கிலத்துக்கு மொழி மாற்றம் செய்யப்பட்ட விவிலிய நூல், 1962 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அந்நூலில் காணப்பட்ட மொழிபெயர்ப்பில், எபிறேய மொழியின் மூலச் சொற்களும், அச்சொற்களுக்கான பொருளும்,

ஒவ்வொரு பக்கத்திலும் அடிக் குறிப்புகளாக வெளியிடப் பட்டன. மேலும் விவிலியத்தில் காணப்பட்ட பல்லாயிரம் சொற்களுக்கான எபிரேய மூலத்தின் பொருளை விளக்கும் விவிலிய அகராதியும் வெளியிடப்பட்டது. இவ்வாறு விவிலியம் படிப்போர்க்குச் சரியான செய்திகளை அளிக்கும் வகையில் மேற்கண்ட இரு நூல்களும் (The New American Bible, Dictionary of the Bible) வெளியிடப்பட்டன. இந்நூல்களில் அளிக்கப்பட் டிருந்த விளக்கங்கள், கடந்த காலத்தைவிட, அறிவியல் பார்வையில் இருந்தன. சில நிகழ்வுகள் பற்றிய வரலாற்றுப் பின்னணிகளையும் இணைத்திருந்தனர். சில எபிரேயச் சொற்களுக்கான மூலச்சொல் எதுவெனத் தெரியவில்லை என்ற தங்கள் இயலாமையையும் குறிப்பிட்டிருந்தனர். இதனால், இச்சொல் பற்றி அறிந்தவர்களும், ஆய்வு மேற் கொள்பவர் களும் புதியவழி காட்டுதலைப் பெற்றனர். இப்புதிய விளக்கங் களில் பல சரியான நோக்கில் அணுகப்படவில்லை என்ற குறை இருந்த போதிலும், கடந்த காலத்தை விட நல்ல முன்னேற் றத்தைக் கொடுத்தன என்பதில் ஐயமில்லை. இப்புதிய மொழி பெயர்ப்பு விவிலியத்தில், ஆதி ஆகமம் என்று சொல்லப்படும் படைப்பதிகாரம் பற்றிய விளக்கங்கள் கூட சிறப்பாகவே உள்ளன. கி.மு. 4000 ஆண்டுகளில் உலகம் படைக்கப்பட்டது போன்ற செய்திகள் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டன. ஆதாம் காலம் முதல் நோவா காலம் வரையிலும், நோவா காலம் முதல் அபிரகாம் காலம் வரையிலுமான விவிலியச் செய்திகளுக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தன. இவ்விளக்க்ங்கள் முழுமையான வைகள் அல்லவென்பதை மொழி பெயர்ப்பாளர்களே குறிப்பிட் டுள்ளனர். சரியான விளக்கங்களை அளிக்கச் சான்றுகள் கிடைக்கவில்லையென்பதையும் மொழிபெயர்ப்பாளர்கள் ஏற்றுக் கொண்டனர். அதனால் படைப்பதிகாரம் என்ற ஆதி ஆகமத்தில் ஆதாம் முதல் நோவா வரையிலான கால நிகழ்வு களை தொன்மக்கதைகள் (Primitive stories) என அறிவித்து விட்டனர். இவை ஆதி ஆகம நூலில் ஒன்று முதல் பதினோரு தலைப்புகளில் (chapters) அடங்கும்.

விவிலிய நூலை ஒட்டு மொத்தமாக ஆய்வு செய்வது நமது நோக்கமன்று. தொன்மக்கதைகள் என்று ஒதுக்கப்பட்ட பகுதிகளில்தான் ஆதாம், நோவா போன்றோரின் நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. எனவே, நோவா கதையென்பது வரலாற் றுக் கண்ணோட்டத்தில் நிறுவ இயலாத ஒன்று என்பதை

விவிலிய ஆய்வாளர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறு அப்பகுதிகளைத் தொன்மக் கதைகளாக அறிவித்ததற்கான அடிப்படையான காரணங்கள் யாதெனில், அந்நிகழ்வுகள் பற்றிய தெளிவான சிந்தனை, விவிலிய ஆய்வாளர்களிடையே காணப்படவில்லை என்பதுதான். விவிலிய ஆய்வாளர்களும் மேற்கித்திய சிந்தனைகளில் ஈடுபாடும் நாட்டமும் கொண்ட வர்களே என்பதால், ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்கு வெளியே வர அவர்களால் இயலவில்லை.

நோவா, ஒரு வரலாற்று மாந்தனா அல்லது கற்பனைப் படைப்பா என்ற கேள்விக்கு இதுவரை எவரும் விடை கூற வில்லை. நோவா தனியொரு மாந்தனா அல்லது ஒரு இனத்தின் உருவகமா என்பதற்கும் விடைகிடைக்கவில்லை. ஆனாலும் நோவா என்ற மாந்தனைச் சுற்றிப் பல்வேறு நிகழ்வுகள், செய் திகள், விளக்கங்கள், ஆய்வுகள் வெளிப்பட்டுள்ளன. உலகின் முதன் மொழி எதுவென்பதை ஆய்வு செய்ய முற்படும் போது நோவா என்பவனை விலக்கி விட்டு ஆய்வுகள் மேற்கொள்ள இயலவில்லை. அவ்வாறே உலகின் நாகரிகம், பண்பாடு, கல்வி, நுண்கலை, வேளாண்மை, தொழில்நுட்பம் போன்ற பழங் காலத்திய துறைகளை ஆய்வு செய்வோருக்கு, நோவா என்ற மாந்தனே நடு நாயகமாக வந்து நிற்கிறான்.

விலக்கவும் இயலாத, விளக்கவும் முடியாத மையமாக நோவா திகழ்வதால், அச்சிறப்புக்குரிய மாந்தனைப் பற்றிய ஆய்வுகள் தொடந்து கொண்டுதான் உள்ளன. நோவா என்ற நாயகன், விவிலிய நூலால் மட்டும் அறியப்படவில்லை. விவி லியம் என்றாலே முகத்தைச் சுளிக்கும் ஆரிய நண்பர்கள் போற்றும் மனு நூலே நோவா பற்றிய நிகழ்வுகளைக் கூறுகிறது. ஆரியம் மனு என்று கூறுகிறது. பெயரளவில்தான் வேறுபாடே தவிர நிகழ்வுகள் அனைத்தும் ஒன்றுபோலவே காணப்படு கின்றன.

விவிலியத்தின் மூல நூலான தோரா என்ற யூதச் சமய நூல், எக்காலத்தில் எழுதப்பட்டது என்பதற்குத் தெளிவான சான் றுகள் இல்லை. தொன்மக் கதைகள் என்றவாறு அறியப்படும் பகுதிகளை விடுத்த விவிலியம், அபிறகாம் என்பானின் வருகை யை முன்வைத்தே தொடங்குகிறது. அபிறகாமின் காலம் கி.மு. 1950 என்றவாறு விவிலிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அபிற காம் எகிப்து நாட்டில் சிலகாலம் வாழ்ந்திருந்தான் என்பதால்

எகிப்திய வரலாற்றின் அடிப்படையில், அபிரகாமின் காலம் அறியப்பட்டுள்ளது. அவனுடைய மரபினர் பற்றிய செய்திகளும் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டுள்ளதால், சிக்கல்கள் இன்றி ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

யூத இனத்தின் மீட்புநாயகனான மோசே என்பவன் காலம், கி.மு. 1300 - 1200 என்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. மூன்றாவது இராம்சேஸ் (Ramses III) என்பவன் காலத்தோடு தொடர்புடையதாலும், எகிப்தின் பெருமைக்குரிய மன்னர்களில் ஒருவனாக இராம்சேஸ் கருதப்படுவதாலும், மோசே தனது இளமையை இராம்சேசுடன் இணைந்து கழித்தவன் என்பதாலும், மோசேயின் காலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. அபிரகாம் முதல் மோசே வரையிலான (650 - 700 ஆண்டுகள்) வரலாற்றை யார் பதிவு செய்தது என்பதற்கானச் சான்றுகளும் இல்லை. மோசே தலைமையில் யூத இனம் எகிப்தை விட்டு வெளியேறியது, கி.மு. 1300 - 1250 கால அளவுகளில் நிகழ்வுற்றது என்பர். இதன் தொடர்நிகழ்வுகளாக, யூத சமயத்தின் கடவுள், மோசேவுக்கு அளித்த செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாடு என்ற விவிலியத்தின் முதற்பகுதியின் முதுகெலும்பு போன்ற செய்திகள், மோசே காலத்தில் நிகழ்வுற்றவைகளே.

எனவே, மோசே என்பானே, முதல் விவிலியப் பதிவுகளைச் செய்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். அபிரகாம் முதல், தனது இறுதி நாள் வரையிலான செய்திகளை மோசே எழுதியிருக்கலாம் என்ற ஊகத்தில் உண்மையுமிருக்கலாம். மோசேயைத் தொடர்ந்து, ஒவ்வொரு நூற்றாண்டு நிகழ்வுகளும், அவ்வப்போது வாழ்ந்திருந்த அறிஞர்களால் தொகுக்கப்பட்டன. விவிலியத்தின் படைப்பதிகாரம் கூறும் செய்திகளையும், நோவா வரையிலான நிகழ்வுகளையும் கூட, மோசே தொகுத்திருக்க வேண்டும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கி.மு. 1000 - 800 ஆண்டுகளில் (தாவீது, சாலமன் காலம்) மீண்டும் ஒரு தொகுப்பு பதிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இக்காலத்தில் கூட, தொன்மக்கதைத் தொகுப்பு இணைக்கப்பட்டிருக்கலாம். தொன்மக்கதைகளைத் தொகுத்தவர் யாராயிருப்பினும், அவருக்குச் சொல்லப்பட்ட முன் தலைமுறையினரின் செய்திகளையே தொகுத்தார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. தொகுத்த ஆசிரியருக்கு அந்நிகழ்வுகள் பற்றி

யோ, அந்நிகழ்வுகள் இடம் பெற்ற நாடுகள் பற்றியோ எந்தச் செய்திகளும் தெரிந்திருக்கவாய்ப்பில்லை. வாய்மரபாகச் சொல் லப்பட்ட (oral traditions) செய்திகளே பதிவு செய்யப்பட்டன எனலாம்.

இந்தத் தொன்மக் கதைகளை, யூத மக்கள் எவ்வாறு அறிந்திருந்தனர். இத்தொன்மக்கதைகளின் முன்னோர்கள் யூத மக்களா என அறிய முற்படும் போது, யூத மக்களுக்கும் இக் கதைகளுக்கும் எவ்வகையான தொடர்புகளும் இருந்திருக்க வில்லை என்பதை அறிய முடிகின்றது. யூத மக்களின் முன்னோர்கள் வாழ்ந்திருந்த பாபிலோன் பகுதியில் அறியப் பட்டிருந்த கதைகளையே, யூதர்களும் அறிந்து கொண்டனர் எனலாம். உண்மையில் அக்கதைகளின் மூலங்கள் மெசபத் தோமிய மற்றும் சுமேரிய இலக்கியங்களில் காணப்படுகின்றன. மெசபத்தோமியர்கள் உள்நாட்டு மக்கள் என்றும், சுமேரியர் வெளி நாட்டினர் என்றும் வரலாறு கூறுவதால், உண்மையான மூலக்கதைக்கு உரியவர்கள் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. உண்மையில் சுமேரியக் கதையையே, யூத மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்ற கருத்துக்குச் சார்பான பிற செய்திகள் உள்ளன. சுமேரிய மொழிக்கும் எபிறேய மொழிக்கும் உள்ள நெருக்கமான உறவுகளை ஆய்வாளர்கள் வெளிப்படுத்துவ தோடு, யூதர்கள் சுமேரிய இனத்தின் ஒரு குழுவினரே என்ற கருதுகோளும் உள்ளதை நோக்க வேண்டும். எது எவ்வாறு இருப்பினும், விவிலியம் கூறும் தொன்மக்கதைகள் ஏற்கனவே அறியப்பட்டிருந்த ஒரு நாகரிக இனத்தின் படைப்பே என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. தங்களுக்குத் தொடர்பில்லாத ஒரு கதைத் தொகுதியை, யூதமக்கள் தங்கள் சமய நூலில் இணைத் திருக்கவும் வாய்ப்பில்லையாதலால், அத்தொடர்புகள் யாவை எனக் கண்டறிதல் இக்கதைகள் இணைக்கப்பட்டதற்கான காரணங்களை விளக்கும் எனலாம். யூத இனம் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட இனம் என்று அவர்களே சொல்லிக் கொள்வதுண்டு. அதனால் படைப்புக் காலம் தொட்டு, இசுரா யெல் என்ற பெயர் ஏற்றுக் கொள்ளப்படும் காலம் வரையி லான மரபுத் தொடர்பைக் காட்டுதவற்காக தொன்மக்கதைகள் பகுதியை இணைத்திருக்க வேண்டும்.

தோராவும் விவிலியமும் கூறும் அத்தொன்மக் கதைகள் இரண்டு பகுதிகளாக உள்ளன. உலகப் படைப்பு முதல் நோவா

வரையிலான பகுதி மற்றும் நோவாவுக்குப்பிறகு அபிறகாம் வரையிலான பகுதி என அவை அறியப்படும். முற்பகுதி பழைய உலகம் என்றும் பிற்பகுதி புதிய உலகமாகவும் கருதப்படும். எனினும் இவ்விரு பகுதிகளுக்குமான தொடர்புகள் தலை முறை வாரியாக விளக்கப்பட்டுள்ளன.

படைப்புக் கால மூலக் கதை

மெசபத்தோமியக்கதை – சுமேரியக்கதை – யூதரின் கதை – அராபியரின் கதை – ஆரியரின் கதை

மேற்கண்ட சமய இலக்கியங்கள் கூறும் படைப்புக் காலம் பற்றிய கதைகள் அனைத்தும் ஒன்று போலவே காணப் படுவதால், அவைகள் ஏதோவொரு மூலக்கதையினின்றும் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அம்மூலக் கதையைக் கூறி வந்தவர்கள் வெள்ளக் காலத்தில் மாண்டு போனதால், தப்பிப் பிழைத்தவர்கள் பல நாடுகளிலும் குடியேறினர். அவ்வாறு குடியேறிய மக்கள் தங்களது முன்னோர் கூறிவந்த படைப்புக் கதையை மீண்டும் தங்கள் இலக்கியங்களில் பதிவு செய்தனர். அவர்கள் வாழ்ந்திருந்த புதிய சூழல்களுக் கேற்றவாறு அவை மெருகூட்டப் பட்டன.

உலகை அழித்த வெள்ளம் உண்மையில் ஏற்பட்டதா? உலகின் ஒரு பகுதியை மட்டும் அழித்ததா அல்லது பெரும் பகுதிகளைக் காவு கொண்டதா? எக்காலத்தில் அந்நிகழ்வு நடைபெற்றது? மேற்கண்ட கேள்விகளுக்கு இன்றைய ஆய்வு களும், அறிவியல் விளக்கங்களும் என்ன விடை கூறுகின்றன? நோவா என்ற மாந்தன் வாழ்ந்திருந்ததற்கான அறிவியல் சான்று கள் எங்காவது அறியப்படுகின்றனவா? தற்கால ஆய்வுகள் ஓரளவிற்கு அவைகளுக்கான விடைகளைத் தருகின்றன. என்றாலும் நோவா பற்றிய சான்றுகளைப் பெற ஆய்வாளர்கள் தற்போதும் முயற்சி செய்து வருகின்றனர்..மேலை நாடுகளில் நோவா பற்றிய ஏராளமான நூல்கள் வெளிவந்துவிட்டன. அவையெல்லாம் விவிலியச் செய்திகளைச் சுற்றியே வட்ட மிட்டு வருகின்றன. அண்மையில் கூட ஜோஷ் பெர்ஸ்மின் (Josh Bersmin) என்ற அமெரிக்க நாட்டு ஆய்வாளர் நோவா பற்றிய செய்திகளைத் திரட்ட பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்தார். அவருடைய முயற்சிகளைப் பற்றிய செய்திகள் பல்வேறு ஊடகங்களில் வெளிவந்தன.

3. மெசபத் தோமியக் கதை

தொன்மைக்கால மெசபத்தோமியா என்பது, இன்றைய துருக்கியின் தென் பகுதியும், ஈராக் நாடும் இணைந்த பகுதி களாகக் கொள்ளலாம். மெசபத்தோமியாவின் தென் பகுதியே பாபிலோன் எனப்படும். மெசபத்தோமியாவின் தெற்கே அறியப் பட்டிருந்த பாரசீக வளைகுடா, அக்காலத்தில் வடபகுதியில் நீண்டிருந்து, பிற்காலத்தில் நிலப்பகுதியாக மாறிப் போயிற் றென்பர். கி.மு. 10000 ஆண்டுகளில் மெசபத்தோமியாவில் வேளாண்மைத் தொழில் நடைபெற்றதற்கானச் சான்றுகள் உள்ளன. இந்நாட்டின் வடபகுதியில்தான் மக்கள் நெருக்கம் தொடக்கத்தில் அறியப்பட்டு, பிற்காலத்தில் தென்பகுதிகளும் மக்களால் நிறைந்தன. யூப்ரதீஸ் - தைகிரீஸ் ஆற்றங்கரைப் பகுதிகள் வேளாண் தொழிலுக்கு ஏற்றவைகளாக இருந்தன.

கி.மு. 4000 ஆண்டுகளில், மெசபத்தோமியாவின் தென் பகுதியாகிய பாபிலோன் மிக உயர்ந்த நாகரிகத்தின் தொட்டி லாக விளங்கியது. நாகரிகம் நகரம் சார்ந்தே காணப்பட்டது. முறையான அரசுகளும், சட்டங்களும் நடைமுறையில் இருந்தன. சாலைகள், துறைமுக நகரங்கள் வேளாண் கால்வாய்கள், கல்வி, இலக்கியம் என்றவாறு பாபிலோன் சிறப்புற்றிருந்தது.[1] அண்டை நாடுகளுடன் தொடர்புகள் வலுப்பெற்றிருந்தன. பாபிலோனில் மிகச் சிறந்த நாகரிகத்தை உருவாக்கியவர்கள் சுமேரியர்கள் என அறியப்படுகின்றனர். இவர்கள் வெளிநாட் டினர் என்றும், பாரசீக வளைகுடா வழியே படையெடுத்து வந்து, பாபிலோனைக் கைப்பற்றிக் கொண்டனர் என்றும் வரலாறு கூறுகிறது. இவர்களுடைய முன்னோரின் நாடு, மொழி, இனம் பற்றிய செய்திகள் இதுவரையிலும் தெளிவுபடுத்தப்பட வில்லை. இருப்பினும் உலகின் முதல் நகரிய நாகரிகத்தை உருவாக்கியவர்கள் சுமேரியர்களே என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நிலவை அடிப்படையாகக் கொண்ட நாள் காட்டி, நீர்க் கடிகாரம், நிழல் கடிகாரம், போர்ப்படை, குயவனின் சக்கரம், தூண்களைக் கொண்ட கட்டிடம், பலகடவுளர்களைக் கொண்ட சமயம், எழுத்துமுறை, இலக்கியம், மரக்கலம், கனிமப் பயன்பாடு என்றவாறு பல்வேறு செய்திகள் அறியப் பட்டுள்ளன. சுமேரியர் கையாண்ட எழுத்துமுறையே முதன் முதலில் அறியப்பட்ட தென்பர். அவ்வெழுத்துமுறையை தற்கால ஆய்வாளர்கள் ஆப்பு எழுத்து முறை என்பர்.[2]

வெள்ளம் பற்றிய செய்திகள் பாபிலோனை அகழ்வாய்வு செய்தபோது ஏராளமாகக் கிடைத்தன. அசீரிய மன்னன் அசூர் பனிபால் என்பவனுடைய நூல்நிலையம் ஒன்றும் அண்மையில் கண்டறியப்பட்டது. அங்குதான் மெசபத்தோமிய வெள்ளக்கதை பற்றிய குறிப்புகள் கிடைத்தன. இக்குறிப்புகள், கி.மு. 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டவையென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவையன்றி, வேறு சில குறிப்புகளும் கண்டெ டுக்கப்பட்டுள்ளன இவைகளில் சிறப்புக்குரியதாகக் கருதப் படுவது "கில்காமேஷ் (Gilgamesh" என்ற பாட்டிலக்கியமாகும்.[3]

கில்காமேஷ் என்ற சொல் எம்மொழிச் சொல், இச்சொல் லின் மூலம் யாது, இச்சொல்லின் பொருள் என்ன என்பதுபற்றி இதுவரை எவரும் விளக்கிக் கூறவில்லை. மேலும் இச்சொல் சரியாகப் படிக்கப்பட்டதா (deciphered) என்பதும் ஐயத்திற்குரி யதே. இச்சொல்லை வலமிருந்து இடமாகப் படித்துள்ளனர். அக்காலத்தில் இடமிருந்து வலமாகப் படிக்கப்படவேண்டிய சொற்களும் வாக்கியங்களும் இருந்துள்ளன. கில்காமேஷ் என்ற சொல் எவ்வாறு படிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இதே சொல், சிந்துவெளித் தமிழிலும் காணப்படுவதாக ஈராஸ் பாதிரியார் கூறுகிறார். இச்சொல்லுக்கான பொருளும் விளக் கப்படவில்லை.

கில் காமேஷ் என்பவன் சூரிபாக் (Shuripak) என்ற ஊரின் மன்னனாவான். இவனுக்கு சேய் சூத்திரன் (Sei Sudra) என்ற பெயரும் உண்டு. இவன் இறவா வரம்பெற்றிருந்தான். தில்மன் (Dilmun) என்ற நாட்டில் வாழ்ந்துவந்தான். இது சூரியன் தோன்றும் கிழக்கு நாடாகும். இவன் இரண்டு பங்கு கடவுள் தன்மையும் ஒரு பங்கு மாந்தத் தன்மையும் கொண்டிருந்தான். இவனைப்பற்றிய மெசபத்தோமியக் காப்பியம், அவனது பெயராலேயே கில்காமேஷ் என்று வழங்கப்படுகின்றது.[4] கில்

காமேஷ் தனது குடிமக்களைத் துன்புறுத்தி வந்தான். இதனால் வெறுப்படைந்த மக்கள் ஆருரு (Aruru) என்ற கடவுளிடம் முறையிட்டனர். அக்கடவுள் எங்கிடு (Enkidu) என்பவனைப் படைத்து, கொடிய விலங்குகளுடன் காட்டில் வாழவைத்தான். தன்னைக் கொல்வதற்காக எங்கிடு என்பான் காட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று கேள்விப்பட்ட கில் காமேஷ், அவனை மயக்கித் தன்வழிப்படுத்த ஒரு பரத்தையைக் காட்டுக்கு அனுப்புகிறான்.[5]

பரத்தையின் காதலில் திளைத்த எங்கிடு, காட்டை மறந்து அவளுடன் ஊருக் (uruk) என்ற நகரில் குடியேறினான். பரத்தை தனது பணியை வெற்றிகரமாக முடித்ததை அறிந்த கில்காமேஷ், எங்கிடுவிடம் நட்பை ஏற்படுத்திக் கொண்டான். உரிய நேரத்தில் கில்காமேஷ், எங்கிடுவைப் பழிவாங்கத் துணிந் தான் (இந்தப் பகுதியில் பல சொற்றொடர்கள் களிமண் தட்டில் உடைந்து போயுள்ளதால், கதையின் ஓட்டத்தை முழுமையாக அறிய இயலவில்லை) ஆனால் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்ட கில்காமேஷ், எங்கிடுவிடம் நட்பை வலுப் படுத்திக் கொண்டான்.[5]

செடார் (Cedar) என்ற மலைத் தொடரில் உவாவா (Huvava) என்ற கொடிய பேய் வாழ்ந்திருந்தது. அப்பேயை எங்கிடுவின் துணையுடன் கொல்ல கில்காமேஷ் முடிவு செய்தான். இரு வரும் காட்டை நோக்கிச் செல்கின்றனர். அன்று இரவு காட் டில் உறங்கும் போது, கில்காமேஷ் அப்பேயைக் கொல்வதாக நல்ல கனவு ஒன்றைக் காண்கிறான். ஆனால் எங்கிடுவுக்கு வந்த வனவில் பேயைக் கொல்வது தொடர்பான அனைத்து செய் திகளும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டன. (இவ்விடத்தில் களி மண் தட்டிலுள்ள சில பகுதிகள் அழிந்து போயுள்ளன. உவாவா என்ற பேயை இருவரும் கொல்லும் பகுதி மட்டுமே தெளிவாக உள்ளது) இருவரும் பேயைக் கொல்கின்றனர். பணி முடிந்து நாட்டுக்குத் திரும்புகின்றனர்.[7]

கில்காமேஷை இசுதார் (Ishtar) என்ற பெண் காதலிக்கி றாள். இசுதார் பற்றி கில்காமேஷ் நன்கு அறிவான். அவள் ஏற்கனவே பல கட்டுடல் கொண்ட இளைஞர்களைத் தனது வலையில் சிக்கவைத்து, அவர்களிடம் பாலியல் நுகர்வைப் பெற்றபின் அவர்களை ஒதுக்கி விடுவாள். இசுதார் கொடிய காமத்தைக் கொண்டிருப்பவள் என்பதால் கில்காமேஷ்

அவனை ஏற்கவில்லை. இதனால் வெறுப்புற்ற இசுதார் தனது தந்தையான அனு (Anu) என்ற கடவுளிடம் சென்று முறையிட்டாள். கில்காமேஷுக்கு எங்கிடு துணையாக இருப்பதால், இருவரையுமே கொன்று போட, இசுதார் வேண்டினாள். அனு கடவுள், தனது வானத்துக் காளையை அனுப்பி, அவ்விருவரையும் கொல்லுமாறு பணித்தான். ஒரு பெரும் படையுடன் கில்காமேஷும் எங்கிடுவும் அக்காளையை எதிர்த்தனர். வானத்துக்காளை, பல போர் மறவர்களைக் கொன்று குவித்தது. இறுதியாக கில்காமேஷும் எங்கிடுவும் இணைந்து காளையைக் கொன்று போட்டனர்.[8]

இதனால் கடவுளர்கள் அச்சம் கொண்டனர். இவ்விருவரும் இணைந்திருப்பதால், இறுதியில் தங்களையும் எதிர்ப்பார்கள் என்று கருதிய கடவுளர், எங்கிடுவை முதலில் இறந்து போகுமாறு ஆணையிட்டனர். எங்கிடு தனக்கு நேரப்போகும் சாவைப்பற்றி முழுமையாகத் தனது கனவின் வழியே தெரிந்து கொண்டான். (ஒருவன் இறந்து போனால் அவனது உயிர் மறு உலகம் சென்று எவ்வாறு வாழும் என்ற மெசபத் தோமியரின் நம்பிக்கை, எங்கிடுவின் கனவாகச் சொல்லப்பட்டுள்ளது) எங்கிடு இறந்துபட்டான். எங்கிடு வைக் காட்டிலிருந்து நாட்டுக்குக் கொண்டு வந்த பரத்தை, கில்காமேஷ் ஆகிய இருவருக்கும் இடுக்கண்களைத் தர கடவுளர் எண்ணினர். இறுதியில் கில்காமேனஷயும் சாகடிக்க விரும்பினர்.[9]

தனது நண்பன் இறந்ததற்காக, கில்காமேஷ் இரங்கினான். தன்னையும் கடவுளர்கள் கொன்றுவிடுவார்களோ என அச்சப்பட்ட கில்காமேஷ், சாவினின்றும் தப்பிக்க வழிகள் உண்டா என ஆராய்ந்தான். அப்போது வெள்ளத்தினின்றும் உலகில் உயிர் பிழைத்த உட்நா பிஷ்டிம் (Ut - Napishtim) என்பவனைச் சந்தித்தால் உயிர்பிழைக்க வழியைக் கூறுவான் என அறிந்தான். உட்நாவைச் சந்திக்கப் பயணம் மேற் கொண்டான். ஒரு மலையைக் கடந்தபோது, அம்மலைக்குரிய வனான தேள் மாந்தன் (Scorpion man) அவனைத் தடுத்து நிறுத்தி, உட்நாவை சந்திக்கச் செல்லும் பயணம் மிகக் கொடியதாக இருக்குமெனக் கூறி, திரும்பிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டான்.[10]

கடலை அடைந்து, அலையின் மனைவி சிதூரி என்பவளைச் சந்தித்தான். தன் கணவனான அலை (waves) சினம் கொண்டவன்

என்றும், அலையில் மூழ்கி இறந்து போவாய் என்றும் எச்சரித்தாள். அப்போது ஒரு மீகாமன் எதிரே வந்தான். அவன் பெயர் ஊர்சன் - அபி (Urshan - Abi) என்பதாகும். அம்மீகாமன் கடலைக் கடந்து செல்லவேண்டிய உத்தியைத் தெரிவித்தான். அவ்வாறே சென்ற கில்காமேஷ், இறுதியாக உட்நாவைச் சந்தித்தான். உட்நா, வெள்ளம் எவ்வாறு தோற்றுவிக்கப் பட்டது, மரக்கலம் எவ்வாறு கட்டப் பெற்றது, கடவுள் தன்னை எவ்வாறு காப்பாற்றினார் என்பதை கில்காமேஷுக்கு விளக்கிக் கூறினான். (இந்தப் பகுதியில் தான் வெள்ளப் பாழ் பற்றிய செய்திகளை உட்நா விளக்குவதாக கதை உள்ளது) உட்நா உயிர்கள் தோன்றியது பற்றிய கமுக்கங்களையெல்லாம் கில்காமேஷூக்கு அறிவித்தான். உயிர் வாழ்வதற்கான செடி யொன்றை உட்நா, கில்காமேஷுக்கு அளித்தான். அச்செடியைப் பெற்றுக் கொண்ட கில்காமேஷ், அதனை வைத்து விட்டுக் குளிக்கச் சென்றான். அவ்வேளையில் ஒரு பாம்பு அச்செடியைத் திருடிக்கொண்டு போய்விட்டது.[11]

இப்படியாக, கில்காமேஷ் கதை தொடர்கிறது. இக்கதை பன்னிரெண்டு களிமண் தட்டுகளில் எழுதப்பட்டுள்ளது. உடைந்து போன அல்லது அழிந்துபோன பகுதிகளை விடுத்து ஒருவாறு கதை தொகுக்கப்பட்டுள்ளது. இப்போது நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய பகுதி உட்நா, கில்காமேஷுக்கு அறிவித்த வெள்ளக் கதையே என்பதால், அதுபற்றிய விளக்கத்தை அறிய முற்படலாம்.

கில் காமேஷ் கதை மெசபத்தோமியாவில் பலரிடம் (களி மண் தட்டு) நூல்களாக இருந்துள்ளன. அவற்றுள் அசீரிய மன்னன் அசூர்பனிபால் (கி.மு. 668 - 626) நூல் நிலையத்திலிருந்து கிடைத்தவைகளும், பாபிலோனின் முதல் மரபாட்சி (கி.மு. 1830 - 1580)யின் பகுதிவரை நூல்களும் சிறப்புக்குரியவை. மேற்கண்ட நூல்கள் அசீரிய மொழியில் எழுதப்பட்டவை களாகும். அவை அக்காடிய மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்டன. இத்திய (Hittite) மொழியிலும் இந்நூல் மாற்றம் செய்யப்பட்டது. அனதோலியாவின் போகோஸ் கோய் (Bogoskoy) நகரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டறியப்பட்டது. கில்காமேஷ் நூலின் தொகுப்பை ஆய்வாளர் எஸ். என். கிராமர் (S.N. Kramer), பகுதிவாரியாகத் தலைப்புகள் இட்டுத் தொகுத்தார்.[12]

கில்காமேஷ் கதை, கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மேலும் முற்பட்ட தாகக் கூட இருக்கலாம்.[13] இக்கதை ஒருவீரனின் செயல்களை விளக்குவதாக உள்ளது. இடைக்காலத்தில் அறியப்பட்ட சிந்துபாத் என்ற கடற்பயணக்காரன் கதைபோன்றே கட்டுக் கடங்காத கற்பனையுடன் காணப்படுகின்றது. இக்கதையின் துணைக் கதையாக வெள்ளக்கதை சொல்லப்படுவது, மூலக் கதைக்கே தொடர்பில்லாமல் இருப்பதை அறியலாம். இக் கதையின் நாயகன் கில்காமேஷ் எந்த நாட்டைச் சேர்ந்தவன் என்ற குறிப்பு தெளிவாக இல்லையென்றாலும், ஊருக் (Uruk) போன்ற ஊர்களின் பெயர்கள் அக்கதையில் காணப்படுவ தால், அக்கதை பாபிலோனில் நிகழ்வுற்றதாகவே கருதப்படு கின்றது. இக்கதைபற்றிய விளக்கங்கள் உள்ளே சொல்லப் படும்.

4. சுமேரியக் கதை

மெசபத்தோமியாவின் தென்பகுதியான பாபிலோனில் குடியேறியவர்களாக, சுமேரியர் கருதப் படுகின்றனர். இவர்கள் பாரசீக வளைகுடா வழியே வந்து, பாபிலோனை வென்று, அங்கு நிலையான ஆட்சியை ஏற்படுத்தியவர்கள். சுமேரியர் என்ற இனம் உலகில் எந்த இனத்தோடு தொடர்புடையது, அவர்கள் பேசிய மொழியாது, என்ன கரணியம் பற்றி பாபிலோன் மீது படையெடுத்தனர் என்றவாறு கேட்கப்படும் கேள்விகளுக்கு இது வரையிலும் ஆய்வாளர்களால் தெளிவான விடைகளைத் தர இயலவில்லை. இருப்பினும் கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே, பாபிலோனில் சுமேரியர் வாழ்ந்திருந்து, உலகில் தனித்தன்மையுடைய நாகரிகத்தை உருவாக்கினார்கள் என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.[14]

கி.பி. 1915 ஆம் ஆண்டுத் தொடக்கம், பாபிலோன் பகுதிகளில் பல அகழ்வாய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. ஊருக் (Uruk), இலாகாஷ் (Lagash) - தற்போது தெல்லோ, நிப்பூர் (Nippur) - தற்போது நிப்பர், சுருப்பாக் (Shuruppak) - தற்போது பர்ரா, ஊர் (ur) - தற்போது முக்கையார், ஈரிடு (Eridu) - தற்போது தெல் அபு, கிஷ் (Kish) - தற்போது ஒகிமிர், தற்போதைய ஜாம்தத் நாசர் (பழைய பெயர் தெரியவில்லை), எசுனுன்னா (Eshununna) - தற்போது தெல் அஸ்மர் போன்ற பல இடங்களும் அகழ்வாய்வு செய்யப்பட்டன. இவற்றில் ஆயிரக்கணக்கான களிமண்தட்டுகள் கண்டறியப்பட்டன. இவற்றையெல்லாம் இதுவரையிலும் கூட ஆய்வாளர்கள் முழுமையாகப் படிக்கவில்லை. படித்தவர்கள் கூட உண்மையான பொருளை வெளிக் கொணரவில்லை. சுமேரிய மொழி துருக்கிய, பின்னிய, அஸ்கேரிய (Turkish, Finnish, Hungarian) மொழிகளோடு தொடர்புடையது எனக் கூறும் ஆய்வாளர்கள், சுமேரிய மொழியின் மூலத்தை இதுவரையிலும் கண்டறியவில்லை.[15]

வெள்ளம் பற்றிய கதை முதல்முதலில் சுமேரியர்களா லேயே பதிவு செய்யப்பட்டது எனக் கருத இடமுண்டு. இதனைத் தழுவியே மெசபத்தோமியப் பகுதிகளில் பல்வேறு மொழிகளில் இவை மொழி மாற்றம் செய்யப்பட்டன எனலாம். மெசபத்தோமியக் கதையில் வரும் அனைத்து நிகழ்வுகளும் சுமேரிய இலக்கியத்தில் காணப்படுகின்றன. கில்கா மேஷ் என்ற பெயரும், அவனுடைய மற்றொரு பெயரான சேய்சூத்ரா என்ற பெயரும் சுமேரிய இலக்கியத்தில் காணப்படு கின்றன. சுருப்பாக் என்ற நகரில் வாழ்ந்து வந்த சேய்சூத்ரா தில் மண் என்ற கதிரவன் தோன்றும் நாட்டில் வாழ்ந்து வந்ததாக சுமேரியம் கூறுகிறது. கி.மு. 275 ஆண்டுகளில் அறியப்பட்ட பாபிலோனிய சமய குரு பெரோசஸ் (Berossus) என்பவர் கிரேக்க மொழியில் எழுதியுள்ள சேய்சூத்ர கதை (கிரேக்கத்தில் Xiusudra, Xisuthros என்றவாறு சொல்லப்பட்டுள்ளன.) முற்றிலும் சுமேரியக் கதையைத் தழுவியே கிரேக்கக் கதை அறியப்படுகின்றது.[16] சுமேரியக் கதை பற்றிய விளக்கங்களை அடுத்தடுத்த தலைப்புகளில் காண்க.

5. ஆரியக் கதை

உலகச் சமயங்கள் கூறும் வெள்ளக் கதைகளில், ஆரியச் சமயமும் ஒன்று. இக்கதை காலத்தால் மிகவும் பிந்தியது. கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே மனுவின் வெள்ளக்கதை அறியப்படுகின்றது. இரிக்கு வேதம் வெள்ளக் கதை பற்றிய செய்திகள் எவற்றையும் கூறவில்லை. மனு என்பவனே உலகில் முதல் மாந்தன் என்றும் (விவிலியத்தின் ஆதாமைப் போன்று), மற்றொரு மனு என்பான் வெள்ளத்தினின்றும் காக்கப்பட்டவன் (நோவாவைப் போல) என்றும் புராரணங்கள் கூறுகின்றன. உண்மையில் இவ்விருவரும் ஒருவரா அல்லது இருவரா என்பதற்கான தெளிவான விளக்கங்கள் இல்லை.

மனுஸ்மிருதி என்ற நூல் மனு என்பவனால் எழுதப்பட்டதாகக் கூறுவர். அந்நூலில் 14 வேறுபட்ட மனிதர்களை மனு என்ற பெயரால் அழைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுலகில் தோன்றிய முதல் மனுவை சுயம்பு (Svayam - bhu) என்று கூறி அவன் யாராலும் படைக்கப்படாமல் தன்னிலே தோன்றியவன் என்று விளக்கப்பட்டுள்ளது.[16] அவனிடமிருந்து தோன்றியவர்களை மனுஜாதி (மக்கள்) என்றும் கூறுவர். ஏழாவது மனு என்பவனே வெள்ளத் தோடு தொடர்புடையவனாவான். இவனே இரண்டாவது உலகத்தின் உயிரினத் தோற்றத்துக்கு உரியவனாவான். இந்த மனுவை சமற்கிருத ஆய்வாளர்கள், விவிலியத்தின் நோவா என்பவனுடன் ஒப்பிடு கின்றனர்.[17]

இந்த மனு இரிக்கு வேத ஆசிரியர்களில் ஒருவன் என்றும் சொல்லப்படுகின்றான். ஞாயிற்றுக்கு இரு மக்கள் இருந்ததாகவும், யாமன் என்ற யமாவும், மனுவுமே அவர்களாவர். இவனை வை வஸ்வத (Vaivasvata) என்றும் கூறுவர். அயோத்தி என்ற நகரை உருவாக்கி அதன் முதல் மன்னனாக வீற்றிருந் தவனும் இவனே. ஞாயிற்றின் மகனான வைவஸ்வதனின் மரபும் சூர்யகுலம் என்றும் சொல்லப்படுகின்றது. இராமன் இம்

மரபில் தோன்றியவனே. வைவஸ்வதன் தனது மகளான இயா (Ila) என்பவளை நிலவின் மகனான பூதா என்பவனுக்கு மண முடித்துக் கொடுத்ததாகவும் ஒரு கதையுண்டு. இவ்வாறு சூர்ய குலமும், சோம குலமும் உறவினர்களாயினர்.

ஏழாவது மனுவாகிய வைவஸ்வதன் காட்டில் தவமிருந்து வந்தான். ஒரு நாள் காலையில் உணவுண்ட பின் கைகழுவ பக்கத்திலிருந்த ஆற்றிற்குச் சென்றான். இரு கைகளாலும் நீரை அள்ளிய போது, ஒரு மீன் குஞ்சு அந்நீரில் இருந்தது. அதனை மீண்டும் நீரில் விட்டுவிட எண்ணிய போது, அம்மீன் பேசியது. தன்னை எடுத்துச் சென்று வளர்க்குமாறு கேட்டுக் கொண்டது. அவ்வாறு வளர்த்துக் காப்பற்றினால், எதிர்காலத்தில் உலகம் வெள்ளத்தால் அழிக்கப்படும் போது, மனுவைக் காப்பதாக உறுதி கூறியது. மனுவும் அம்மீனைத் தன் குடிலுக்கு எடுத்து வந்து ஒரு குடத்திலிட்டு வளர்த்தான். அது நாளும் வளர்ந்து பெரிய மீனாக உருவெடுத்த போது, அதன் வளர்ச்சிக் கேற்ற வாறு குளம், ஏரி, ஆறு, கடல் என்றவாறு விட்டு வளர்த்து வந்தான். சில ஆண்டுகளில் மலையைப் போன்ற உருவத்துடன் அம்மீன் காணப்பட்டது. ஒரு நாள் மீன் அவனைப் பார்த்துக் கூறியதாவது. "இவ்வுலகைப் பெரு வெள்ளம் ஒன்று அழிக்கப் போகின்றது. ஒரு பெரிய மரக்கலத்தைச் செய்துகொள். அம் மரக்கலத்தில், உலகிலுள்ள ஜீவ ராசிகளையெல்லாம் ஏற்றிக் கொள். வெள்ளம் தோன்றும் காலத்தில் ஒரு வலிமையான கயிற்றால் மரக்கலத்தைப் பிணைத்து, அதன் மறுநுனியை எனது மூக்கில் கட்டிவிடு. வெள்ளக் காலம் முழுவதும் உன்னையும் ஜீவராசிகளையும் நான் காத்துவருவேன். வெள்ளம் வடிந்தவுடன் நீ வெளியேறி விடலாம்."

அவ்வாறே மனு பெரிய மரக்கலம் ஒன்றைக் கட்டிக் கொண்டான். ஒரு நாளில் வெள்ளம் சூழ்ந்த போது, மீன் குறிப் பிட்டவாறே உலகின் உயிரினங்களை அம்மரக்கலத்தில் ஏற்றிக் கொண்டு, தானும் ஏறிக் கொண்டு கதவை மூடிக்கொண்டான். மரக்கலத்தைக் கட்டியிருந்த கயிற்றைத் தனது மூக்கின் எலும்பால் பற்றிக் கொண்ட மீன், வெள்ளம் வடியும் காலம் வரை அம்மரக்கலத்தைக் காத்துவந்தது. வெள்ளம் வடிந்து விட்டதா என்பதை அறிய பறவையொன்றை மனு அனுப்பிப் பார்த்தான். அது மீண்டும் வராததால், வெள்ளம் வடிந்துவிட் டதை அறிந்து, மரக்கலத்திலிருந்து இறங்கினான். உயிரினங்

களையும் இறக்கிவிட்டான். மீனுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். கடவுளுக்குப் பலி செலுத்தினான்.[18]

அந்த மீன் மகாவிஷ்ணு என்றும், பிரம்மா என்றும் புராணங்கள் கூறுகின்றன. வெள்ளக் காலத்திற்குப் பிறகு புதிய உலகம் உருவாயிற்று. இந்த ஆரியக்கதை எந்தக் கதை மூலத்தின் தழுவல் என்பது சொல்லாமலே விளங்கும். மனுவின் வெள்ளக் கதை எழுதப்படுவதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மூலக்கதை அறியப்பட்டிருப்பதால், மனுவின் கதை, மேற்கித்திய வெள்ளக் கதையின் தழுவலே எனக் கருதலாம்.

பெருவெள்ளத்தை சமற்கிருத மொழியில் பிரளய - ஜலப்பிரளய என்று குறிப்பிடுவர். விவிலியத்தைத் தமிழில் மொழி மாற்றம் செய்தவர்கள், நோவா காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தை ஜலப் பிரளயம் என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளனர். மனுவின் வெள்ளக் கதை கி.பி. 500 ஆண்டுகளுக்குப் பிறகே எழுதப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆரியர்கள் தென்னிந்தியாவுக்கு வந்தபிறகே கடலைப் பார்த்தனர். அதற்குமுன்பு கடலைப் பற்றி எந்தச் செய்தியும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. வெள்ளக் கதையை ஆரியர்கள் யாரிடமிருந்து அறிந்து கொண்டனர் என்பது தெரியவில்லையாயினும், அக்கதை அவர்களுடையதன்று என்பது தெளிவு. கிரேக்கர்கள் வாயிலாக வெள்ளக் கதையை ஆரியர்கள் அறிந்திருக்கலாம். தமிழ்நாட்டில் அவ்வாறான கதை சொல்லப்பட்டிருக்கலாம். மனு வெள்ளக் கதை எழுதிய காலத்தில் இந்தியாவில் கிறித்துவம் அறியப்பட்டிருந்தும் ஒரு கரணியமாக இருக்கலாம். எவ்வாறாயினும், ஆரியரின் வெள்ளக்கதை கடன்பெறப்பட்ட கதையே என்பது தெளிவு.

6. அராபியக் கதை

மேலும் நபியே இவர்களுக்கு நூஹுடைய செய்தியை எடுத்துரைப்பாயாக. அவர் (நபீ) தன்னுடைய சமுதாயத்தினரை நோக்கிக் கூறினார்.[19]

"அவர்கள் அவரைப் (நூஹ் நபியை) பொய்யர் என்று கூறினார்கள். இதன் விளைவாக நாம் அவரையும் அவருடன் கப்பலில் இருந்த மக்களையும் காப்பாற்றினோம். மேலும் அவர்களை இப்பூமியில் பிரதி நிதிகளாக்கினோம். மேலும் நம் வசனங்களைப் பொய்யென்று கூறிக் கொண்டிருந்த அனைவரையும் (வெள்ளத்தில்) மூழ்கடித்தோம். எச்சரிக்கப்பட்டிருந்தும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் கதி என்னவாயிற்று?"

- திருக்குர்ஆண், பாகம்11, அத்.10.73

வெள்ளம் ஏற்பட்டதையும், அவ்வெள்ளத்திலிருந்து நூஹ் நபி காக்கப்பட்டதையும், அல்லாவை மறந்தவர்கள் வெள்ளத்தில் மூழ்கடிக்கப் பட்டதையும், நபிகள் நாயகத்துக்கு அல்லா விளக்கிக் கூறியதாக திருக்குர் ஆன் தெரிவிக்கின்றது. இதன்மூலம் நூஹ் நபி (நோவா) என்ற மாந்தன் இருந்ததையும், அவன் வெள்ளத்திலிருந்து காக்கப்பட்டதையும் மற்ற மக்கள் மூழ்கடிக்கப்பட்டதையும் உண்மையான நிகழ்வென்றே தெரிவிக்கின்றது. யூத சமய இலக்கியமான தோராவும் அது உண்மை நிகழ்வே என்று கூறுகிறது. ஆனால் விவிலிய ஆய்வாளர்கள், அந்நிகழ்வை தொன்மக்கதையென்றும், அந்நிகழ்வை நம்புகிறவர்களைத் தடை செய்யவில்லையென்றும் கூறுகின்றனர்.

"எமது காட்சியிலும் கண்காணிப்பிலும் மரக்கலம் ஒன்றைக் கட்டு"[20] சுரா, 9:37 அல் - பெய்கசாவி (Al - Baizawi) என்ற இசுலாமிய அறிஞர் கூறுகிறார்," நோவா (நூஹ்)இரண்டு ஆண்டுகளில் அம்மரக்கலத்தைக் கட்டி முடித்தார். அது 300 கூபித் நீளமும் 50 கூபித் உயரமும், 30 கூபித் அகலமும் கொண்டிருந்தது. (1கூபித் = ஒன்றரை அடி)இந்திய மரத்தால் (Indian

plane tree) கட்டப்பட்டு, மூன்றடுக்குகளைக் கொண்டிருந்தது. கீழ்தட்டு விலங்குகளுக்காகவும், இடைத்தட்டு மக்களுக்காகவும், மேல்தட்டு பறவைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டது. இடைத் தட்டில் ஆண்களும் பெண்களும் தனித்தனியே பிரிக்கப்படு மாறு, தனி அறைகள் இருந்தன.[21] (Indian Plane tree என்பது, அடி பெருத்த மரம் என்றும், நீர்க்கசிவுக்கு உள்ளாகாத மரம் என்றும் பொருள் கொள்ளப்படுவதால், அது பலாமரமே எனக் கூறலாம்) வெள்ளம் வடிந்த பின் மரக்கலம் அல் - ஜுடி (Al - Judi) என்ற மலையில் நிலை கொண்டது."[22]

அல்ஜுடி என்பது விவிலியம் கூறும் அராரத் (Ararat) என்ற மலையே என விளக்கம் சொல்லப்பட்டாலும், அது ஜியோர்டி (Giodri) என்ற கிரேக்கச் சொல்லின் திரிபே என இசுலாமிய அறிஞர்கள் கூறுகின்றனர்.[23] இம்மலைத் தொடர், ஆர்மீனியாவிற்கும் மெசபத்தோமியாவிற்கும் இடையில் உள்ளதாகும். இன்றைய துருக்கியின் தென் கிழக்கிலும் ஈராக் மற்றும் சிரியாவுக்குக் கிழக்கிலும் உள்ளது.

அயின்ஸ் வொர்த் (Ainsworthj) என்ற அறிஞர், நோவாவின் கப்பல் பயணம் மேற்கொண்ட பகுதிகளில் அராரத் பகுதியும் ஒன்றென வாய்மரபுச் செய்திகள் கூறினாலும், அக்கப்பலின் உடைந்த துண்டொன்று அராரத் மலைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாக நம்புகின்றனர், என்று கூறுகிறார்.[24]

விஸ்டன் (Whiston) என்ற ஆய்வாளர், தனது ஆர்மீனிய வரலாறு என்னும் நூலில் (History of Armenia, p. 361) அரரடியா என்பது மலையைக் குறித்த சொல் அல்லவென்றும், அது அந்நாட்டின் ஒரு பகுதியைக் குறித்த (Provice) சொல் என்றும் கூறுகிறார்.[25] விளக்கக் குறிப்புகளை அடுத்தடுத்த தலைப்பு களில் காண்க.

7. விவிலியக் கதை

கி.மு. 2000 ஆண்டுகளில் அறியப்படும் அபிறகாம் என்ற தலைவனின் வழிவந்த மக்கள் எபிறேயர்கள் எனப்படுகின்றனர். அபிறகாமின் முன்னோர்கள் கிழக்குத் திசையிலிருந்த ஒரு நாட்டிலிருந்து, தைகிரீசு ஆற்றைக் கடந்துவந்து, ஊர் நகரில் குடியேறியவர்கள் என்று எபிறேய மக்களைப் பற்றிய குறிப்புகள் கூறுவதால், இவர்களும் சுமேரியரைப் போன்று வெளி நாட்டினரே எனலாம். ஆனாலும் அம்மக்கள் பேசிய எபிறேய மொழியை செமிட்டிக் மொழிக் குடும்பத்துடன் இணைத்து, அவர்கள் மெசபத் தோமியாவிலிருந்து பாலத் தீனத்துக்கு வந்தவர்களாகப் பதிவு செய்துள்ளனர். வரலாற்றில் இதுவொரு முரண்பாடான முடிவாகும். அபிறகாமுக்கு முன்பிருந்த அவனது முன்னோர்களை எபிறேயர்கள் என்று விவிலியம் குறிப்பிடவில்லை. அபிறகாமே முதன் முதலாக எபிறேயன் என்ற சொல்லால் அழைக்கப் படுகிறான்.

அபிறகாமின் வழிவந்த மக்கள் மோசே என்பான் தலைமையில் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறி, இறைவனால் வாக்குத்தரப்பட்ட கனான் நாட்டில் கி.மு. 1250 வாக்கில் குடியேறினர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எபிறேயர்கள், தங்களுடைய குடியேற்ற நாட்டை இசுராயெல் என்று அழைத்துக் கொண்டனர். அபிறகாமின் பெயரன் ஆக் கெப் என்பானுக்கு இசுராயெல் என்ற பெயரும் இருந்ததால், ஆக் கெப் பின் பன்னிரு மக்கள் வழி வந்த எபிறேயர்கள், தங்களது நாட்டுக்கு அப்பெயரையே சூடிக் கொண்டனர் எனலாம். இசுராயெல் (Isra - el) என்பது எபிறேய மக்களுடைய கடவுளின் பெயருமாகும்.

உண்மையில் அம்மக்களின் வரலாறு, அபிறகாம் என்ற தலைவனுக்குப் பிறகே தொடங்குகிறது என விவிலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தங்களுடைய தலைவனான அபிறகாம், தங்களை வழி நடத்திய மோசே, மோசேயுடன் கடவுள்

உறவாடிக் கொடுத்த நற்செய்திகள் ஆகியவற்றை நூலாகப் பதிவு செய்துள்ளனர். அந்நூல் தோரா (Torah) என்று அழைக்கப்படுகின்றது. கிறித்துவுக்குப் பிறகு தோன்றிய கிறித்துவ சமயம் தோரா என்ற நூலையும் தமது சமய நூலாக்கிக் கொண்டு, அதனை பழைய ஏற்பாடு என்று பெயரிட்டுக் கொண்டது. கிறித்துவின் பிறப்பு, அவருடைய கொள்கைகள், அவர் அறிவித்த நற்செய்திகள் அடங்கிய தொகுப்பு, புதிய ஏற்பாடு (New Testament) என்று அழைக்கப்படுகின்றது. பழைய, புதிய நூல்களின் தொகுப்பே விவிலியம் எனப்படுகின்றது. தோரா என்ற பழைய ஏற்பாடு எபிறேய மக்களின் சமய நூலாக உள்ளது. புதிய ஏற்பாடு என்ற கிறித்துவின் செய்திகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

தோரா எழுதப்பட்ட காலம் கி.மு. 1250 என்பர். எபிறேய மக்கள் கடவுளால் தெரிந்து கொண்ட மக்கள் என்று சொல்லப்படுவதால், கடவுள் படைத்த முதல் மாந்தனும் அவனது வழிவந்தவர்களும், தங்களுடைய இனமே என உறுதி செய்து கொள்வதில் எபிறேயர்கள் ஆர்வம் கொண்டிருந்ததின் அடிப்படையில், படைப்புக் கதையை தங்களது தோரா நூலின் முதல் பகுதியாக இணைத்துக் கொண்டனர். அபிறகாமிற்குப் பிறகு அறியப்பட்ட செய்திகள் அண்மைக்கால செய்திகளாக இருந்ததால், அவை பற்றி விரிவாக எழுதிவைத்தனர். ஆனால் படைப்புக் காலச் செய்தி எப்போது நிகழ்வுற்றது எனத் தெரியாத நிலையில், தங்களது முன்னோர் கூறிவந்த வாய்மரபுச் செய்தியை (Oral tradition), தங்களது சமயநூலின் முதல் பகுதியாக இணைத்துக் கொண்டனர். உண்மையில் இதனை எழுத்துவடிவில் பதிவுசெய்த ஆசிரியர் (மோசேதான் என்று கருதுகின்றனர்), தமக்குத் தெரியாத, தமது முன்னோர் கூறிய செய்திகளைத் தொகுத்தார் எனக் கருதலாம்.

தோரா கூறும் படைப்புக் கதையின் மூலம் சுமேரிய, மெசபத்தோமியக் கதைகளில் காணப்பட்டாலும், அக்கதைகள் கூறும் பல கடவுளர் கொள்கைகளை விடுத்து, ஒரு கடவுளே உலகைப் படைத்தார் என்ற தங்களது சமயக் கொள்கைக்கு ஏற்றவாறு, படைப்புக் கதையைத் திருத்திக் கொண்டனர். இப்பகுதியில் ஆதாம்முதல் நோவா வரையிலான தலைவர்களுடைய செய்திகள் இணைக்கப்பட்டுள்ளன. நோவா என்ற பெயர், முந்திய சுமேரிய, மெசபத்தோமியக் கதைகளில் காணப்பட

வில்லை. சேய் சூத்திரன் என்றவாறு அக்கதைகளில் சொல்லப் பட்டுள்ளது. எனவே, நோவா என்ற பெயரை தோராவைத் தொகுத்த ஆசிரியரே சூட்டியிருக்க வேண்டும். அப்பெயரும் வழிவழியாகச் சொல்லப்பட்ட பெயராகவே இருந்திருக்க வேண்டும். நோவா என்ற பெயருக்கான பொருள் யாதெனத் தெரியவில்லை என தற்கால விவிலிய ஆய்வாளர்கள் கூறுகின் றனர்.[26] மேலும் நோவாவிற்கு நாகன் என்ற பெயரும் இருந்த தாக தோரா கூறுகிறது. நாகன் என்ற சொல்லுக்கான பொருளும் அறியப்படவில்லை.

தோராவைத் தொகுத்த ஆசிரியர், படைப்புக் கதை மெச பத்தோமியப் பகுதிகளிலேயே நிகழ்வுற்றது போன்ற தோற் றத்தை ஏற்படுத்தியுள்ளார். உண்மையில் படைக்கப்பட்ட முதல் மாந்தன் வாழ்ந்திருந்த நாடு, அவனும் அவனது மரபினரும் பேசிய மொழி பற்றி தெளிவான விளக்கங்களைத் தோரா கொடுக்கவில்லை. தங்களுடைய முன்னோர் கூறியிருந்த செய் திகளை, தங்களது சமயக் கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றிப் பதிவு செய்து கொண்டனர் எனலாம்.

ஆதாம் முதல் நோவா வரையிலான மரபில், நோவா பத்தாவது தலைவனாக அறியப்படுகிறான். சுமேரிய, மெசபத் தோமியக் கதைகளும் பத்துத் தலை முறைகளைக் கூறுகின்றன. சேய்சூத்திரன் பத்தாவது தலைமுறைத் தலைவனாவான். நோவா - சேய் சூத்திரன் கதைகளில் காணப்படும் தொடர்புகளை அடுத்தடுத்த தலைப்புகளில் காணலாம்.

"உலகில் மக்கள் கடைப்பிடித்த தீயஒழுக்கங்கள் எவ்வளவு பெருகியிருந்தன என அறிந்தபோது, அவர்களுடைய நெஞ்சமும் எண்ணங்களும் எவ்வாறு பாழ்பட்டுப் போயிருந்தன என்பதை கடவுள் உணர்ந்தார். தன்னால் படைக்கப்பட்ட மாந்தனின் சிந்தனைகள், குற்றங்களைக் கொண்டிருந்ததைக் கண்டு கடவுள் வருந்தினார்."[27]

உலகும், உலகின் மக்களும் தீமையின் கூடாரங்களில் குடியிருந்ததாகக் கடவுள் கருதினார். தனது விருப்பதிற்கு மாறாக, தன்னால் படைக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து வருவதைக் கண்டு கடவுள் சினம் கொண்டார். அதனால், தான் படைத்த மக்கள் இனத்தை அடியோடு அழிக்க நினைத்தார். மக்களை மட்டுமல்லாது, மக்களின் நலனுக்காகப் படைக்கப்பட்ட

விலங்குகள், ஊர்வன, பறவைகள் என அனைத்தையும் அழிக்க எண்ணம் கொண்டார்.[28]

அப்போது நோவா என்பான் மட்டுமே கடவுளின் விருப் பப்படி நல்லொழுக்கத்தோடு வாழ்ந்து வந்ததையும் கடவுள் கண்டார்.[29] எனவே நோவாவை அழைத்து,

"காட்டிலுள்ள பெருமரத்தால் ஒரு பெரிய மரக்கலத்தைக் கட்டிக் கொள் (Teppah) பல்வேறு அறைகளை உருவாக்கி, அவற்றின் மேலும் கீழும் ஒழுகாதவாறு பூசிக்கொள். இவ்வாறு அந்த மரக்கலம் இருக்க வேண்டும்: மரக்கலத்தின் நீளம் 300 கூபித்துகளும், அகலம் 50 கூபித்துகளும், உயரம் முப்பது கூபித்துகளுமாக இருக்கட்டும். சூரிய ஒளிபடுமாறு ஒரு திறப்பை ஏற்படுத்திக் கொள். பக்கவாட்டில் ஒரு வழியை உருவாக்கு. அடி, இடை, மேல் என்றவாறு மூன்றடுக்கில் அம் மரக்கலம் இருக்கட்டும்"[30]

"நான் பெருவெள்ளத்தைத் தோற்றுவித்து, உலகிலுள்ள அனைத்து உயிரினங்களையும் அழிப்பேன். உலகின் அனைத்து உயிரினங்களும் மாண்டுபோகும். உன்னுடன் நான் செய்து கொள்ள இருக்கும் உடன்பாட்டின்படி, நீயும் உன் மக்களும், மனைவியும், மக்களின் மனைவியரும் மரக்கலத்தினுள்ளே செல்லுங்கள். உலகிலுள்ள உயிரினங்களில் ஒவ்வொரு இணை யையும் உயிருடன் எடுத்துக் கொள். அவை பறவைகள், விலங்குகள், ஊர்வன என்றவாறு அனைத்து உயிரினங்களின் இணையாக இருக்கட்டும். உனக்கும், உனது மனைவி மக்களுக் கும், மற்ற உயிரினங்களுக்கும் தேவைப்படும் உணவுப் பொருட் களையும் சேர்த்து வைத்துக் கொள்." கடவுள் கூறிய அனைத்து அறிவுரைகளின்படி நோவா செய்து முடித்தான்."[31]

வாழ்க்கைக்குத் தேவையான தட்டுமுட்டுப் பொருட் களையும் எடுத்துக் கொள்ளுமாறு கடவுள் பணித்தார். ஆண் பெண் இணைகளாக, தூய்மையான மற்றும் தூய்மையற்ற உயிரினங்களையும் ஏற்றிக் கொள்ளச் சொன்னார். இன்றி லிருந்து ஏழாம் நாளில் உலகில் மழையையும் பெருவெள்ளத் தையும் உருவாக்கப் போவதாகவும், நாற்பது இரவும் பகலும் அவ்வெள்ளம் நீடிக்குமென்றும், இறுதியில் உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் துடைத்தெறியப்படும் என்றும் கடவுள் நோவாவைப் பார்த்துக் கூறினார்.[32] கடவுள் கூறியவாறு

அனைத்தையும் செய்து முடித்த பின், அந்த ஏழாம் நாளில் நோவா, மரக்கலத்திலேறி, கதவைச் சாத்திக் கொண்டான். நாற்பது நாள் அளவில் வெள்ளம் பெருக்கெடுத்து, உலகைச் சூழ்ந்தது. வெள்ளத்தில் உலகத்தின் அனைத்து உயிரினங்களும் மாண்டு போயின. நாற்பதாம் நாளில் நோவா ஒரு காக்கையை அனுப்பி வெள்ளம் வடிந்து விட்டதா எனப் பார்த்தான். அது சென்ற சில பொழுதில் திரும்பிவிட்டது. பிறகு ஒரு புறாவை அனுப்பினான். அதுவும் உட்கார நிலமின்றி திரும்பி வந்தது. ஏழு நாள் சென்றபின் மீண்டும் அப்புறாவை அனுப்பினான். அன்றுமாலை, அப்புறா தனது அலகில் ஒளிவக் கிளை யொன்றைப் பிடித்துக் கொண்டு திரும்பி வந்தது. வெள்ளம் வடிந்து போனதை யறிந்த நோவா தரையிறங்க விரும்பினான். அவனுடைய மரக்கலம் அராரத் என்ற மலை முகட்டில் நிலை கொண்டிருந்தது. இறுதியாக கடவுள் நோவாவை மரக்கலத்தை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார். தரையில் இறங்கிய நோவா, கடவுளுக்குத் தனது நன்றியைக் காட்ட, தீமூட்டிக் காவு கொடுத்தான். இதன் மணத்தை நுகர்ந்த கடவுள், இனி யொரு காலத்திலும் உலகை அழிக்கப் போவதில்லை என்றார். கடவுள், நோவாவையும் அவனது மனைவி மக்களையும் வாழ்த்தி, இப்புதிய உலகில் உங்கள் மரபு பல்கிப் பெருகட்டும் என்றார். உலகிலுள்ள பறவைகள், விலங்குகளில் தூய்மையான வற்றை உண்ணுமாறு அறிவித்தார். செடிகள், பச்சிலைகள், மரங்கள், அவற்றின் காய்கனிகள் அனைத்தையும் மக்களின் பயன்பாட்டுக்காக அளித்தார். குருதியுடன் கூடிய விலங்குகள், பறவைகள் உண்ணுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தினார். நோவாவுடன் ஓர் உடன் பாட்டைச் செய்து கொண்டார். அவ் வுடன் பாட்டிற்குச் சான்றாக வானவில்லைத் தோற்றுவித் தார்.[33] (ஆதி. அத். 7, 8, 9 ஆகியவைகளின் சுருக்கம்) மேற் கண்டவாறு விவிலியம், தோரா கூறும் வெள்ள நிகழ்வுகள் உள்ளன.

8. பிற சமயங்களின் வெள்ளக் கதைகள்

வெள்ளம் உலகைச் சூழ்ந்து உலகை அழித்தது என்ற சிந்தனை, உலகின் அனைத்து நாகரிகங்களிலும் காணப்படுகின்றன. வெள்ளப் பாழ் தொன்மைக்கால மக்களின் நினைவுகளில் நீங்காத இடத்தைப் பிடித்திருந்தது. வெள்ளக் காலத்துக்குப் பிறகு தோன்றிய கதைகள் மட்டுமல்லாது வானியல் தொடர்பான செய்திகளையும் வெள்ளத்தோடு இணைத்தே பார்த்தனர். ஓரியன் (Orion) என்ற விண்மீன் வெற்றுக் கண்களுக்குப் பளிச்செனத் தெரியும். மாந்தன் முதன் முதலில் அடையாளம் கண்டதாக இவ்விண்மீனையே கூறுவர். இம்மீன் கூட்டத்தில் அடிப்பகுதியில் ரீகல் (Regal or Regulas) என்ற விண்மீன் ஒளியுடன் காணப்படும். இந்த மீனே திருவாதிரை என்றும் சொல்லப்படும். இம்மீன் மறைவதை, பெருங்கடல் வெள்ளத்தில் மூழ்குவதாக உருவகம் செய்துள்ளனர்.[34] கிரேக்க வானியல், கன்னி ஓரை (Virgo) மறைவதை பொற்காலத்தின் மறைவு என்றும், அது தென்திசையில் மறைவதை வெள்ளத்தில் மூழ்கி விட்டதாகவும் கற்பனை செய்தது. பழைய உலகம் முடிவுற்று புதிய உலகம் தோன்றுவதை, பழைய உலகம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாக உருவகம் செய்தனர்.[35]

தெக்காளியன் (Decaulion) என்றவொரு கதையை கிரேக்கர்கள் கூறி வந்துள்ளனர்.[36] ஆழியன் பால் என்ற கடல் கடவுள் (Aliyen Baal) தெக்காளியனைக் காப்பாற்றியதாக கிரேக்கக் கதை கூறுகிறது. அவாய்த்தீவு மக்கள் கடல் பொங்குவதற்கும், மழை பெய்வதற்கும் கடலில் இருந்த கடவுள்தான் கரணியம் என நம்பியிருந்தனர். அவாய்த்தீவில் அடிக்கடி கடல்நீர் உட்புகும். இவ்வாறான வெள்ளத்தில் தங்களுடைய முன்னோர்கள் மூழ்கிப் போனதாக நம்புகின்றனர். இந்தப் பெருவெள்ளத்தை Kai - a ka - hina என்று தங்களுடைய மொழியில் கூறுகின்றனர்.[37] இதற்கு வெள்ளத்தில் இறந்துபோன தலைவர்கள் (Flood that made the chiefs fall down) என்பதே பொருளாகும்.

எகிப்தியர்கள் ஒரு வெள்ளக் கதையைக் கூறி வந்தனர். ஆடவையையும், ஒரியனையும் (Gemini and Osiris) ஓரிரிஸ் (Osiris) என்ற கடவுளோடு தொடர்புபடுத்தியிருந்தனர். ஓசிரிஸ் மறைந்ததை, மேற்கண்ட இரு விண் மீன் கூட்ட மறைவுடன் இணைத்து, ஓசிரிஸ் வெள்ளத்தில் மூழ்கிப் போனான் என நம்பினர். ஓசிரிசின் மகன் ஓரஸ் (Horus) என்பவனும் வெள் ளத்தில் மூழ்கிப் போனான். அவனுடைய மகனான அமென்ரா (Amenra) எகிப்தில் புதிய உலகைத் தோற்றுவித்தான்.[38]

இவையுமின்றி, கனானிய, உகாரிய, போனீசிய, ஸ்லா வியச் சமயங்களும் வெள்ளக் கதைகளைக் கூறுகின்றன. பாபிலோனிய கதையில் வரும் யா என்ற கடல்தெய்வமே சேய்சூத்திரனைக் காப்பாற்றியதாகக் கூறப்படுகின்றது. கிழக்கு நாடுகளான சீனா, சப்பான், கொரியா, நியூகினித் தீவுகள், ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடு களின் பழங்குடியினரிடையே வெள்ளக் கதைகள் உள்ளன.

9. அறிவியல் நோக்கில் வெள்ளம்

உலகின் வெப்ப - தண்மைக் கால வரலாற்றை நாம் அறிய வேண்டுமானால் முப்பத்தைந்து இலக்கத்து ஐம்பதாயிரம் ஆண்டுகள் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அக்காலம் தொட்டு கி.மு. 25000 ஆண்டுகள் வரை உலகில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தற்கால உலகின் கால நிலை, கி.மு. 25000 ஆண்டுகளிலேயே தொடங்குவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கால கணிப்புகள் பல்வேறு கூறுகளைத் துல்லியமாக ஆய்வு செய்தபின்னரே எடுக்கப்பட்ட முடிவு களாகும். இக்கணிப்புகள் சரியான அளவில் கணக்கிடப்பட் டுள்ளதாகவும் அறிவியலார் கூறுகின்றனர்.

1975 ஆம் ஆண்டில், வாஷிங்டன் நகரில் செயல்பட்டு வரும் தேசிய அறிவியல் கழகம் (National Acadamy of Sciences), காலச் சூழல்களுக்கான அடிப்படைக் காரணிகளை வகைப் படுத்தியது.

வெப்பச் சூழல் மாறுபாடு: காற்று, நீர், பனிக்கட்டி, மண் ஆகியவை வெப்பமடைவதால் ஏற்படும் மாற்றங்கள்.

சுழற்சி மாறுபாடு: காற்று, கடலுக்கடியில் ஏற்படும் சுழல்கள், பனிக்கட்டிகளின் சுழற்சி.

நீர்த்தன்மை மாறுபாடு: காற்று, மேகங்கள், நிலத்தின் நீர், நிலத்தடிநீர் மற்றும் பனிக்கட்டிகள்

அழுத்த மாறுபாடு: வளி மண்டலம் (atmosphere), பெருங்கடல்கள் ஆகியவற்றில் தோன்றும் அழுத்தங்கள், கடல்நீரில் உப்புத்தன்மை ஏற்றம் பெறுதல்.

மேற்கண்ட வற்றிற்கிடையே காணப்படும் தொடர்பு களால் காலநிலை மாறுபடுவதுடன் சில நேரங்களில் சிக்கலா கவும் மாறுகின்றன. காற்றும் கடலும் இக்காரணிகளில் சிறப் புக்குரியனவாகும்.

தேசிய அறிவியல் கழகம் கி.மு. 25000 ஆண்டுகள் தொடங்கி இன்று வரையிலான கால அளவுகளில் காலச் சூழல்கள் எவ்வாறெல்லாம் மாறுபாடுகள் அடைந்துள்ளன என்பதை பட்டியலிட்டுள்ளது.[39]

கி.மு. 25000 ஆண்டுகளுக்கு முன்: 1975 இல் வெளியிட்ட ஆய்வுகளின்படி, 55 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே, இவ்வுலகின் தென்வட முனைப்பகுதிகள் குளிரத் தொடங்கின. தென்முனையான அண்டார்டிகாவில் பனிப்படலங்கள் உருவாகத் தொடங்கின. அடுத்த 15 மில்லியன் ஆண்டுகளில் அதன்பரப்பளவு மேலும் வளர்ந்தது. 4 அல்லது 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, தற்போதுள்ள பனிப்படலச் சூழலை எட்டியது. வட முனையான ஆர்க்டிக் பகுதியில் தோன்றிய பனிப்படலங்கள், 3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே பெரிதும் படர்ந்து, வடமுனையை அடுத்துள்ள நாடுகளுக்குப் பரவியது. இவ்விருமுனைகளிலும் ஏற்பட்ட வெப்பக்குறைவும், குளிர்த் தன்மையும், 18 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு கடற்பகுதிகளை குளிரச் செய்தது. அத்தாக்கம் நில நடுக்கோட்டுப் பகுதிகளை மூன்று இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு தொட்டது. இவ்வாறு உயர்ந்து கொண்டே சென்ற பனிப்படல வளர்ச்சியால் கடல் பகுதிகள் சுருங்கி, நிலப் பரப்புகள் விரிவடைந்தன. கி.மு. 18000 ஆண்டுகளில் நிலப்பரப்பு முன் எப்போதும் இல்லாத அளவில் இருந்தது. அதற்கு முன்பு அறியப்படாத பலதீவுகள் கடலில் தென்பட்டன. நீர்ச்சுருக்கத்தால் உலகின் நீர்நிலைகள் வற்றிப்போயின அல்லது பனிப்படலங்களாக மாறிப்போயின.[40]

வட முனையின் பனிப்படலம் வட அட்லாண்டிக் கடலில் 2000 அயிரத்தொலைவு வரையிலும், தென்முனையின் பனிப் படலம் தென் அட்லாண்டிக் கடலில் 600 அயிரத் தொலைவு வரையிலும் பரவின. கி.மு. 25000 - 18000 ஆண்டுகளில் வட முனையின் பனிப்படலம் முன் எப்போதும் இருந்திராத அளவை எட்டியது. ஏறக்குறைய வட கோள் முழுவதுமே பனியால் மூடப்பட்டது. கடலின் நீர்மட்டம் 50 முதல் 100 மீட்டர் அளவுவரையிலும் குறைந்து போயின. இதனால் நிலநடுக்கோடு வரை குளிர்ந்த சூழல் காணப்பட்டது. வட அமெரிக்காவின் வட பகுதிகளும், ஸ்காண்டி நேவியி தீவக்குறையின் பெரும் பகுதிகளும் பனியால் மூடப்பட்டன.[41]

இவ்வாறான சூழலில் உலகில் புதிய மாற்றம் தோன்றியது. வெப்பநிலை உயர்ந்து கொண்டே போனது. இந்த மாற்றம் கி.மு. 18000 ஆண்டுகளில் நிகழத் தொடங்கியது. அது கி.மு. 12000 ஆண்டுகள் வரை நீடித்தது. சிறப்பாக கி.மு. 15000 - 12000 ஆகிய 3000 ஆண்டுகளில் கடும் வெப்பம் உலகைத் தாக்கியது. இதன் விளைவுகளாக அண்டார்டிக், ஆர்க்டிக் பகுதிகளில் மலைபோல் குவிந்திருந்த பனிப்பாறைகள், பாளங்கள் உருகத் தொடங்கின. தென் முனையின் உருகல் இந்தியப் பெருங்கடல், பசிபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல் பகுதிகளின் தென் பகுதிகளில் கடல்நீரின் நிலையை உயர்த்தியது. வடமுனையை ஒட்டியிருந்த கடல் நீரும் உயர்ந்தது. வடக்கிலிருந்தும் தெற்கி லிருந்துமாகப் பேரலைகள் உருவாகி, நிலநடுக் கோட்டுப் பகுதி களை நோக்கி விரைந்தன. இந்த நீர்ப்பெருக்கத்தால் உலகில் கடல் பகுதிகளின் உயரம் 100 - 150 மீட்டர் அளவுவரை எட்டியது. இது ஏறக்குறைய 400 - 450 அடிகளுக்குச் சமமாகும்.[42]

18000 - 12000 ஆண்டுகளில் ஏற்பட்ட நிகழ்வை பனி உருகல் காலம் என அறிவியலார் அழைக்கின்றனர். இக்கால அளவில் எப்போதும் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நில நடுக்கம், எரிமலை வெடிப்புகள், நில அடித்தட்டுகளால் ஏற்படும் ஆழிப்பேரலைச் சீற்றங்கள் போன்றவையும் நிகழ்ந் துள்ளன. எரிமலை வெடிப்பால் அந்தப் பகுதி மட்டுமே அழிக் கப்படும் என்று பலர் தவறாகக் கருதுகின்றனர். இத்தாலியின் தென்பகுதியிலுள்ள செயின்ட் ஹெலனா என்ற எரிமலை, நடுத் தரைக் கடலை ஒட்டியிருந்த ஒரு பெருமலையையே புரட்டிப் போட்டது. அம்மலை கடலில் விழுந்ததால் இடம் பெயர்ந்த நீரின் அலைகள், இசுராயெல் போன்ற நாடுகளையும் தாக்கி, சுனாமியைத் தோற்றுவித்ததாக அறிவியலார் கூறுகின்றனர். இந்நிகழ்வு கி.மு. 6000 ஆண்டுகளில் நடந்ததாக அறிவியலார் கருதுகின்றனர்.

6000 ஆண்டுகால கடல் நீர்ப் பெருக்கத்தால், 400 அடிக்கும் தாழ்வான நிலப்பகுதிகள் யாவும் கடலுள் மூழ்கின. உள் நாட்டிலிருந்த தாழ்வான பகுதிகளை கடல் நீர் ஊட றுத்துச் சென்று நிரப்பியது. சாக்கடல், காஸ்பியன் கடல், பாரசீக வளைகுடா, வங்கக் கடல், அரபிக்கடல் போன்றவை இக்காலத்தில் தோன்றின அல்லது தங்கள் உருவத்தை மாற்றிக் கொண்டன. பல நிலப்பகுதிகள் நீரில் மூழ்கி உயர்ந்து நின்ற மலைப்பகுதிகள் தீவுகளாக மாறிப் போயின. மாலத்தீவுகள்,

இலக்கத் தீவுகள், செசல்ஸ் தீவுகள், மடகாஸ்கர் போன்றவை இக்காலத்தில் உருவானவைகளே என்பது அறிவியலாரின் கூற்றாகும்.

அட்லாண்டிக் பெருங்கடலின் கிழக்கு பகுதிமுதல், ஆஸ்திரேலியா வரையிலான பகுதிகளை உள்ளடக்கி, இலெமூரியா என்ற பெருநிலப் பரப்பு இருந்ததாகவும், அது இப்பெரு வெள்ளத்தில்தான் அழிந்துபோய், உயரமான பகுதிகள் தனித்தனி நாடுகளாயின என்றும் பிளாவட்ஸ்கி (Madame Blavatsky) என்ற பிரெஞ்சு நாட்டு ஆய்வாளர் கூறுகிறார்.[43] தமிழர்கள் வாழ்ந்திருந்த குமரிக் கண்டத்தைத்தான் பிளாவட்ஸ்கி குறிப்பிடுகிறார். குமரிக்கண்டம் கி.மு. 18000 - 12000 ஆண்டுகளில் முற்றிலுமாக அழிந்துபோனது. அதன் எஞ்சிய பகுதிகளாக தென் இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, அரபிக்கடல் தீவுகள் ஆகியவைகளே உள்ளன. தமிழ் இலக்கியங்களும் குமரிக்கண்டம் கடல் வெள்ளத்தால் அழிந்து போனதாகக் கூறுகின்றன.

மேற்கண்ட செய்திகளை வாஷிங்டனிலுள்ள தேசிய அறிவியல் கழகம் உறுதிப் படுத்துகின்றது. (1975). எனவே வெள்ளம் தோன்றி உலகை அழித்த செய்தி, அறிவியல் நோக்கில் உண்மையே என்றும், அச்செய்திகளையே, உலக சமயங்கள் தம் பார்வையில் கூட்டியும் குறைத்தும் கதைகளாகக் கூறுகின்றன என்றும் கொள்வதில் தவறில்லை எனலாம். இயற்கையில் நிகழ்ந்த வெள்ளப் பாழை, இறைவனோடு தொடர்புபடுத்தி சமயங்கள் பேசுகின்றன. சமயநோக்கில் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன என்க. வெள்ளம் உலகின் பல பகுதிகளை மட்டுமே அழித்ததாக அறிவியல் கூறும் போது, ஒட்டு மொத்தமாக அழிந்து போனதாக சமயங்கள் கூறகின்றன. வெள்ளக் காலத்திலும் அதற்குப் பிறகும் மாண்டவர் போக மீண்டவரும், வெள்ளப் பாழையே அறியாத மக்களும் கூடி உலகில் வாழ்ந்திருந்தனர். ஆனால் சமயங்களின் நோக்கில் இறைவனால் ஒருவன் மட்டுமே (அவன் குடும்பமும்) காக்கப்பட்டதாகக் கூறப்பட்டன. எவ்வாறாயினும் சமயங்களும் வெள்ளம் பற்றிய கதைகளில் உண்மையிருப்பதை அறிவியல் ஆய்வுகள் உறுதிப் படுத்தியுள்ளனயென்பதால், அவ் வெள்ள நிகழ்வில் அறியப்படும் பல்வேறு செய்திகளையும் ஆய்வு செய்யும் போது, பல புதிய செய்திகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

10. நோவா பற்றிய அண்மைக்கால ஆய்வுகள்[44]

கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, நோவா என்பவன் வெள்ளத்தினின்றும் கடவுளால் காக்கப்பட்டவன், அவன் வாழ்த்திருந்தது உண்மையே என பெரும்பாலோர் சமயக் கண்ணோட்டத்தில் நம்பிக் கொண்டிருந்தனர். இன்னும் சில நூற்றாண்டுகள் முன்னோக்கிச் செல்வோமேயானால் (கி.பி. 1500), நோவா என்பவன் கற்பனை மாந்தனே, அவன் வாழ்ந் திருந்ததற்கானச் சான்றுகள் இல்லை, எனவே நோவா பற்றிய செய்திகள், கதையே தவிர வரலாறு அன்று என, 500 ஆண்டு களுக்கு முன்பு யாராவது கூறியிருந்தால் அவர் உயிரோடு கொளுத்தப்பட்டிருப்பார் அல்லது இருட்டறையில் மாதக் கணக்கில் அடைத்து வைக்கப்பட்டிருப்பார்.

அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் நிலைமை மாறிப்போனது. விவிலிய நாயகர்களையும், செய்திகளையும் ஆய்வுக் கண் கொண்டு நோக்கி, வரலாற்றோடும் சான்றுகளோடும் இணைத்துப் பார்க்கின்ற சூழ்நிலைகள் உருவாயின. அந்த வகையில் கடந்த நூற்றாண்டுகளில் நோவா பற்றிய செய்தி களும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வுகள் முரண்பா டான செய்திகளையே வெளிப்படுத்தினாலும், பெரும்பாலான ஆய்வாளர்களால் உறுதியான செய்திகளைத் தர இயவில்லை. அண்மையில் கூட ஜோஷ் பெர்ஸ்மின் (Josh Bersmin) என்ற அமெரிக்க ஆய்வாளர், விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ள நோவா பற்றியும், அவன் வாழ்ந்திருந்ததாக நம்பப்படும் இடங் கள் பற்றியும், நோவாவின் மரக்கலம் நிலை கொண்ட அராரத் (Ararat) மலையையும் ஆய்வுகள் செய்யத் துணிந்தார். இந்த ஆய்வாளரின் முயற்சிகளையும், பயணத்தையும், அவர் சந்தித்த வர்களைப் பற்றியும், டிஸ்கவரி என்ற தொலைக்காட்சி ஊடகம் விலாவாரியாக ஒளி பரப்பியது. நோவா தொடர்புடைய

அனைத்து செய்திகளைப் பற்றியும் அவர் கூறிய உண்மைகள் பற்றியும் அந்த ஊடகம் படம்பிடித்துக் காட்டியது.

நோவா என்பவனுடைய தாயகம் எது? அவன் எங்கிருந்து தனது மரக்கலத்தில் புறப்பட்டான்? அவனது இனம் யாது? அவ்வினம் எந்த நாட்டில் வாழ்ந்திருந்தது என்பது பற்றிய கேள்விகள் அனைத்தும் இன்னும் கேள்விகளாகவே இருந்து கொண்டுள்ள நிலையில், மிகத் தெளிவாக அறியப்பட்ட, அரராத் என்ற மலையில்தான், நோவாவின் மரக்கலம் தரை தட்டியது என்ற விவிலியச் செய்தியின் அடிப்படையில், அரராத் மலைப்பகுதியும் ஆய்வுகளுக்குட் படுத்தப்பட்டது. அரராத் (Ararat) என்ற மலைத்தொடர், தற்போதைய ஆர்மீனிய நாட்டில் இருந்ததாக, விவிலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அக்கா லத்தில் அறியப்பட்டிருந்த மெசபத்தோமிய நாட்டிற்கு வடக்கே அப்பகுதி அறியப்பட்டிருந்தது. தற்காலத்திய நாடுகளின் எல்லைகளைக் கொண்டு கூற வேண்டுமானால், அது துருக்கி யின் கிழக்காகவும், ஈராக் நாட்டின் வடக்காகவும் ஆர்மீனியா அமைந்துள்ளது. மெசபத்தோமியா என்ற நாடு, தற்காலத்திய துருக்கியின் தென்பகுதியும் ஈராக் இணைந்த பகுதிகளே எனலாம். அரராத் என்று அழைக்கப்பட்ட மலைப்பகுதி இன்று அப்பெயரால் அழைக்கப்படவில்லை. விவிலியம் எழுதப்பட்ட எபிரேய மொழி மூலத்தில் அரராத் என்ற சொல், ஊராற்று (urart) என்றவாறு எழுதப்பட்டுள்ளது. அரராத் என்பது பிற்கால இலத்தீன் ஆங்கிலச் சொல் திரியாகும். ஊராற்று என்ற சொல், விவிலியத்தின் நடுவர்கள் (2 Kings, 19: 37) மற்றும் இசையா என்ற இறைவாக்கினர் (Is.37:38) குறிப்புகளில் காணப் படுகின்றது. கி.மு. 9 ஆம் நூற்றாண்டின் ஆசீரியப் பதிவுகள், ஆர்மீனிய நாட்டையே குறிப்பிடுகின்றன. மேற்கண்ட பதிவு களில் ஊராற்று என்ற சொல்லே காணப்படுகின்றது. விவிலிய ஆய்வாளர்கள் அரராத் மற்றும் ஊராற்று என்ற சொற்கள் எம்மொழிச் சொற்கள் என்றும், அச்சொற்களின் பொருள் என்ன வென்றும் விளக்கவில்லை, உண்மையில் அவை அறியப் பட இயலவில்லை (meaning uncertain) என்றே குறிப்பிடுகின் றனர். ஆர்மினியாவின் இருப்பிடம் பற்றிய குறிப்பை வரை படத்தில் காண்க.

அரபு மொழியில் எழுதப்பட்டுள்ள திருக்குர்ஆன், அரராத் மலையை, அல் ஊதி (Al - Judi) என்றவாறு குறிப்பிடுகின்றது.

(சுறா :44) அல் ஊதி என்ற சொல், பழைய அரபு மொழி இலக்கியத்தில் காணப்படவில்லையென்பர். நபிகள் நாயகம் காலத்திய அரபு மொழியில் அச்சொல் இடம் பெற்றுள்ளது. கிரேக்க மொழியில் ஜியோர்டி (Giordi) என்றும், ஜோர்டியாய் (Gordyai) என்றும் பதிவு செய்துள்ளனர். அல்ஊதி என்ற அரபுச் சொல், ஜியோர்டி என்ற கிரேக்கச் சொல்லின் திரியாக இருக்கலாம் என இசுலாமிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இச்சொற்களுக்கான பொருளும் விளக்கப்படவில்லை. அல் (al) என்ற அரபு முன்னொட்டுச் சொல்லுக்கு ஆங்கிலத்தில் the என்ற பொருளே அறியப்படுகின்றது.

ஊராற்று, அராரத், அல் ஊதி, ஜியோர்டி ஆகிய சொற்கள் யாவும் ஆர்மீனிய மலையையே குறிப்பிடுவதாக அறியப்படுவதால், ஊராற்று என்ற பழைய சொல்லையே முதற்சொல்லாக எடுத்துக் கொள்ளலாம். அயின்ஸ் வொர்த் (Ainsworth) என்பார். தனது Travels in the Track of the Ten Thousand என்ற நூலில், அராரத் என்ற இடம், நோவாவின் பயண வழிகளில் ஒன்றாக இருந்திருக்கலாம் என்றும், அப்பகுதியில் மரக்கலம் தரைதட்டியதற்கானச் சான்றுகள் இல்லையென்றும் கூறுகிறார். மரக்கலத்தின் உடைந்த துண்டுகள் அம்மலைப் பகுதியில் கிடைத்திருக்கலாம் எனவும் கருதுகிறார். விஸ்டன் (Whiston) என்ற ஆய்வாளர், அராரடியா (Araratia) என்பது ஆர்மீனியாவின் மலையின் பெயரல்லவென்றும், அது ஆர்மீனியாவின் ஒரு பகுதியே (Provnice) என்றும் தனது ஆர்மீனியாவின் வரலாறு (History of Armenia, p. 361) என்றும் கூறுகிறார். ஆகவே அராரத் என்ற பெயரிலேயே பல குழப்பங்கள் உள்ளனவென அறியலாம்.

கடைக்கழகக் காலத்திலிருந்தே ஆர்மீனிய நாட்டினர், தமிழகத்தோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் எனலாம். கிறித்துவ சமயம் தோன்றிய பிறகு, ஆர்மீனிய நாடு கிறித்துவ சமயத்தைத் தழுவியது. பிற்கால ஐரோப்பியர்களுடன் இந்தியாவில் வணிகப் போட்டியில் ஆர்மீனியரும் ஈடுபட்டனர். சென்னையிலுள்ள பாரிஸ் முனைப்பகுதியில், ஆர்மீனிய வணிகர்களின் குடியிருப்புகள் இருந்தன. ஆங்கிலேயர்கள், அப்பகுதியிலுள்ள ஒரு தெருவிற்கு ஆர்மீனியன் தெரு (Armenian street) என்றே பெயர் சூட்டியிருந்தனர். ஆர்மீனியன் தெரு, சென்னை மக்களால் அரண்மனைக் காரத் தெரு என்று

அழைக்கப்பட்டது. ஆர்மீனியன் - அரண்மனை என்ற சொற்களிடையே ஒலித் தொடர்பு உண்டேயன்றி, பொருள் தொடர்பு இல்லை.

ஆர்மீனியர்களின் முன்னோர் யாவர் என்ற கேள்விக்கு சரியான விளக்கங்கள் அளிக்கப்படவில்லையாயினும், அவர்கள் நோவாவின் பெயரன் வழிவந்த மக்களாகவே, ஆர்மீனியர்கள் கூறிக் கொள்கின்றனர். நோவாவின் பெயரன்களில் ஒருவனுடைய பெயராக அறம் என்ற சொல் விவிலியத்தில் காணப்படுகின்றது. அறம் என்பானுடைய மரபினர், யூப்ரதீஸ் - தைகிரீஸ் ஆறுகளுக்கு இடைப்பட்ட சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்திருந்தவராவர். இவர்கள் வாழ்ந்திருந்த அப்பகுதி, அறம் என்பவனின் பெயராலேயே படன் அறம் (Padan Aram) என்று அழைக்கப்பட்டது. படர்ந்திருந்த அறம்பகுதி என்பதே அதற்குப் பொருளாகும் - அறம் பகுதியில் வாழ்ந்திருந்தோர், அறமியர் (Arameans) எனப்பட்டனர். இம்மக்களில் ஒரு குழுவினர் வடக்கு நோக்கிச் சென்று வாழ்ந்திருந்த இடம் அறமீனியா எனப்பட்டது. அறம் (Aram) என்ற சொல்லை, பிற்காலத்தவர் அறாம் என மாற்றித் தவறாக ஒலித்து விட்டனர். அதனால் அச் சொல்லுக்கான பொருளையும் அவர்களால் அறிய இயலவில்லை. அறம் பகுதியினர் பேசிய மொழி அறம் வாய் (வாய் = மொழி) மொழி எனப்பட்டு, அறமாயிக் எனத் திரிந்தது. அறமியன் என்ற சொல், வடக்கே சென்றவர்களைக் குறிக்க, ஆர்மீனியன் எனப்பட்டது.

ஆய்வாளர்கள் அறமிய மக்களை செமிட்டிக் இன மொழியைப் பேசியவர்கள் என்றும், ஆர்மீனிய மக்களை இந்தியா - ஐரோப்பிய மொழியைப் பேசியவர்கள் என்றும் பிரித்துக் கூறிவிட்டனர். நோவாவுடைய பெயரனோடு ஆர்மீனிய இனம் தொடர்பு கொண்டிருப்பதாகக் கூறப்பட்டதால், நோவாவின் மரக்கலம் ஆர்மீனியாவில் தரைதட்டியது எனக் கூறியதற்கொரு காரணமாகும். உண்மையில் ஆர்மீனியாவில் நோவா தரை இறங்கியதற்கானச் சான்றுகளை இது வரை எவரும் தரவில்லை.

கி.பி. 300 ஆண்டுகளில் கிறித்துவம் ஆர்மீனியாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி.பி. 321 ஆம் ஆண்டில், தேவாலயம் ஒன்றும் கட்டப்பட்டது. (Armenian Orthodox Church) அத்தேவாலயத்தில், தொடக்க காலத்தில் ஜேம்ஸ் என்ற கிரேக்கப்

பாதிரியார் இருந்தார். அவரிடம் தேவதூதன் ஒருவன், நோவாவின் உடைந்த மரக்கலத்தின் துண்டு ஒன்றைக் கொடுத்ததாக தமது குறிப்பில் பதிவுசெய்துள்ளார். அத்துண்டை அராரத் மலையிலிருந்து அத்தேவதூதன் எடுத்து வந்துக் கொடுத்தாகக் கூறியுள்ளார்.

அம்மரத்துண்டு, இப்போதும் அந்தத் தேவாலயத்தில் புனிதப் பொருளாகப் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றது. அம்மரத்துண்டின் காலத்தை அறிவதற்கான அறிவியல் ஆய்வு முறைக்கு (Carbon 14) உட்படுத்த அப்பேராலயக்குழுக்கள் இசைவு தெரிவிப்பதில்லை. ஒரு மரத்துண்டு எவ்வளவு காலத்துக்கு மட்கிப் போகாமல் இருக்கும் என்பதை இன்றைய அறிவியல் விளக்குகின்றது. இயற்கையில் ஏற்படும் வேதியியல் மாற்றங்களால், ஒரு மரத்துண்டு ஈராயிரம் ஆண்டுகள் வரை அழிவுபடாமல் நிலைத்திருக்காது என்பது அறிவியலாளர்களின் கருத்தாக உள்ளது. கி.மு. 18000 - 12000 ஆண்டுகளில் நிகழ்வுற்றதாகக் கருதப்படும் வெள்ளக் காலத்திய மரத்துண்டு இன்றும் நிலைத்திருக்குமா என்பது அறிவியலாளர்களின் கேள்வியாகும்

கி.மு. 5000 ஆண்டுகளில் உடைந்த மரக்கலத்தின் துண்டுகள், நடுத்தரைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.பி. 2000 ஆண்டில் குசராத் பகுதியிலுள்ள காம்பே வளைகுடாப் பகுதியில் ஒரு மரத்துண்டு கண்டெடுக்கப்பட்டது. இம்மரத்துண்டின் அகவை கி.மு. 7500 என அறிவியலாளர்கள் முடிவு செய்துள்ளனர். கடலில் காணப்படும் மரத்துண்டுகள் பல்லாயிரம் ஆண்டுகள் வரையிலும் கூட அழியாமல் இருக்கும் என அறிவியல் கூறுகிறது. அதற்கான காரணம் யாதெனில், கடலுக்குள் விழுந்த மரத்துண்டின்மேல் சேறு மெழுகு பூசினாற்போல் படர்ந்துவிடுவதாலும், அச்சேற்றின்மீது கடற்கிளிஞ்சல்கள் அடைபோல் அப்பிக் கொள்வதாலும், கடல்நீரின் அரிப்பின்று ஒரு மரத்துண்டு காக்கப்படுவதாக அறிவியலார் கூறுகின்றனர். இதன் அடிப்படையிலேயே காம்பே வளைகுடாவில் கிடைத்த மரத்துண்டை ஆய்வு செய்து, அதன் காலம் கி.மு. 7500 என அறிவித்தனர். அது சிந்துவெளி மக்கள், உலைத்தளம் (லோத்தல்) என்ற துறைமுகத்தில் பயன்படுத்திய மரக்கலத்துண்டென உறுதி செய்து சிந்து வெளி நாகரிகத்தின் காலம் கி.மு. 7500க்கு முற்பட்டது என உறுதி செய்துள்ளனர்.

இதனை அப்போதைய மைய அரசும் ஏற்றுக்கொண்டு, 2002 இல் அதனை உறுதி செய்தது.

அந்த அளவில், நோவாவின் மரக்கலத்தின் துண்டு என்று சொல்லப்படும் பொருளை ஆய்வு செய்யாதவரை, அதனை எவரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. தேவதூதன் கொடுத்த மரத்துண்டு நம்பிக்கையின்பாற்பட்டது. .

நோவாவின் மரக்கலத்தில் மூன்று அடுக்குகள் இருந்ததாகவும், அடித்தட்டில் விலங்ககுகளும், மேல் தட்டில் பறவைகளும் அடைக்கப்பட்டதாக விவிலியம் கூறுகிறது. ஒவ்வொரு விலங்குகள், பறவையின் இணையோடு அவை அடைக்கப்பட்டன. உலகிலுள்ள விலங்குகள் பறவைகள் அனைத்தின் ஒவ்வொரு இணையும் அவ்வாறு அடைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லையெனலாம். உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும், நோவாவின் குடும்பம் தவிர்த்து அனைத்தும் அழிக்கப்பட்டன என்ற கருத்தில், புதிய உலகில் அவை மீண்டும் எவ்வாறு உயிர் பெற்றுப் பல்கிப் பெருகின என்ற கேள்விக்கு விடையளிக்கவே, அனைத்து விலங்குகளும் பறவைகளும் அடைக்கப்பட்டன என்ற கதை சொல்லப்பட்டது எனலாம்.

சுமேரியக் கதையைத் தழுவியே மெசபத்தோமியக் கதை சொல்லப்பட்டது என்பதாலும், இவ்விரு இனத்தாரும் பல கடவுளரை வணங்கி வந்ததாலும், இரு கதைகளுக்குமிடையே உள்ள ஒற்றுமை தெளிவாக உள்ளது. ஆனால் யூத மரபு ஒரு கடவுள் கொள்கையைக் கொண்டிருந்ததால், அக்கொள்கைக் கேற்றவாறு கதை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முன் சொல்லப்பட்ட கதைகளின் மாந்தன் சுரிப்பாக் (Shurippak) என்ற ஊரினன் என்று சொல்லப்படும் வேளையில், நோவா எந்த ஊரினன் என்ற விளக்கத்தை விவிலியம் தரவில்லை. மெசபத்தோமியக் கதையின் ஊட்நா பிஷ்டிம் என்ற வெள்ளமாந்தன், பறவைகளையும் விலங்குகளையும் தன் கப்பலில் ஏற்றிக் கொண்ட செய்தி காணப்படுகிறது.

மேலும் ஊட்நா, வெள்ளக்காலத்தின் இடையில் மரக்கலத்தில் பழுது ஏற்பட்டால் அதனைச் சரிசெய்ய பல தச்சர்களையும் உடன் அழைத்துக் கொண்டான். கடுமையான வெள்ளத்தின் காரணமாக மரக்கலம் உடைந்து போகவே, செய்வதறியாது தச்சர்கள் திகைத்துப் போயினர். ஆனால் திறமையான

மீகாமன் ஒருவன், மரக்கலத்தை எப்படியோ கரை சேர்த்து விட்டான். மெசபத்தோமியக் கதையில், மரக்கலம் நிசிர் (Nisir) என்ற மலை முகட்டில் தரைதட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. சுரிப்பாக் என்ற ஊரும், நிசிர் என்ற ஊரும் (மலையும்) மெச பத்தோமியாவிலேயே அறியப்படுவதால், அந்நாட்டிலேயே வெள்ளம் ஏற்பட்டு, அந்நாட்டிலேயே கப்பல் நிலை கொண்ட தாகக் கூறப்படுகிறது.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில், பாபிலோனைச் சுற்றியிருந்த பல ஊர்கள் அகழ்வாய்வுகளுக்குட்படுத்தப் பட்டன. கதைகள் கூறுவதுபோல், வெள்ளம் பெருக்கெடுத் தால் தோன்றும் மணல் மேட்டு வரிகள் (layers) அப்பகுதியில் எங்கும் காணப்படவில்லையென்று ஆய்வாளர்கள் கருதுகின் றனர். எனவே மெசபத்தோமியாவில் வெள்ளம் தோன்றி உலகை அழித்தது என்ற செய்திக்கான சான்றுகளும், வாய்ப்புகளும் அறவே இல்லையென்பது ஆய்வாளர்களின் முடிவு.

மெசபத்தோமியக் கதையில் ஆறுநாள் இரவும் பகலுமாக வெள்ளம் சூழ்ந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. விவிலியம் நாற்பது நாள் பகலும் இரவுமாக ஒரு செய்தியையும், ஓராண்டு என மற்றொரு செய்தியையும் தெரிவிக்கின்றது. புறாவை அனுப்பிய நிகழ்வு மெசபத்தோமிய, சுமேரிய, விவிலியச் செய்திகளில் காணப்படுகின்றன. நோவாவைப் போல, ஊட் நாவும் கடவுளுக்கு உயிர்க்காவு கொடுத்தான். விவிலிய ஆய்வா ளர்களே இவ்விரு கதைகளுக்கும் வரலாற்றுச் சான்றுகள் இல்லையென உறுதி செய்துவிட்டனர். கதையில் கூறப்பட் டுள்ள அளவில், மெசபத்தோமியாவில் எக்காலத்தும் வெள்ளப் பாழ் ஏற்பட்டதற்கானத்தடயங்கள் எவையுமில்லை. எப்போ தோ, எங்கேயோ ஏற்பட்ட வெள்ள நிகழ்வை, கற்பனை கலந்து கதையாக மாற்றியுள்ளனர் என்பது ஆய்வாளர்களின் கருத்து. ஆறுநாள் வெள்ளம் இறுதியாக 150 நாள் வெள்ள மாக பெரிதுபடுத்தப்படுவதிலிருந்து, ஒவ்வொரு நாகரிகமும் இக்கதையை மேலும் மேலும் மெருகேற்றியிருக்கின்றன என்ப தும் தெளிவாகின்றது.

விவிலியக் கதை, மெசபத்தோமியக் கதையைத் தழுவி யிருப்பதற்கான காரணம் யாதெனில், யூத மக்களின் முன்னோர் மெசபத் தோமியாவில் வாழ்ந்திருந்ததே எனலாம். யூத மரபி னரின் கதையும் இருவேறு நிகழ்வுகளைச் சுட்டுவனவாக

உள்ளன. மோசே யூத சமயத்தைத் தோற்றுவித்த பிறகு, யூத மக்களின் சமயப் பணிகளை தலைமையேற்று நடத்த குருக்கள் மரபு ஒன்றைத் தொடங்கி வைத்தார். யூதரின் பன்னிரு மரபு களில் இலேவியர் (Levi) என்ற மரபார் குருமரபாகப் பணிக் கப்பட்டனர். மோசேயின் காலத்துக்குப் பிறகு, அச்சமயத்தைப் பின்பற்றியவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. பலர் அச்சமயக் கொள்கைகளிலிருந்து விலகிப் போயினர். நாடோடி வாழ்க்கையில் தொடங்கப்பட்ட சமயம், நகர வாழ்க்கைக்கு மாறிய போது, சமயக் கொள்கைகளிலும் மாறுதல்கள் தோன்றின. மோசே அறிவித்த எகோவா என்ற கடவுளை அனைத்திற்கும் முதன்மைப்படுத்த வேண்டும் என விரும்பிய பற்றாளர்கள், ஒரு இயக்கமாகவே உருவெடுத்தனர். இவர்கள் எகோவியர் மரபு (Yahwist tradition) என்றழைக்கப் பட்டனர்.

மரக்கலத்தில் ஏழு தூய்மையான விலங்குகள் மற்றும் பறவையின் இணைகளும் (Pairs) ஒரு தூய்மையற்ற விலங்கின் இணையும் ஏற்றப்பட்டதாக எகோவிய மரபு கூறுகிறது. (ஆதி. 2:3). ஆனால் குருமரபு அனைத்து விலங்கு, பறவையினத்தின் ஒவ்வோரிணை மரக்கலத்தில் ஏற்றப்பட்டதாகக் கூறுகிறது (ஆதி. 7: 8 - 9) எகோவிய மரபு வெள்ளம் 40 நாள் சூழ்ந்திருந்த தாகக் கூறும் வேளையில், குருமரபு, வெள்ளம் 150 நாளில் உயர்ந்து, அடுத்த 150 நாளில் வடிந்ததாகக் கூறுகிறது. கூடுத லாக ஓராண்டும் 11 நாளும் வெள்ளம் நீடித்ததாகவும் கூறுகிறது (ஆதி. 7:24; 8:3) மரக்கலத்தின் அளவுகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன (ஆதி. 6:15) மழை வானத்தை பெயர்த்துக் கொண்டு மழையாகப் பொழிந்தது பற்றிய செய்திகளிலும் வேறுபாடுகள் உள்ளன. (ஆதி. 7:11) கடவுள் வெள்ளத்தை உருவாக்கிய செய்திகளும் மாறுபடுகின்றன. (ஆதி. 6:5 - 7: 8:21) மேற்கண்ட இரு மரபுகளில் எகோவியர் மரபே முதலிலும் (கி.மு. 10 - 9 நூற்றாண்டுகள்) குரு மரபு பிறகும் (கி.மு. 6 - 5 நூற்றாண்டுகள்) அறியப்படுகின்றன. இரு மரபுகளும் மரக் கலத்திலிருந்த உயிரினங்கள் மற்றும் மக்களைத் தவிர்த்து, உலக முழுவதிலுமான உயிரினங்கள் அழிக்கப் பட்டதாகக் கூறுகின்றன.

ஓரினத்தினர் கூறும் வெள்ளச் செய்திகளே முரண்பாடு களுடன் காணப்படும்போது மற்ற நாகரிகங்கள் கூறும் செய்தி

களின் தன்மைகளை ஓரளவுக்கு அறியலாம். எனவே வெள்ளக் கதையின் கரு ஒன்றாக விருந்த போதிலும், அதன் போக்கு மாறுபாடுகளுடன் காணப்படுகின்றன. மெசபத்தோமியாவி லேயே நான்கு வகையான வெள்ளக் கதைகள் இருப்பதால், இக்கதைகளுக்கான மூலக்கதையொன்று இருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. அம்மூலக் கதை எங்கிருந் தது என்பதை இதுவரையிலும் எந்த ஆய்வாளரும் கண்டு பிடிக்கவில்லை.

ஷியான் (shian) என்ற யூத சமய குரு தற்போது எருசலேம் நகரில் வாழ்ந்து வருகிறார். அவர் தோராவில் (விவிலியத்தில்) சொல்லப்படும் வெள்ளக் கதை கி.மு. 800 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டதாகக் கூறுகிறார். மேலும் அராரத் என்ற மலைப் பகுதியில்தான் மரக்கலம் தரை தட்டியது என்பதற் கானச் சான்றுகள் இல்லையென்றும், அராரத் மலைக் கொள்கை தவறு என்றும் ஷியான் மறுக்கிறார். (ஜோஷ் பெர்ஸ் மின் - ஷியான் உரையாடல், டிஸ்கவரி தொலைக் காட்சி)

வெள்ளப் பேரழிவு, மெசபத்தோமியாவில் நிகழவில்லை என்று புவியியலார் மறுக்கும் அதே வேளையில், டாக்டர் சோனியா கல்வாரி (Dr. Sonia Calvary) என்ற புவியியலாளர், கி.மு. 6000 ஆண்டுகளில் நடுத்தரைக் கடற்பகுதியில் ஒரு சுனாமி தோன்றியதை உறுதிப் படுத்துகிறார். இது கிரேக்கம், இத்தாலி, வட ஆப்பிரிக்கா, சிரியா, பாலத்தீனம் ஆகிய நாடு களில் உணரப்பட்டதாகக் கூறுகிறார். உலகப்புகழ் பெற்ற எட்னா என்ற எரிமலை (இத்தாலிக்குக் கீழேயுள்ள தீவு), கி.மு. 8500 ஆண்டுகளில் வெடித்து, ஒரு பெரும் மலையையே நடுத்தரைக் கடலுக்குள் தள்ளியதால் எழுந்த பேரலைகள், நடுத்தரைக் கடலை யொட்டிய நாடுகளில் உணரப்பட்டன என்கிறார். அப்பேரலைகள், வெள்ளக் கதையில் கூறப்பட்டது போன்ற அழிவுகளை ஏற்படுத்தவில்லை என்றும் கூறுகிறார்.

எட்னா எரிமலை நாளும் காக்கும் நெருப்புக்குழம்புகள், கடலில் வீழ்வதால், அவை உடனடியாகக் குளிர்ந்து பாறை களின் அடுக்குகளாக மேலும் உயர்கின்றன. ஒரு குறிப்பிட்ட அளவு உயர்ந்த மலை, மேலும் மேலும் அடியில் கொடுக்கப் படும் அழுத்தத்தால், பெயர்ந்து கடலில் வீழ்கிறது. இவ்வா றான வீழ்ச்சி கடல் அலைகளைப் பேரலைகளாக மாற்றி சுனாமியாக உருவெடுக்கின்றது என்பது டாக்டர் சோனி

யாவின் கருத்து. இச்சுனாமி, சிரியா மற்றும் லெபனான் பகுதிகளை அழித்ததாகவும் கூறுகிறார்.

எட்னா எரிமலை ஆய்வக அறிவியலாளர் டாக்டர் மரிய தெரசா (Dr. Maria Teresa), தனது அறையிலுள்ள கணினியில் முன் சொல்லப்பட்ட சுனாமியின் தோற்றம், அதன் விரிவு, விளைவுகளை விளக்கங்களாக (மாடல்) அமைத்துள்ளார். எட்னா எரிமலையின் தாக்கத்தால் கடலில் விழுந்த மலை, 120 அடி உயர அலைகளைத் தோற்று வித்ததாகக் கூறுகிறார். நடுத்தரைக் கடலிலில் இருந்த கிரீஸ் உள்ளிட்ட பல தீவுகள் மூழ்கிப் போயின. பாலத்தீனத்தின் மேற்குக் கடற்கரை நகர மான அட்லிட்யாம் (Atlityam) என்ற துறை முக நகரம் முற்றி லுமாக கடலில் மூழ்கிப் போனது. அந்நகரின் இடிபாடுகளும், உடைந்த மரக்கலங்களும் இன்றும் கடலுக்கடியில் காணப் படுவதாக மரிய தெரசா கூறுகிறார்.

டாக்டர் மரிய தெரசாவின் கருத்தை எகூட் கலிலீ (Ehud Galilee) என்ற ஆழ்கடல் ஆய்வாளர் ஏற்றுக் கொள்கிறார். எட்னா எரிமலை வெடிப்பு 1000 கி.மீ. அளவையும் தாண்டி, மேலும் 500 கி.மீ வரையிலான நிலப்பகுதிகளை அழித்தது என்று கலீலீ கூறுகிறார். அட்லிட்யாம் என்ற, கடலில் புதை யுண்ட நகரத்தை 1985 ஆம் ஆண்டு ஆழ்கடலில் அகழ்வாய்வு செய்த கலீலி, அங்கு புதையுண்டிருந்த மரக்கலங்களையும் கண்டுபிடித்தார். மேலோட்டமாகக் கற்பாறைகளாகக் காணப்பட்ட இடத்தில், ஏராளமான மனித எலும்புகளும், விலங்கின் எலும்புகளும் கிடைத்தன. அவ்வெலும்புகளை களிமண்ணும் கிளிஞ்சல்களும் மூடியிருந்தன. பழைய கோயில் ஒன்று வட்ட வடிவில் இருந்தது. பாழடைந்த கிணறு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தெல் அவிவ் (Tel Aviv) மருத்துவக் கல்லூரியில் வைக்கப்பட் டுள்ளன.

மேற்கண்ட ஆய்வு தொடங்கிய போது, மனித மற்றும் விலங்கின் எலும்புகள் அறியப்பட்டதால், பலரும் அது நோவாவின் மரக்கலச் சிதைவுகளே எனக் கருதினர். அக் காலத்தில் நடுத்தரைக் கடல் நாடுகளிடையே ஆடு, மாடு, புரவி போன்ற விலங்குகள் மரக்கலங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன வென்றும், அவ்வாறு சென்ற மரக்கலச் சிதைவுகளே அவை யென்றும், வெள்ளக்கால நிகழ்வுக்கும் அட்லிட் யாம் பகுதி

கண்டுபிடிப்புகளுக்கும் தொடர்பில்லை என்றும் கலீலீ கருதினார்.

கலீலீயின் கருத்தை டாக்டர் இசுராயெல் ஷெர்ஸ்வெர்ஸ் (Dr. Israel Shersvers) என்பார் உறுதி செய்கிறார். அட்லிட் யாம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடுகள் உடைந்த வாறு காணப்படுகின்றன. சுனாமி வெள்ளத்தால் தாக்கப்பட்ட வர்களுக்கு ஏற்படும் எலும்பு முறிவைப் போன்று அவை காணப்படவில்லை என்று கருதினார். அட்லிட்யாம் பகுதியில் காணப்பட்ட உடைந்த மரக்கலத் துண்டுகள் வரலாற்றுக் காலத்துக்கு சற்று முன்பாக ஏற்பட்ட நிகழ்வு என்றும் கருதி னார். இதன்மூலம் நடுத்தரைக் கடற் பகுதியில் பெருவெள்ள நிகழ்வு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்பதும் டாக்டர் இசுராயெல்லின் கருத்தாகும்.

அட்லிட் யாம் சிதைவுகள், நோவாவின் மரக்கலச் சிதை வுகளன்று என எபிறேயமொழிப் பல்கலைக் கழகத்தில் பணி யாற்றும் டாக்டர் லியேரா கோல்ஸ்கா (Dr. Liera Kolska) வும் உறுதி செய்தார். நடுத்தரைதக் கடலில் காணப்பட்ட செப் பறைத்தீவு என்ற சைப்ரஸ் தீவுக்கருகிலும் சிதைந்த மரக்கலத் துண்டுகளுடன் விலங்கு எலும்புகளும் சிதறியிருந்த இடத்தைக் கண்டு பிடித்தனர். எனவே அம்மரக்கலம் விலங்குகளை வணிகப் பொருட்களாக ஏற்றிச் சென்றதே என்பது லியேராவின் கருத்து.

மேற்கண்ட பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் டாக்டர் சீன் கிங்ஸ்லி (Dr. Sean Kingsley), விலங்குகளை ஏற்றிச் சென்ற மரக்கல இடிபாடுகளிடையே தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் மூன்று மாந்த எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளன. என்பதால், பகைவரால் மரக்கலங்கள் தாக்கப்படுதும், கொள்ளையடிக்கப்படுவதும் பொதுவான நிகழ்வுகளே என்ற அடிப்படையில், சில மரக்கலச் சிதைவுகள், பகைவரால் அழிக்கப்பட்டவை என கிங்ஸ்லி கருதுகிறார். நோவாவின் மரக்கலம் நடுத்தரைக் கடற்பகுதியில் அறியப்படுவதற்கான சான்றுகள் எவையுமில்லை எனவும் கூறுகிறார். விவிலியம் தரும் செய்திகளின்படி, மிகச் சிறந்ததோர் மரக்கலத்தை நோவா கட்டி முடித்துள்ளார். விவிலிய விளக்கங்கள் நோவாவை ஒரு துறவி, மருத்துவர், கவிஞர், மைமாயம் செய்பவர், பழங் குடித் தலைவன், பேரறிஞன் என்றவாறு பன்முக மாந்தனாகக் காட்டுகின்றன என்பதும் கிங்ஸ்லியின் கருத்தாகும்.

நடுத்தரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட நில அகழ்வாய்வுகளாலும், கடல் அகழ்வாய்வுகளாலும், விவிலியம் குறிப்பிடுவதைப் போன்றதொரு பெருவெள்ளம், அப்பகுதியில் நிகழவில்லை என்பதே பெரும்பாலான அறிஞர்களின் கூற்றாகும். மேலும் வெள்ளம் வடிந்த போது, நோவாவின் குடும்பமும், காக்கப்பட்ட உயிரினங்களுமே புதிய உலகின் வித்துக்களாக அமைந்திருந்தன என்ற கருத்தை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. உலகின் பல பகுதிகள் பெரு வெள்ளத்தால் அழிக்கப்பட்ட நிலையிலும், மற்ற பல பகுதிகளில் மக்களும் உயிரினங்களும் பாதுகாப்பாக வாழ்ந்திருந்தனர் என்பதை தற்காலப் புவியியலாளர்கள் உறுதிப் படுத்துகின்றனர். மேலும் நோவா என்பானின் குடும்பம் மெசபத்தோமியாவில் குடியேறிய போது அங்கு ஏற்கனவே வாழ்ந்திருந்த மக்களும் அறியப்பட்டுள்ளனர். கி.மு. 75000 ஆண்டுகளிலேயே மெசபத்தோமிய - பாலத்தீனப் பகுதிகளில் மக்கள் வாழ்ந்திருந்ததை, தற்கால ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

எனவே, நோவா கதையில் அறியப்படும் செய்திகளின்படி,

1. உலகைப் பெருவெள்ளம் சூழ்ந்து, அதன் பெரும்பாலான பகுதிகளை அழித்தது உண்மையான, புவியியல் சான்றுகளைக் கொண்டுள்ள நிகழ்வே என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
2. உலகின் பலரும் வெள்ளக் காலத்தில் தப்பிப் பிழைத்துள்ளனர்.
3. தப்பிப் பிழைத்தவர்கள் பல்வேறு நாடுகளில் குடியேறினர்.
4. குடியேறிய நாடுகளில் தங்களது பழைய இன, மொழி, நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளை விரிவு படுத்திக் கொண்டனர்.
5. குடியேற்ற மக்கள் பல்வேறு குழுக்களாகப் பல்கிப் பெருகி, பல்வேறு இடங்களில் வாழத்தலைப்பட்டபோது, தங்களது முன்னோர்கள் தப்பிப்பிழைத்த கதைகளை தலைமுறை தலைமுறையாகக் கூறி வந்துள்ளனர். ஒவ்வொரு தலைமுறையும் மேலும் பல புதிய செய்திகளை இணைத்துக் கொண்டுள்ளனர்.
6. உலகின் பல் வேறு நாடுகளில் வெள்ளக் கதை அறியப் படுவதால், ஓரினமக்களே, பல்வேறு நாடுகளில் சென்று குடியேறியுள்ளனர் எனக் கருதலாம்.
7. நோவா என்ற மாந்தன், வெள்ளத்தினின்று தப்பிப்பிழைத்த ஒட்டு மொத்த மக்களின் உருவகமாகவே சொல்லப்படுகிறான்.

நோவா என்பது தனிப்பட்ட மாந்தனைக் குறிக்காது, மக்களையே குறித்தது.

8. சமய நம்பிக்கைகள், கடவுளின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில், தங்களுடைய கடவுளை மக்கள் மேலும் நம்பி ஏற்றுக்கொள்ளும் வகையில், நோவா கதை பின்னப்பட்டுள்ளது.

எனவே, நோவா கதையென்பது ஒரு நிகழ்வேயன்றி, தனிப்பட்ட ஒருவனின் வரலாறு அன்று என்பது தெளிவாகின்றது. உலகின் பல சமயங்கள் பல்வேறு பெயர்களைக் கொண்டு, ஒரே நிகழ்வை வெளிப்படுத்துவதால், அந்நிகழ்வு பற்றிய மூலச் செய்தி அல்லது மூலக்கதை ஒன்று இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகின்றது. அம்மூலக்கதை எந்த நாட்டில் சொல்லப்பட்டது, எம்மொழியில் சொல்லப்பட்டது என்பதை அறிய இயலவில்லை. இதுவரையிலும் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வெள்ளக் கதைகளையும் உன்னிப் பார்த்து ஆய்வு செய்யுங்கால் உண்மையான கதையின் மூலம் தெரியவரும். ஆனால் அவ்வாறான ஆய்வுகள் இதுவரை எவராலும் மேற்கொள்ளப்படவில்லை. இதுவரை நோவாபற்றிய செய்திகளை அறிந்து அதனை வரலாற்றோடு தொடர்புபடுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. நோவா வரலாற்று மாந்தனா அல்லது கற்பனை மாந்தனா என்பதை மேற்கித்திய ஆய்வாளர்களால் அறிய இயலவில்லை.

11. நோவாக பற்றிய புதிய கண்ணோட்டம்

வெள்ளம் பற்றிய கதைகள் இதுவரையில் பல நாகரிகங்களில் அறியப்பட்டிருந்தாலும், அவைகளில் 1. மெசபத்தோமியக் கதை, 2. சுமேரியக் கதை, 3. ஆரியக் கதை, 4. விவிலியக் கதை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்யலாம். மேற்கித்திய ஆய்வாளர்கள் தங்கள் முயற்சியில் தோல்வி அடைந்ததற்கான கரணியங்கள் பின்வருமாறு

1. வெள்ளக் கதையில் மேற்கித்திய ஆய்வாளர்கள் பலருக்கு வரலாற்று நோக்கு இல்லாமல், சமயப் பற்றே மிகுந்து காணப்பட்டது. எவ்வாறேனும் நோவாவை ஒரு வரலாற்று மாந்தனாக மெய்ப்பிக்க விரும்பினர்.

2. மெசபத்தோமியாவே வெள்ளக் கதைகளின் மையமான நாடு என்ற தவறான சிந்தனை. அத்தவறான எண்ணத்தின் அடிப்படையிலேயே ஆய்வுகள் மேற்கொண்டது.

3. கதையில் சொல்லப்படும் நிகழ்வுகளுக்குரிய நாடு அல்லது இடம்பற்றிய ஆழ்ந்த பார்வை இல்லாதது.

4. கதையில் அறியப்படும் மாந்தப் பெயர்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் இயற்கையான புவியியல் தொடர்பான சொற்கள் எம்மொழியைச் சார்ந்தவவை என அறியத் தவறியது. வெள்ளக் கதைகளில் அறியப்படும் பல மெசபத்தோமிய, சுமேரிய, எபிறேய மொழிச் சொற்களின் பொருளை இதுவரையிலும் அறிய இயலாதது (இவ்வாறு பொருள் அறிய இயலாத சொற்களின் பட்டியல் மிக மிக நீளமானது. ஆனாலும் அந்த உண்மைகளை மறைக்காமல், பொருள் தெரியவில்லை என பல சொற்களுக்கான விளக்கங்களில் குறிப்பிட்டிருப்பது, அடுத்த கட்ட ஆய்வுகளுக்கு அடிப்படைகளாக உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை)

5. உலக வரலாற்றை இதுவரையிலும் மேற்கித்திய ஆய்வாளர்களால் அறிய இயலாமற் போனது.

6. உலக வரலாற்றை இடையில் அல்லது கடைப் பகுதியில் நுழைந்து நோக்கியது.
7. மொழிகள் பற்றிய தெளிவான சிந்தனைகள் இல்லாதது.
8. ஆய்வுகளுக்கு மேற்கித்திய ஆய்வு முறைகளைப் பயன்படுத்தியது. (மேற்கித்திய ஆய்வு முறை தொன்மைக் கால வரலாற்றைத் தோண்டி எடுக்க உதவாது என்பதை, அண்மையில் வெளியிடப் பட்ட ஆப்பிரிக்க வரலாறு எழுதப்பட்ட போது உணரப்பட்டது. ஆப்பிரிக்க வரலாற்றைத் தொகுக்க, ஆங்கில ஆய்வு முறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன்விளைவாக உண்மையான வரலாறு இன்று வெளிப்பட்டுள்ளது)

11.1 மெசபத் தோமியக் கதை விளக்கம்

மெசபத்தோமியாவில், கி.மு. 75000 ஆண்டுகளிலேயே மக்கள் வாழ்ந்திருந்ததாக அறிவியலார் கூறுகின்றனர். அச் செய்தியை சமய நூல்கள் எவையும் கூறவில்லை. வெள்ளக் காலத்துக்குப் பிறகு குடியேறிய மக்கள் பற்றிய செய்திகளே சமய நூல்களில் இடம் பெற்றுள்ளன. தொடக்கத்தில் வாழ்ந் திருந்த மக்கள் உணவுதேடி அலையும் நாகரிகமற்ற மக்களாகவே இருந்துள்ளனர். கி.மு. 10000 ஆண்டுகளில் வேளாண்மைத் தொழில் மெசபத்தோமியாவில் அறிமுகப் படுத்தப்பட்டது. இத்தொழிலை அங்கு மேற்கொண்டவர்கள், வெள்ளக் காலத் துக்குப் பிறகு அங்கு குடியேறியவர்களே என அறியலாம். எனவே மெசபத்தோமிய வேளாண்தொழிலைக் கருத்தில் கொண்டு, வெள்ளக் காலம் கி.மு. 10000 ஆண்டுகளில் நிகழ் வுற்றது எனக் கருத இடமுண்டு. பனி உருகி கடல் நீர் உயர்ந்து, உலகில் பெருவெள்ளங்களைத் தோற்றுவித்த காலம் கி.மு. 18000 - 10000 என அறிவியலாரும் புவியியலாரும் உறுதி செய்வ தாலும், மெபசத்தோமியாவில் வேளாண் தொழில் அறிமுகம் செய்யப்பட்ட காலம் ஒற்றுமைப் படுவதாலும், குடியேற்ற மக்களின் காலம் கி.மு. 12000 - 10000 ஆண்டுகள் என முடிவு செய்யலாம்.[45]

சமய நூல்களின் செய்திகளின்படி, நோவா என்பானுடைய மக்களே மெசபத்தோமியாவில் குடியேறி, அங்கு பல்கிப் பெருகி, பிறகு பலதிசைகளிலும் சென்று வாழ்ந்தனர் என்பது அறியக்கிடக்கின்றது. எனவே, மெசபத்தோமியா என்ற பெயர் குடியேற்ற மக்களால் சூட்டப்பெற்ற பெயரே எனவும்

கருதலாம். மெசபத்தோமியா என்ற சொல்லுக்கு இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட மேட்டு நிலம் என்பதே பொருளாகும். Meso - Pato - Mia என்ற மூன்று சொற்களில், Pato என்ற சொல், படர்ந்து விரிந்த மேட்டுநிலம் என்ற பொருளைக் குறிப்பது. பிற்காலத்தில் அதே பகுதி படன் (Paddan) என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது.

படன் (paddan): படர்ந்து விரிந்துள்ள, அகன்ற

படன் அறம் (Paddan Aram): இரட்டையாறுகளுக்கு இடைப்பட்ட பகுதி.

இப்பகுதியின் வடக்கு தெற்குப் பகுதிகள் இணைந்ததே மெசபத்தோமியா எனப்பட்டது.

Pato என்ற இடைச் சொல்லின் மூலமும் வேரும் தமிழில் உள்ளது.

பள் - படு - பட - படர்: விரிந்தது, பரந்தது, படர்ந்தது.

படகம் = விரிந்த தோல் கருவி, பறை. படகம் → பட்க எனத் திரிந்தது (ச)

படகம் = முழவுக் கருவிகளில் ஒன்று (சிலம்பு 3: 27 உரையில்)

படம் = விரிந்த துணி, துணியில் எழுதப்பட்ட ஓவியம், பாம்பின் விரிந்த கழுத்து.

படாம் = யானையின் முகப்புத் துணி. (கலித்தொகை, 89)

கடம் - கடாம் என்றும் சொல்லப்பட்டது போல், படம் - படாம் ஆனது.

படம் - பட்டம் = விரிந்த பரப்புள்ள துணி, தகடு, காற்றாடி என விரியும்.

பட்டி = தட்டையான, பரந்த, விரிந்த

= பட்டுவதால் விரியும் பொருளை உருவாக்கும் இடம் பட்டறை.

பட்டி = பரந்து விரிந்த குடியிருப்புப் பகுதி, விரிந்த பரப்புள்ள துணி.

பட்டி - பட்டம் = துணி.

பட்டம் = துணியைச் சீலையாகக் கொண்ட மரக்கலம்.

பட்டம் + அணம் = கடல் மட்டத்திலும் மேடான ஊர். பட்டம் + அணம் = பட்டணம்.

பட்டணம் = துறைமுக நகரம், நெய்தல் நிலத்து நகரம், பொதுவாக மேட்டுநிலத்தூர்.

பட்டி -பட்டிகை =தோணி.

பட்டணம், பட்டினம் என்றும் சொல்லப்பட்டது. பட்டி = மரக்கலம், தெப்பம்.

பதநீர்ப் படுவில் பட்டினம் படரின் - சிறுபாணாற்றுப் படை, 153 பிற்காலத்தில் பட்டினம் துறைமுக நகரையும், பட்டணம்

உள்நாட்டு நகரையும் குறிக்கும் சொற்களாயின.

பட்டி (தமிழ்) படோ (மெசபத்தோமியம்)

பெத் (எபிறேயம்) → பாத் (அரபு)

பெத் - லெகம், பெத் - சாயிதா = எபிறேயச் சொற்கள், ஊர்கள்

வாலாஜாபாத், அய்தராபாத் = அரபுச் சொற்கள், ஊர்கள்.

படல் = பரந்த இடத்தை அடைக்கும் முள்வேலி.

படல் - படர் - படன் = ஈற்றுப் போலி.

கடம் - கடன்; நடம் - நடன்; புலம் - புலன்; இடம் - இடன்; படம் - படன்.

படன் என்ற தமிழ்ச் சொல், படன் (Paddan) என்றே மெசபத்தோமியாவில் ஓர் இடத்தைக் குறித்தது. படன் அறம் = அறம் என்பானின் மரபினர் வாழ்ந்திருந்த பகுதி.

படன் - படோ என்றும் திரிந்தது. படோ (Pato) = விரிந்த இடம்.

படை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, பரப்பிவைக்கப் பட்டுள்ள பொருட்கள் என்பதே பொதுப் பொருளாகும்.

படை = பலவாறாக விரித்துவை.

படையல் = அப்பொருட்களை கடவுளுக்கு அளித்தல்.

படை = பரந்து நிற்கும் சேனை.

படை = படைப்பொருள் (offerings), சேனை (army)

படைத்தலைவன் - பூசாரி, சேனைத் தலைவன்.

படை என்ற தமிழ்ச் சொல், படேசி என்று திரிந்தது.

படை - படேசி = பாபிலோனியப் பூசாரி (Priest), மன்னன் (king)[46]

படை - படா என்று எகிப்திய மொழியில் திரிந்தது.

படா (எகிப்தியம்) = சமயத் தலைவன், மன்னன்.

படை (தமிழ்) - படேசி (மெசபத்) - படா (எகிப்தியம்)

படை என்ற தமிழ் மூலச் சொல், படோ (Pato) என்றவாறு அறியப்பட்டு பொடா (Pota) என்று, அந்நாட்டுப் பெயரின் இணைச் சொல்லாகியது.

Meso - P ota - Mia = மெசோ + பொடா + மியா - மெசபட்டோமியா.

முதற் சொல்லான மெசோ (Meso), மிசை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாகும்.

மிசை = மேல், மேலே, உயரே எனவிரியும்.

மலர்மிசை ஏகினான் - திருக்குறள்.

மிசை, மெசோ எனத் திரிந்தது.

மீ என்ற தமிழின் வேர்ச் சொல்லுக்கு உயர்வு என்பதே பொருளாகும்.

மீன் = உயரத்தில் ஒளிரும் உடு.

நீரில் காணப்படும் மீன், நீரில் மின்னுவதால், உடுவை உருவகப் படுத்தும் சொல்லாகும்.

மீன் + அம் = மீனம் = அம், நீரை அல்லது தண்மையைக் குறித்தது.

மீனுக்கு சமற்கிருதத்தில் சொல் இல்லை. மச்ச என்பது தமிழ் மூலத்தைக் கொண்ட பிற்காலச் சொல்லாகும்.

மீ மிசை = மென்மேலும் உயர்ந்த.

மிசை (த) → மெசோ (Meso)

படர் (த) → பொடா (Poto)

மீ (த) → மீயா (mia).

மெசபோடாமியா என்ற பெயர், தமிழ் மூலத்தினின்றும் திரிந்து, தமிழ்ப் பொருளையே தரும் சொல்லாகும்.

ஊட் நா பிஷ்டிம் (utnapishtim): இச் சொல் அல்லது பெயருக்கான பொருளை எவரும் தரவில்லை. இவன் வெள்ளத்திலிருந்து கடவுளால் காக்கப்பட்ட மாந்தனாவான். இப்பெயரிலும் மூன்று தமிழ்ச் சொற்கள் மறைந்து கிடப்பதைக் காணமுடியும்.

ஊட் - நா - பிஷ்டிம் என்றவாறு பிரியும்.

ஊற்று என்ற தமிழ்ச்சொல், பொதுவாக நிலத்தினின்று பொங்கி யெழும் நீரைக் குறிப்பதாகும். ஊர் - பெருகுதல்; ஊர் உண்ணி = ஊரார் அருந்தும் நீர் அல்லது கிணறு. ஊர்உண்ணி, ஊருணி யாயிற்று.

ஊர் - ஊர்தல் - ஊற்று = நீரைக் கீழே கொட்டு.

ஊற்று = நிலத்தினின்றும் ஊறும் நீர். இது கிணறு, குளம், ஏரி, கடல் ஆகியவற்றையும் குறித்த தென்க.

நீர் என்ற தமிழ்ச் சொல், பீர் என செமிட்டிக் மொழிகளில் திரிந்தது.[48]

நீர் + ஊற்று = நீரூற்று. பீர் + ஊற்று = பீரூற்று.

பீரூற்று என்ற சொல், பெய்ரோத் எனத் திரிந்து, நீரூற்றையே குறித்தது. பெய்ரோத் - பெய்ரூட் என்றவாறு திரிந்தது.

பெய்ரூட் = நீரூற்றுகள் அறியப்பட்ட இடம்.

பெய்ரூட் = அதுவே மக்கள் குடியேற்றப் பகுதியாகி, ஊராகி, நகரமாயிற்று.

பெய்ரூட் = இன்றைய இலெபனான் நாட்டின் தலைநகரம்.

பெய்ரூட் என்ற சொல்லுக்கு, நீரூற்றுகள் நிறைந்த இடம் என்பதே பொருளாகும்.

ஊற்று என்ற சொல், ஊட் (வே) எனத் திரிந்தது.[50]

நா என்ற தமிழ்ச் சொல்லுக்கு நீளமான என்பதே பொருளாகும்.

நா = நீளமான (வாயின்) உறுப்பு. நா - நாவு - நாக்கு.
நா = நீளமான ஒளிக்கதிர். நா +இரு = ஞாயிறு.
நா - நாவு - நாவி = நீளமான மரக்கலம் அல்லது கப்பல்.
நா என்ற இடைச் சொல் (Na) மரக்கலத்தையே குறித்தது.

பட்டம் என்ற தமிழ்ச் சொல் மரக்கலத்தை அல்லது படகைக் குறிப்பது.

நா பட்டம் = நீளமான மரக்கலம். பட்டம் பிஷ்டம் எனத் திரிந்தது.

ஊற்று + நா + பட்டம் என்ற தமிழ்ச்சொற்கள், நீரில் மிதக்கும் நீளமான மரக்கலம் என்ற பொருளைத்தருவதே. இச் சொற்களே ஊட் + நா + பிஷ்டிம் எனத் திரிந்தன. எனவே, ஊட்நாபிஷ்டம் என்பது ஒருவனுடைய பெயர் என்று கூறுவதைக் காட்டிலும், நீரில் மிதந்து செல்லும் மரக்கலம் என்பதே சரியான சிந்தனை யாகும்.[57] மரக்கலத்தின் பெயரால், மரக்கலத்தில் சென்றவனுடைய பெயராகியது.

நாவி என்ற மரக்கலத்தைக் குறித்த சொல், நோவா (எபிறேயம்) எனத் திரிந்ததை ஒப்பு நோக்குக.

யா என்ற கடவுள்: மெசபத்தோமியாவில் அறியப்பட்ட பல கடவுளரில் யா என்பவனும் ஒருவனாவான். இவன் நீர்கடவுளாகவே கருதப்படுகிறான். மாந்தத்தலையும் மீன் உடலையும் கொண்ட இக்கடவுள், கடல் தெய்வமாவான் (Sea god - வாரணனைப் போல) இக்கடவுளே பாபிலோனியருக்கு மொழியையும், கல்வி யையும், கவின் கலைகளையும் கற்றுத் தந்த தெய்வமாவான்.[52] இவனைத் தமிழ்க் கணியனாகவே பாவாணர் கருதுகிறார். தமிழகத்தினின்றும் கடல் வழியே மேற்கே சென்ற தமிழ்க் கணியன் ஒருவனே, யா என்ற கடவுளாக உருவகப்படுத்தப் பட்டுள்ளான்.

யா என்பது பழந்தமிழ்ச் சொல்லாகும். தமிழில் அச்சொல் லின் பயன்பாடு பெரிதும் உணரப்பட்டு, பிற்காலத்தில் அச்சொல் கைவிடப்பட்டது. இருப்பினும் குறுந்தொகை விளக்கும் பொருளில் யா என்பதற்கு நீர் என்ற பொருளே அறியப் பட்டுள்ளது. யாமரம் என்ற பாலை நிலத்து மரம், தனது பட்டைகளில் பெருமளவில் நீரைத் தேக்கிவைத்துக் கொண்டிருப்பதால் அது யாமரம் எனப்பட்டதாக, குறுந் தொகை விளக்குகிறது.[53]

யா என்ற சொல் தென்திசையைக் குறிப்பதாக திருமந்திரம் கூறுகிறது. கடலில் மாண்டு போன தம் மக்களை (தமிழரை) எண்ணிப் பரிவு கொண்ட சிவன், அம்மக்கள் மறுஉலகில்

இனிதுவாழ, யாமன் என்பானை, அவர்களுக்கு வேந்தனாகப் பணித்தான்.

தென்திசைக் கொரு வேந்தனாம் – திருமந்திரம்.[54]

அவ்வேந்தன் யாமன் எனப்பட்டான். இச் சொல்லுக்கு தென்திசைக் காரன் என்பதே பொருளாகும். ஆகவே யா என்ற தமிழ்ச் சொல், தென்திசையையும் குறித்தது எனலாம். யா என்ற தமிழ்ச் சொல்லின் நீட்சியே அயம் என்பதாகும். அயம் = குளம், ஏரி, கடல். யா என்ற சொல்லை மேலைநாட்டுச் செமிட்டிக் மொழி பரவலாகப் பயன்படுத்தியுள்ளது. மெசபத்தோமியக் கடவுளரின் பெயர்கள் தமிழ் மூலத்தையே கொண்டுள்ளன எனலாம்.

யா என்ற கடவுள், வெள்ளத்தால் உலகம் அழிக்கப்பட இருக்கின்ற கமுக்கச் செய்தியை, ஊட்நாவிடம் நேரிடையாகக் கூறவில்லை. கோரைப் புல்லால் பின்னப்பட்டிருந்த தட்டி (Reed wall), இச்செய்தியை ஊட்நாவுக்கு அறிவித்ததாம். 120 அடி நீள மரக்கலத்தைக் கட்டிக் கொள்ளுமாறு அச்சுவர் கூறியது.[55] கடவுள், மாந்தனுக்குத் தரும் செய்திகளை, கனவு வானத்திலிருந்து எழும் ஒலி, தீ போன்றவைகள் வழியாகத் தெரிவிப்பதாக சமயங்கள் கூறுகின்றன. யா என்பது தமிழ்ச் சொல்லே. யா தமிழ்க்கடவுளே எனலாம். (மேலும் விளக்கங் களுக்கு ஆசிரியரின் எல் - யா என்ற நூலைக் காண்க)

வெள்ளக் காலம்: மெசபத்தோமியக் கதை, வெள்ளம் ஒருவார காலமே நீடித்ததாகக் கூறுகிறது. குறிப்பாக ஆறு பகலும், ஆறு இரவும் வெள்ளம் நீடித்தது. வெள்ளம் வடிந்து விட்டதா என்பதை அறிய காக்கை முதலிய பறவைகளை வெளியே அனுப்பிய செய்தி (dove, swallow, raven) காணப்படு கின்றது.[56] நிலப்பகுதி அருகில் உள்ளதா என்பதை அறிய தமிழ் மீனவர்கள் இவ்வாறு பறவைகளை அனுப்புவது, தமிழகத்தில் அறியப்பட்டிருந்தது. கடற்காக்கை அல்லது கடல் காக்கா என்று அறியப்படும் அப்பறவைபற்றிய செய்தியை நாலாயிரத் திவ்விய பிரபந்தம் கூறுகிறது.[57] இறுதியாக அனுப்பப்பட்ட காக்கை திரும்பி வராததால் வெள்ளம் வடிந்து விட்டதை ஊட்நா உணர்ந்தான். தனது மரக்கலத்தை விட்டு இறங்கி னான். நிசிர் (Nisir) என்ற மலைப் பகுதியில் அம்மரக்கலம் நிலை கொண்டிருந்தது. நிசிர் என்ற சொல்லுக்கான பொருள்

விளக்கப்படவில்லை. கருமலை என்ற பொருளை அச்சொல் தருவதாகக் கருதலாம். நிசி இரவு அல்லது இரவு நிசி என்பது கருமையைக் குறித்த தமிழ்ச் சொல்லே.

மரக்கலத்தைவிட்டு தரையிறங்கிய ஊட்நா, கடவுளருக்கு நன்றிப் பலிகளைச் செலுத்தினான். அப்படையலில் மணம் கடவுளர்களைச் சென்றடைந்ததும், ஈக்களைப் போல கூட்டமாக வந்த கடவுளர்கள், அப்பலிப் பொருட்களைச் சுவைத்தனர். என்லில் (நிழல் அல்லது மேகம்)என்ற கடவுள், உலகமே அழிந்துபட்ட நிலையில், ஊட்நா எவ்வாறு உயிர் தப்பினான் என அறிந்து சினம் கொண்டான். யா கடவுள், தான்தான் அக்கமுக்கத்தை ஊட்நாவிடம் கூறியதாக ஒப்புக் கொண்டான். அத்துடன் உலகத்தை வெள்ளத்தால் அழித்தது. அறிவற்ற செயல் என்று என்லில் கடவுளிடம் கூறினான். தவறு செய்தவன் மட்டுமே ஒறுக்கப்பட வேண்டுமென்பதை யா வலியுறுத்தினான். என்லில் அதனை ஏற்றுக் கொண்டு, இனி மேல் ஒட்டுமொத்தமாக உலகை அழிப்பதில்லை என்று உறுதி கூறினான். இருப்பினும், வற்கடம் (பஞ்சம்), பிணி, தொற்று நோய் என குறிப்பிட்ட பகுதிகளை மட்டுமே அழிப்பதென முடிவு செய்தான். இப்பணிகளைச் செய்துமுடிக்க ஓநாய், அரிமா போன்ற விலங்குகளை இனிமேல் அனுப்பப் போவ தாகவும், அவை அனைத்துப் பகுதிகளையும் அழிக்க மாட்டா எனவும் தெரிவித்தான். ஊட்நாவும் அவனது இல்லத்தாரும் இறவா தன்மையைப் பெற்றனர். அவர்கள் ஆறுகள் கடலோடு கலக்குமிடத்தில் குடியேறினார்கள். மற்ற உலக மக்களோடு கலவாமல் வாழ்ந்திருந்தனர். அப்பகுதி நிசிர் மலைப்பகுதி யிலிருந்து வெகு தொலைவில் இருந்தது.[58]

மேற்கண்ட கதையில், ஊட்நா வாழ்ந்திருந்தது, வெள்ளம் சூழ்ந்தது, வெகுதொலைவில் சென்று குடியேறியது ஆகிய இடங்கள் யாவும் மெசபத்தோமியாவில் உள்ளனவாகச் சொல் லப்பட்டுள்ளன. இவ்விடங்கள் அனைத்தும் 200 அயிரத்தொ லைவுகளுக்குட் பட்டவை. குறிப்பாக ஆறுகளின் கழிமுகம் என்பது யூப்ரதீஸ் - தைகிரீஸ் ஆறுகளைக் குறிப்பதாகக் கருத இயலாது. அவை கடலில் கலக்குமுன்பு ஒன்றாக இணைந்து, பாரசீக வளைகுடாவில் கலந்தன. மேலும் அக்காலத்திய கழி முகப் பகுதி, ஊர் நகரம் வரை கடல்நீண்டிருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. எனவே பேராறுகள் ஓடி இணைந்த கழிமுகப்

பகுதியே ஊட்நா குடியேறிய இடம் எனக் கருதலாம். மேலும் விளக்கங்களை நோவா என்ற தலைப்பில் காண்க.

சூரிப்பாக் (Shurippak): ஊட்நாவின் ஊர், சூரிப்பாக் என்று சொல்லப் பட்டுள்ளது.[59] இது யூப்ரதீஸ் ஆற்றின் வலதுபுறத்திலிருந்த நகரமாகும். சூரப்பாக்கம், சூரைப்பாக்கம், சூர்ப்பாக்கம் ஆகிய பெயர்கள், தமிழ்ப் பெயர்களே. பாக்கம் என்ற குடியிருப்புப் பகுதி, கடற்கரையையொட்டிய ஊராகவே தமிழ்நாட்டில் அறியப்பட்டுள்ளன. காவிரி கடலோடு கலந்த பூம்புகார் நகரில் பட்டினப்பாக்கம், மருவூர்ப் பாக்கம் போன்ற குடியிருப்புகள் இருந்ததாக அறிகிறோம். சூர் என்ற சொல், மெசபத்தோமியாவில் பரவலாக அறியப்பட்டுள்ளது. அசீரியர்களின் கடவுள் சூர் என்பவனே. இச்சொல்லின் விரிவே, அசூர் எனப்பட்டது. சூர் என்பது கதிரவனைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். சுள் என்ற வேர்ச் சொல், சூர் - சூரி - சூர என்றவாறு விரிந்தது.

சுள்: வெப்பம், தீ, சுடுதல் என்றவாறு விரியும்.

சுள் - சுர்: தீ, ஊசி முனை, கூர்முனை.

சூர் - சூரன்: கதிரவன். சுள்ளென்று சுடும் தன்மையைத் தருபவன்.

சூர் - சூரி: கூர்முனையுள்ள கத்தி அல்லது வாள்(வாளைப் போல் குத்தும் வெப்பம்)

சூரை: கூரிய முட்களைக் கொண்ட முட்செடி.

சூரிப்பாக்கம் என்ற தமிழ்ப் பெயரே, சூரிப் பாக் எனச் சுருங்கத் திரிந்தது.

பாக்கம் என்ற பெயர்ச்சொல், பகு என்ற மூலச் சொல்லின் நீட்சியாகும்.

பகு: பகுத்தல், தனிமைப்படுத்துதல், பகு - பகுதி = குறிப்பிட்ட இடம்.

பகு - பாகு - பாகம்: துண்டிக்கப்பட்ட பொருள், சிறு துண்டு.

பாகம் - பாக்கம்: குடியிருப்பில் ஒரு பகுதி.

பகு = ஒரு பொருளை பலவாறாகப் பிரித்தல். பகா = பிரிக்க இயலாத ஊட்நாவின் பிறந்த ஊர், சூரிப்பாக்கம் என்று சொல்லப்பட்டுள்ளதால், அது தமிழ்ப் பெயரைத் தாங்கிய ஊரே என அறியலாம். வெள்ளம் வடிந்த பின், அவன் வெகுதொலைவில் சென்றுவிட்டான் என்ற செய்தி, மெசபத்தோமியச் சூழலுக்குப் பொருந்தாத ஒன்று எங்கோ அறியப்பட்ட ஊரை, சூரிப்பாக்கத்துடன் இணைத்துக் கதையைப் பின்னியுள்ளனர் என்பது தெளிவாகிறது. மெசபத்தோமியாவில் எக்காலத்தும் பெருவெள்ளம் ஏற்பட்டதில்லை என்ற புவியியலாரின் முடிவும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

எனவே, மெசபத்தோமியக் கதைகளும் வெள்ள நிகழ்வு, அந் நாட்டிற்கு வெளியே நிகழ்வுற்றது என்பதை அறியலாம். அந்நாடு எதுவென்பதை ஆய்வாளர்களால் அறிய இயலாத நிலையில், அக்கதையின் போக்கும், நிகழ்வுகளும், தொடர் புடைய பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே காணப்படுவாதல், தமிழர் வாழ்ந்திருந்த பகுதியிலேயே வெள்ள நிகழ்வு தோன்றியது என அறியலாம். மெசபத்தோமியாவில் வெள்ளக் காலத்துக் குப் பிறகு குடியேறிய தமிழர்கள், தங்கள் தாயகத்தில் நிகழ்ந்த வெள்ளப் பேரழிவை, மெசபத்தோமியச் சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டுள்ளனர் என்ற சிந்தனை வலுவாக உள்ளது. மெசபத்தோமிய வெள்ளக் கதையின் மூலம் தமிழர் வாழ்ந் திருந்த பகுதிகளிலேயே அறியப்பட்ட நிகழ்வாகும். குறிப்பாக, குமரிக்கண்ட அழிவையே, ஊட்நாபிஷ்டிம் கதை நினைவு படுத்தி, தமிழ்ச்சூழலிலேயே சொல்லப்பட்டுள்ளது என்க.

11:2 சுமேரியக் கதை

வரலாற்றில் சுமேரியர் என்ற இனம், புரிந்து கொள்ள இயலாத புதிரான இனமாகவே இதுவரையில் கருதப்படு கின்றது. கி.மு. 3000 ஆண்டுகளில் மிகச் சிறந்த நகரிய நாகரி கத்தை மெசபத்தோமியாவில் உருவாக்கிய சுமேரியர்களே, உலகின் முதல் நாகரிக மக்கள் என்று கருதப் படுகின்றனர். ஆனாலும் அவர்களின் தாயகம், எது, எதற்காக மெசபத்தோ மியா மீது படையெடுத்தனர், அதன்பின் ஏன் நிலையான ஆட்சியை அங்கு நிறுவினர் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் இதுவரையிலும் அறியப்படவில்லை. கி.மு. 3500 ஆண்டுகளில், பாரசீக வளைகுடா வழியே வந்து, பாபிலோனி யரைப் போரில் புறங்கண்டனர் என்ற செய்தியை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். சுமேரியர் தோற்றுவித்த நாகரிகத்தின் தொடர்ச்சியாக, பாபிலோன் பழம் பெரும் நாகரிகத்தின் தொட்டிலாக அறியப்படுகின்றது. சுமேரியர் விதைத்த நகரிய நாகரிகம், அவர்களது முன்னோரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நாகரிகமே எனலாம். எனவே பாபிலோனிய நாகரிகத் துக்கு முன்பே, சுமேரியரின் முன்னோர் வாழ்ந்திருந்த நாடு, நகரிய நாகரிகத்தில் சிறந்து விளங்கியது என்பது தெளிவா கிறது. அந்த முன்னோர்களின் நாடு, நாகரிகம் பற்றி இது வரையில் எவரும் தெளிவுபடுத்தவில்லை. எனவே, சுமேரியர் தோற்றுவித்த பாபிலோனிய நாகரிகத்துக்கு முன்பு அறியப்

பட்டிருந்த நாகரிகம் எந்நாட்டைச் சார்ந்தது என்பதை வரலாறு தெரிவிக்கவில்லை யாயினும், அப்படியொரு நாகரிகம் இருந்தது உறுதியாகின்றது.[60]

சுமேரியர் என்ற பெயர், சுமர் (Sumar) என்ற மூலத்தி னின்றும் விரிந்ததாகக் கூறும் ஆய்வாளர்கள், சுமர் என்ற சொல்லுக்கான பொருளைத் தரவில்லை. உண்மையில் தெரிய வில்லையென்றே கூறிவிட்டனர். சுமர் என்பது, சமர் என்ற சொல்லின் திரிபே எனலாம்.

சமர்: போர், போர்த்தொடர்புடைய நிகழ்வுகள்.

சமம் என்பது பழந்தமிழ்ச் சொல்லாகும். சமன் செய்து சீர்தூக்கும் கோல் என வள்ளுவர் அச் சொல்லைப் பயன் படுத்துகிறார்.

ஒரே வகையிலான ஆற்றலும் வலமும் கொண்ட இரு பிரிவினர் (சமமான) மோதிக் கொள்வதே போர் எனப்படும். தன்னிலும் ஆற்றல் குறைந்தவரை எதிர்ப்பது போராகக் கருதப் படமாட்டாது. தன்னிலும் வலிமை கொண்டவனை எதிர்த்துப் போரிடவும் இயலாது. போர்த் தெய்வமான கொற்றவையை, சமரி என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. எனவே சமரியர் என்ற தமிழ்ச் சொல்லே, சுமேரியர் எனத் திரிந்துள்ளது எனலாம்.

சுமேரியர் மெசபத்தோமியாவைக் கைப்பற்றிய காலத்தில் அவர்களை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வி கண்ட மக்கள், சுமேரியரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டனர். தரை வழியே படையினரை நடத்திச் செல்வதைக் காட்டிலும் இடர்ப் பாடுகள் மிகுந்த கடல்வழிப் போர், சுமேரியரின் ஆற்றலை வெளிப்படுத்தும். எதற்காக அப்போர் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கருதுகோள்கள் பல இருந்தாலும், வணிக நோக் கமே முதன்மையானதாக அறியப்படுகின்றது. இக் கருதுகோள் உண்மையானால், மெசபத்தோமியாவிற்கும் சுமேரியரின் தாயகத்துக்கும் இடையே சிறப்பான வணிக நடைமுறை இருந் துள்ளது தெளிவாகின்றது. கி.மு. 3500 ஆண்டுகளில் கடல்வழி வணிகம் இருநாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட செய்தி, அக்காலத்து மக்களின் கடல்மேலாண்மையை உறுதிப் படுத்துகின்றது. சுமேரியர் தமிழரே என்ற கருத்து அண்மைக் காலத்தில் உறுதிப்படுத்தப்பட்டு வருவதால், தமிழகத்துக்கும் மெசபத்தோமியாவிற்கும் இடையே நடை பெற்றுவந்த வணிகம்

பற்றியும் அறியலாம். தமிழக வணிகர்களுக்கு கொடுக்கப்பட்ட இடையூறுகளின் கரணியமாகவே, பகைவரை ஒறுக்கும் வகையில், சுமேரியப் படையெடுப்பு நிகழ்த்தப்பட்டதோடு, தொடர்ந்து வணிக நலன்களைக் காக்க அங்கு நிலையான தமிழரின் ஆட்சியும் ஏற்படுத்தப்பட்டது எனலாம். சுமேரி யரின் படையெடுப்பு, கி.மு. 4000 ஆண்டுகளில் தமிழர்கள் மேற்கொண்டிருந்த உலகளாவிய வணிக மேலாண்மையை உறுதிப்படுத்துகின்றது.

சுமேரியர் அங்கு புதிய ஆட்சிமுறையை உருவாக்கிய தோடு, அதுவரை அங்கு அறியப்பட்டிராத எழுத்துமுறை யையும் அறிமுகம் செய்தனர். களிமண் தட்டுகளில் எழுதப் பட்ட பதிவுகள், அத்தட்டுகள் சுடப்பட்டதால் உறுதியாயின. இவ்வாறான களிமண் தட்டுகள் ஆயிரக் கணக்கில் சென்ற நூற்றாண்டில் தோண்டப்பட்ட அகழ்வாய்வுகளால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அக்களிமண் தட்டுகளில் காணப்படும் எழுத்துகள், தமிழ் எழுத்துகளே என அருள் தந்தை ஈராஸ் பாதிரியார் உறுதிப் படுத்தியுள்ளார். சிந்து வெளி எழுத்து களுக்கும், சுமேரிய எழுத்துகளுக்கும் உள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டும் ஈராஸ் பாதிரியார், மெசபத்தோமிய வெள்ளக் கதையில் அறியப்படும் கில் காமேஷ் என்ற சொல், சிந்துவெளியிலும் அறியப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். இதன் மூலம், சிந்து வெளியில் அறியப்பட்டிருந்த வெள்ளக் கதையே, பாபிலோனிலும் சொல்லப்பட்டது என்பது உறுதியாகின்றது.

சுமேரிய நாகரிகத்துக்கும் முற்பட்டதாக சிந்துவெளி நாகரிகம் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால், சுமேரி யரின் வெள்ளக் கதை தமிழர் கூறிவந்த, தமிழ்மூலக் கதையே என்று அறியலாம். எனவே, மெசபத்தோமிய - சுமேரிய வெள் ளக் கதைகளுக்கான மூலம் தமிழ்நாட்டில் சொல்லப்பட்டதே என்க. ஆனால் தமிழ்நாட்டில் அக்கதை பதிவு செய்யப்பட்டு, அழிந்துபட்டது என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ் நாட்டில் வெள்ளக் கதை பரவலாகச் சொல்லப்பட்டு வந்தது என்பதை உறுதி செய்யலாம். அவைகள் காலத்தால் அழிந்து போயின.

மெசபத்தோமியக் கதையும், சுமேரியக்கதையும் பல கூறுகளில் ஒன்று படுவதால், மெசபத்தோமியர் முன்னர் குடியேறிய தமிழர் என்றும், சுமேரியர் பின்னர் குடியேறிய தமிழர் என்றும் கருதலாம். சுமேரிய மொழி, செமிட்டிக்

எனப்படும் மெசபத்தோமிய மொழியோடு தொடர்புடைய தல்ல என்று ஆய்வாளர்கள் கூறினாலும், இருமொழிகளுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமைகளைக் கண்டு மொழியிய லார் வியப்படைகின்றனர். செமிட்டிக் குடும்பத்தில் இணைக்கப் பட்டுள்ள அக்காடியம், எபிறேயம்,. கனானியம் போன்ற மொழிகளில், சுமேரிய மொழியின் தாக்கங்கள் நிறைய உண்டு என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இரு வேறுபட்ட இனங் களின் மொழிகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமையால் அவ்விரு இனங்களும், ஒரு மரபின் கிளைகளே என கருத இடமுண்டு, குறிப்பாக, சுமேரிய வெள்ளக்கதை, மெசபத் தோமியக் கதையை தழுவியிருப்பதே. சுமேரியக் கதைகளும் ஊட்நா பிஷ்டிம் என்ற தலைவனுக்கு, சேய்சூத்ரா என்ற பெயரும் உண்டு என மெசபத்தோமியக் கதை கூறுகிறது. சேய் சூத்ரா என்பவனை முன்னிறுத்தியே, சுமேரியக் கதை சுழல்கிறது.

சேய்சூத்ரா (Seisudra) என்ற மன்னன் ஒரு மரபின் பத்தாவது மன்னனாவான். இவனையே வெள்ளத்தினின்றும் –வுள் காத்ததாக சுமேரியக்கதை கூறுகின்றது. மெசபத்தோமியக் கதையைப் போன்று, சுமேரியக் கதை முழுமையாகக் கிடைக்க வில்லை. என்றாலும் இவ்விரு கதைகளும் ஒன்றுபோலவே காணப்படுகின்றன. ஊட்நா பிஷ்டிம் (மெசெ) பிறந்த ஊரான சூரிப்பாக்கமே, சேய்சூத்திரனின் ஊராகவும் சொல்லப்பட் டுள்ளது. ஊட்நாவைப் போலவே இவனும் இறவாத் தன்மையை கடவுளரிடமிருந்து பெற்றவனாவான். ஊட்நா ஆறுகளின் கழிமுகப் பகுதியில் இறுதியாக வாழ்ந்து வந்ததைப் போலவே, சேய் சூத்திரன் கதிரவன் தோன்றும் தலைமண் (Dilmun என்று திரிவு பட்டுள்ளது) என்ற நாட்டில் வாழ்ந்திருந்தான். தலை மண் என்பது முதல் நாடு, அதாவது கதிரவனைப் பார்க்கின்ற முதல் நாடு என்பது பொருளாகும். இச்சொல் கிழக்கு என்ற திசையைச் சுட்டுவதை நோக்க வேண்டும். இச்சொல்லின் வழியே சேய்சூத்திரன் கிழக்கு நாடு ஒன்றில் வாழ்ந்திருந்ததாக அறியலாம். (விவிலியத்தில் நோவா என்பவனுடைய பிள்ளைகள், கிழக்கு நாட்டிலிருந்து வந்து, மெசபத்தோமியாவில் குடியே றினர் என்ற தகவல் கொடுக்கப்பட்டுள்ளது)

அந்த கிழக்கு நாடு தமிழ் நாடு அல்லது குமரிக்கண்டமே எனக் கொள்வதில் தவறில்லை. சுமேரியர்கள் தமிழர்களே என்றவாறு, சுமேரியக் கதையும் தமிழ்ப் பகுதியில் நிகழ்வுற்

றதைக் கூறுவதே எனக் கொள்வதிலும் தவறில்லை. பிற்காலத்தில் பாரசீக வளைகுடாவில் உள்ள மூக்கு போல் நீண்ட தரைப் பகுதியை (தற்காலத்திய கத்தார்) தில் மன் என்றவாறு அழைத்துள்ளனர். அக்காலத்திய புவியியல் கண்ணோட்டத்தில் அப்பகுதி மெசபத்தோமியாவின் தென் பகுதியாகவே கொள்ளப்படும். மெசபத்தோமியக் கதையைப் போன்று கிழக்கே நிகழ்வுற்ற ஒரு கதையை, மேற்கே நிகழ்ந்ததாக சுமேரியக் கதையும் தெரிவிக்கின்றது.

சேய்சூத்ரா (Sei Sudra): உலகம் தோன்றியது முதல் இவ்வுலகை ஆண்ட மன்னர் மரபுகளில், சேய் சூத்ரா என்பவன் பத்தாவது மன்னனாவான். (விவிலியம் நோவாவை பத்தாவது தலைமுறைத் தலைவனாகக் கூறுகிறது) இப்பெயரின் அடிப்படையில், இவனுடைய தந்தையின் பெயர் சூத்ரா என்பதும், இவனுடைய பெயர் குறிக்கப்படாமல் சூத்ராவின் மகன் என்றும் சுமேரியக் கதை கூறுகிறது. சேய் சூத்ரா என்ற பெயருக்குச் சுமேரிய மொழியில், சூத்ராவின் மகன் என்பதே பொருளாகும். சேய் என்பது மகனைக் குறித்த அழகான பழந்தமிழ்ச் சொல்லாகும். நன்னன் சேய் நன்னன், சேயன் போன்ற சொற்கள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நன்னன் சேய் நன்னன் என்ற பெயர் சிந்துவெளியிலும் காணப்பட்டதாக, ஆய்வாளர்கள் குறித்துள்ளனர். சேய் என்ற தமிழ்ச் சொல், சிசு (Sis) என்று சமற்கிருத மொழியிலும், சேய் என்றே சுமேரிய, சிந்துவெளிக் குறிப்புகளிலும், சே என்று எபிறேய மொழியிலும், சேஸ் என்று எகிப்திய மொழியிலும் அறியப்பட்டுள்ளன.

நன்னன் சேய் நன்னன்	:	தமிழ் மற்றும் சிந்துவெளித் தமிழ்.
சிஸ்ன தேவா	:	கருவின் (குழந்தையின்) மூலமான கடவுள் (சமற்கிருதம்)
சேய்	:	சுமேரியச்சொல் - குழந்தை, மகன்.
சே	:	குழந்தை (எபிறேயம்)எ.கா. மோசே.
சேஸ்	:	எகிப்தியச் சொல், மகன். எ.கா. ராம்சேஸ். (ராம் என்பவனின் மகன்)

மற்ற மொழிகளில் திரிபுகளாகக் காணப்படும் சேய் என்ற சொல், சுமேரிய மொழியில் திரிபு படாமலேயே உள்ளதை நோக்குக.

சூத்திரன் என்ற சொல்லை, ஆரியர்களே அறிமுகம் செய்ததாகவும், அது தாழ்ந்த சாதி அல்லது தமிழனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல் என்றும் பலரும் தவறாகக் கருதி

வந்துள்ளனர். ஆரியர்கள் அச் சொல்லைக் கண்டுபிடித்துக் கூறவில்லை. தமிழர்களுக்கு, சூத்திரன் என்ற பெயர் அக்கா லத்திலேயே வழக்கில் இந்தது என்பதை சுமேரியக் குறிப்புகள் மெய்ப்பிக்கின்றன. எனவே சூத்திரன் என்பது தமிழ்ச் சொல்லே என்றும் அது சூத்ர (Sudra) என்று சமற்கிருதம் உள்ளிட்ட மொழிகளில் திரிபுபட்டுள்ளதென்பதும் தெளிவு. சமற்கிருதக் கண்ணோட்டத்தில், சென்ற நூற்றாண்டில் சுமேரியக் கதையைப் படித்துப் பொருள் கொண்டவர்கள், சூத்ர என்றே குறிப்பிட் டுள்ளனர்.

சூத்திரன் என்ற சொல்லுக்கான பொருள் யாது? இது வரையிலும் எவரும் விளக்கமாகக் கூறவில்லை. ஐந்திரம் என்ற பழந் தமிழச் சொல்லுக்கு எவ்வாறு விளக்கமளிக்க இயலவில் லையோ அதே நிலைமைதான் சூத்திரன் என்ற சொல்லுக்கும் உள்ளதை அறியலாம். சூத்திரன் என்ற பெயருக்கான வேர்ச் சொல், சுள் என்பதே ஆகும். சுள் என்ற சொல் பற்றி ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

சுள் - சூர் - சுரி - சூரியன் = கதிரவன். சூரியன் சரியான தமிழ்ச்சொல்லே. சூரியன் - சூர்யா என சமற்கிருதத்தில் திரிந்தது. அதனையே மூலச் சொல் என்று தவறாகக் கருதியவர்கள், சூர்யா என்ற சொல்லின் தமிழ் ஒலிப்பே சூரியன் என மயங்கி விட்டனர். இவ்வாறான மயக்கம் ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களை, சமற்கிருதச் சொல்லென ஏற்க வைத்துவிட்டது.

சூர் + தீ + அரன் = சூர்த்தியரன் → சூத்திரன் - கரிய நிறம் உடையவன்.

சூர் + தீ + அரன் = சூர்த்திரயன் → சூத்திரன் - கதிரவன்

சூல் + தீ + அரன் - சூல்தீயரன் → சூத்திரன் - கதிரவன்

சூழ் + தீ + அரன் = சூழ்த்தீயரன் → சூத்திரன் - கதிரவன்

சூழ் + திறன் - சூழ்த்திறன் → சூத்திறன் - ஆற்றலாளன்

சூல் + திறன் = சூற்றிறன் → சூத்திறன் - கதிரவனைப் போன்ற ஆற்றலுடையவன்.

மேற்கண்ட ஆறு வகையிலான சொற்களாக, சூத்திரன் அல்லது சூத்திறன் என்ற சொல்லைப் பிரிக்கலாம். முதல் நான்கு சொற்கள் பெயர்ச்சொற்களாக உள்ளவை. இறுதியான இரண்டு சொற்களும் பண்புப் பெயர்களாக அமைந்தவை. இச்சொற்களால் உருவான சூத்திரன் என்ற பெயர், மேற்கண்ட பொருள்களில் ஒன்றையே குறித்தது என்க. சூத்ர என சமற்

கிருதச் சொல்லுக்கான வேர்ச் சொல் விளக்கப்படவில்லை. எனவே, சூத்திரன் என்பது மயக்கத்துக்கு இடமில்லாத தமிழ்ச் சொல்லே என்பது உறுதி. மேற்கண்ட பொருள் விளக்கங் களில் எச்சொல் தமிழரைக் குறித்தது என்பது விளங்கவில்லை. பல்பொருளைத் தரும் சிறப்புச் சொல்லாகவே சூத்திரன் சொல்லப் பட்டிருக்கவும் கூடும்.

சூத்திரன் என்ற சொல் தமிழரைக் குறித்தே சொல்லப் பட்டிருந்த செய்தியை, சமற்கிருதம் பதிவு செய்துள்ளது. தமிழில் அச் சொல் வழக்கிழந்து போயிற்று எனலாம். சேய் சூத்திரன் என்ற சொல்லை, சேய் நன்னன் என்ற சொல்லோடு ஒப்பிடலாம். தந்தையின் பெயரை இணைத்து மகனை அழைப்பதும், மகனின் சிறப்பை விளக்க தந்தையின் பெயர் இணைக்கப்படுவதும் தமிழர் வழக்காக இருந்துள்ளன. ஆதன் என்பவனின் தந்தையாரை ஆந்தையார் எனக் குறித்துள்ளதை நோக்குக. சேய்சூத்திரன் என்ற சொல் வழக்கு தமிழருடையதே என்க.

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டதும், வரலாற்றுக் காலத்திலும் எழுதப்பட்டதாகக் கருதப்படும் உலகின் பல்வேறு இலக்கியங்கள், கட்டுக் கதைகளாகவும், கற்பனையை விஞ்சும் மாய மந்திரக் கதைகளாகவும் அறியப்படும் வேளையில், சுமேரிய இலக்கியங்கள் மாந்த நேயத்தையும், மக்கள் பண்பு களையும், நல்லொழுக்கச் சிந்தனைகளையும் வளர்க்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் அவ்வாறு எழுதப்பட்ட உலகின் முதல் நூல்களாகக் கூறுவார் உண்டு. உலகளாவிய மாந்த நேய உணர்வுகளை வடித்துக் காட்டுபவை களே சங்க இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் படைக்கப் படுவதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே, சங்க இலக்கியச் சிந்தனைகள், சுமேரியர் இலக்கியங்களில் காணப்படுவதால், தமிழரின் மாந்த நேயச் சிந்தனைகள் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்பே பண்பட்டிருந்தன என அறியலாம். சுமேரிய இலக்கியங்களை ஆய்வு செய்த அறிஞர்கள் (J. Van Dijk, E. Gordon) அவற்றை முழுவதும் படித்துப் புரிந்து கொள்ள இயல வில்லை என்பதைத் தெரிவித்துள்ளனர். சுமேரிய இலக்கியங் களைப் புரிந்து கொண்டு அவற்றை மொழி மாற்றம் செய் வதில் தோன்றும் இடர்ப்பாடுகளையும் மேற்கண்ட அறிஞர்கள் விளக்கியுள்ளனர். சுமேரிய இலக்கியங்களின் மையக் காலம்

கி.மு. 2400 என்பது அறிஞர்களின் கணிப்பு. இக்காலத்துக்குச் சில நூற்றாண்டுகள் முன்னும் பின்னுமாக அவ்விலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. சுமேரிய இலக்கியங்களைப் புரிந்து கொண்டால், விவிலியத்தில் சொல்லப்பட்டுள்ள பழமொழிகள், உவமைக் கதைகள், உரையாடல்கள், பொருளின் ஆழம் ஆகியவைகளை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும் என்று கோர்டன் கூறுகிறார்.[61] இதன் மூலம் சுமேரியச் சிந்தனைகள் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூலில் விரவிக் கிடக்கின்றன என்பது அவர்தம் கருத்தாகும் (Jerome, P. 490)

சுருப்பாக்கின் அறிவுரைகள் (The Instructions of surup pak):

இத்தலைப்பில்தான் சூத்திரன் என்ற தந்தை, வெள்ளத்தினின்றும் காக்கப்பட்ட (வெள்ளக் காலத்துக்கு முன்பே) தனது சேய்க்குக் கூறும் அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வறிவுரைகளைத் தொகுத்தவர் எஸ். என். கிராமர் என்ற அறிஞராவார். (S.N. Kramer, Journal of Cuneiform Studies, 1947, Chap ter 33, Serial No 208) அவருடைய நூலில் எண் 208 இல் கண்டுள்ள செய்தி, சூத்திரன் தனது மகனுக்கு (சேய்க்கு)க் கூறிய அறிவுரைகளாகும்.

“ஓ என் சேயே! நான் உனக்குத் தரும் அறிவுரைகளை எடுத்துக் கொள்,

ஓ சேய் சூத்திரனே! என் அறிவுரைகளை ஏற்க உன் செவிகளைக் கொடு,

என்னுடைய அறிவுரை புறந்தள்ளக் கூடியதன்று,”

மேற்கண்ட பாடலுக்கான விளக்கத்தை, பாபிலோனிய அறிவிலக்கியங்கள் என்னும் நூலில் டபிள்யூ லாம்பர்ட் தந்துள்ளார். (W. Lambert, Babylonian Wisdom Literature, Oxford, 1961)

கிராமர் தொகுத்துள்ள சுமேரிய இலக்கியங்களில் பெரும்பாலானவை, உலக வாழ்க்கையில் மாந்தனின் இன்னல்கள் மற்றும் இடர்ப்பாடுகள், அவைகளை களைவதற்கான அறிவார்ந்த வழிகள், பயனுள்ள பழமொழி இலக்கியங்கள், என்ற வகையில் நீண்டு கொண்டே செல்கின்றன. அறிவு அல்லது மெய்யறிவு (wisdom) என்ற சொல்லுக்கான விளக்கத்தை உலக வரலாற்றில் சுமேரிய இலக்கியங்களில்தான் காணலாம். விவிலியத்தின் பல செய்திகள், சுமேரிய அறிவிலக்கியங்களைத் தழுவியவையே என லாம்பர்ட் கூறுகிறார். விவிலியத்தின்

பழமொழிகள் என்ற தலைப்பிலுள்ள செய்தி (Proverb, 13:3) ஏற்கனவே சுமேரிய இலக்கியத்திலுள்ளதை லாம்பர்ட் சுட்டிக் காட்டுகிறார்.

"உனது வாயை அடக்கி சொற்களைக் காத்துக் கொள், (வாயினுள்) அங்கேதான் மாந்தனின் செல்வம் உள்ளது, உனது உதடுகள் விலை மதிப்பற்றவைகளாக இருக்கட்டும், கல் நெஞ்சமும் முறை யற்ற சொற்களும் உன்னால் களையப்படட்டும், சார்புத் தன்மை யுடன் உண்மைக்குப் புறம்பானவற்றைப் பேசாதே, பொய்யன் எப்போதும் வெறுக்கப் படுவான்." (Baby lonian Wisdom Literature, No: 101, ANET 426)

விவிலிய நூல் உலகச் சமய நூல்களில் சிறப்புக்குரிய இடத்தை பெற்றுள்ளதை அறியலாம். விவிலிய நூலுக்கே கருத்துரைகளைத் தந்த சுமேரிய இலக்கியங்கள் எவ்வளவு உயர்வானவை, அறிவு செறிந்தவை எனச் சொல்லத் தேவை யில்லை.

சூத்திரன் தனது சேய்க்கு வழங்கிய அறிவுரைகள் வீண் போகவில்லை. தந்தை சொற்கேட்டு மனித நேயப் பண்பா ளனாக சேய்சூத்திரன் வாழ்ந்திருந்தான். அவன் காலத்தில் மக்கள் ஒழுக்கக் கேடுகளில் ஈடுபட்டு, நகரிய நாகரிகத்தில் மகிழ்ந்திருந்தனர். கடவுள் அம்மக்களை வெறுத்தார். சேய் சூத்திரன் மேல் அன்பு கொண்டார். வெள்ளத்தால் உலகை அழித்தார். சேய் சூத்திரனைக் காத்தார்.

மேற்கண்ட சுமேரியக் கதையின் ஒவ்வொரு பகுதியும் தமிழ்ச் சூழல்களோடு காணப்படுகின்றன. சுமேரியக் கதையின் வெள்ளக் காலம் நீடித்தது ஒரு வாரம் அல்லது ஏழு நாட்கள் மட்டுமே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமேரி யரின் நாள் காட்டியில் ஒரு வாரத்துக்கு ஏழு நாள் என்ற கணக்கு இருந்துள்ளதை அறியலாம். இந்த ஏழுநாள் கணக்கு தொல்தமிழருடையது என்பதில் ஐயமில்லை. தமிழ்க் கணியம் கண்டுபிடித்துக் கொடுத்த நொடி, நிமையம், நாள், வாரம், மாதம், ஆண்டுக் கணக்கு, தமிழன் உலகிற்கு அறிமுகம் செய்த நாள்காட்டியாகும். இந்த நாள் காட்டியையே சுமேரியர், மெசபத்தோமியர், கனானியர், யூதர் மற்றும் எகிப்தியரும் அராபியரும் பயன்படுத்தினர். தற்போதுள்ள நாள்காட்டி, தமிழர் நாள் காட்டியின் வளர்ச்சியே. அக்காலத்தில் இருள் சூழ்ந்ததும் நாளின் தொடக்கம் அறியப்பட்டு, அடுத்த நாள்

மாலைவரை ஒரு நாளாகக் கருதப்பட்டது. நடுநிசியில் நாள் தொடக்கம் பிற்கால அறிமுகமாகும். தமிழரின் தொன்மைக் கால முறையையே, உலகப் படைப்பின் விவிலியச் செய்தி விளக்கி நிற்கின்றது. மாலை முடிந்து மறுநாள் தொடங்கிற்று என்ற கூற்று அதனை வெளிப்படுத்தும். (Thus evening came and morning followed - the first day. - Genesis 1:2)

மெசபத்தோமியக் கதையில் வரும் கடல்காக்கை, காவுப் பலி போன்ற அனைத்து செய்திகளும் சுமேரியக் கதையிலும் உண்டு. பல கடவுளரைவணங்கும் தமிழர் மரபுப்படி சுமேரிய, மெசபத்தோமியக் கதைகள் உள்ளன. சுமேரிய - மெசபத் தோமியக் கடவுளர்களின் பெயர்களும் கூட, தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே (ஆசிரியரின் தமிழர் சமயம் என்ற நூலைக் காண்க) மேற்கண்ட கதைகளில் காணப்படும் தமிழர் வழக்கு களும் வழக்காறுகளும், மேலை நாட்டு ஆய்வாளர்களுக்குத் தெரியவில்லை. கிழக்கித்திய கண்ணோட்டத்தில் அவர்கள் சுமேரிய இலக்கிகளை அணுகவில்லை என்பதால், பல்வேறு செயல்களுக்கும் நிகழ்வுகளுக்கும் பொருள் அறிய இயல வில்லை என்பதே உண்மை நிலையாகும்.

11:3 ஆரியக் கதை

ஆரியர்கள் கி.மு. 1500 ஆண்டுகளில் இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சில ஆய்வாளர்கள் கி.மு. 2000 மேல்கட்ட கால அளவு என்றும் கூறுகின்றனர். எனவே இக்கால அளவுக்கு முன்பு இந்தியாவில் ஆரியர் என்ற இனம் அறியப்படவில்லை என்பதை ஆய்வா ளர்கள் உறுதி செய்துள்ளனர். ஆரியத் தொன்மங்கள் கூறும் கதைகளில் சொல்லப்படும் ஆண்டுக் கணக்குகள் வரலாற்றுப் பார்வைக்கு முரண்பட்டவை. முதல் மாந்தனின் எலும்புக் கூடுகள் இரண்டு இலக்கம் ஆண்டுகளுக்கு உட்பட்டவை களாக, அண்மையில் தான்சானியாவில் கிடைத்த தடையங் களைக் கொண்டு, ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர். பதினேழு இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பே இராமன் பிறந்த தாகக் கூறும் ஆரியத் தொன்மங்களின் நம்பகத்தன்மை, வரலாற்றுப் பார்வைக்கு முரண்பாடுடையதாகும்.

ஆரியத் தொன்மமான மனுவின் கதையில், வெள்ள நிகழ்வு பற்றிய செய்திகள் அறியப்பட்டுள்ளன. மனு என்ற பெயரில் 14

பேரை ஆரியத் தொன்மங்கள் கூறுகின்றன.[62] அவர்களில் எந்த மனு எக்காலத்தில் வாழ்ந்தான் என்பது தெளிவுபடுத்தப்பட வில்லையாயினும், மனு நூலில் கண்டுள்ள கதை கிறித்துப் பிறப்பாண்டுகளிலோ அல்லது அதற்குப் பிறகோதான் சொல லப்பட்டிருக்க வேண்டுமென்பர். மனுவின் சட்டத் தொகுப்புகள் கி.பி. 200 ஆண்டுகளுக்குப் பிறகே தொகுக்கப்படத் தொடங்கி, அடுத்த பல நூற்றாண்டுகளில் பல்வேறு செய்திகள் இணைத் துக் கொள்ளப்பட்டன.

மனு என்ற சமற்கிருதச் சொல், மீன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே எனலாம். மனு என்பவனே முதல் மாந்தன் (ஆதாமைப் போல) என ஆரியத் தொன்மங்கள் கூறுகின்றன. கி.மு. 20000 ஆண்டுகளில் நிலை பெற்றிருந்ததாக அறியப்படும் குமரிக் கண்டத்தில் தோன்றிய உலகின் பேரரசு, மீன் சின்னத் தையே கொண்டிருந்தது. மீன் எவ்வாறு தமிழருக்குரிய சின்ன மாயிற்று என்பதை இதுவரை எவரும் தெளிவுபடுத்தவில்லை யாயினும், மீனை கடவுளோடு தொடர்பு படுத்தியிருந்த தமிழரின் நம்பிக்கையே, உலக சமயங்களில் மீனைப் பற்றிய செய்திகளுக்கான அடிப்படையாகும்.

மீ என்ற தமிழின் வேர்ச் சொல், உயர்வு என்ற பொரு ளையே தரும். வானத்தில் உயர்ந்து காணப்பட்ட உடு, மீன் எனப்பட்டது. அந்த உடுக்களின் அமைப்பு, தோற்றம் ஆகிய வைகளின் அடிப்படையில் தெய்வ நம்பிக்கையும், தொன்மக் கதைகளும் தோன்றின. பழந்தமிழர் சொல்லி வந்த கதைகள், யாவும், வானியலின் உருவகங்களே எனலாம். ஓரியன் மீன் கூட்டத்தைச் சிவனாகவும் (திருவாதிரை), விடை ஓரையைத் திருமாலாகவும், கார்த்திக் கூட்டத்தை முருகனாகவும், ஆண்டி ரமேடாவை கொண்டு பின்னப்பட்ட கதைகள் ஏராளமாக உள்ளன. மீன் தமிழர் வாழ்வில் சிறப்பான இடத்தைக் கொண்டிருக்கும் உயிரினமாகும். கடல் வாழ் உயிரினங்களே மாந்தத் தோற்றத்தின் முதற்படியாக அறிவியலும் கூறுகிறது.

மீனைக் கடவுளாகவும், கடவுள் தன்மை பெற்ற மாந்த னாகவும், பிற்காலத்தில் பெண் தெய்வமாகவும் தொன்மக் கதைகள் கூறுகின்றன.

மனு என்ற சொல்லிலிருந்தே மனுஷ்ய (மாந்தன்) என்ற சொல் பிறந்தது என்று சமற்கிருத மொழியியலார் கூறுகின்றனர்.

மன் என்ற தமிழ்ச் சொல்லுக்கு மாந்தன் என்ற பொருள் தமிழில் உண்டு. மன்பதையைக் காப்பவனே மன் + அன் = மன்னன் எனப்பட்டான். மன் - மனு - மனுஷ்ய என்று சமற்கிருதத்தில் திரிந்தது. மீன் என்ற தமிழ்ச் சொல், உலக நாகரிகங்களில் பல்வேறு வகையில் திரிபு பட்டுக் காணப்படுகின்றது. மனு, மெனு, மினோஸ், மென என்றவாறு விரியும்.

மனு - எல் (Manu - el) என்பது கடவுளைக் குறித்த எபிறேய மொழிச் சொல்லாகும்.[63] அது எம் - மனு - எல் (En - manu - el), எம்மானுவெல் என விரிந்துள்ளது. ஆரியத்தில் மனு என்ற சொல்லே அறியப்பட்டுள்ளது.

ஆரியக் கதையில் வெள்ளத்தினின்றும் காக்கப்பட்ட மனுவை, மீன் ஒன்று வழி நடத்திச் சென்றதாகக் கூறப்படுகின்றது. மெசபத்தோமிய, சுமேரிய இலக்கியங்களில் யா என்ற கடவுளே மாந்தனைக் காத்ததாக கதைகள் உள்ளன. ஆரியக் கதையில் கடவுளுக்குப் பதிலாக மீன் சொல்லப்பட்டுள்ளது. இந்த மீனை மகாவிஷ்ணு என்றும், பிரம்மா என்றும் ஆரியத் தொன்மம் விளக்குகிறது. கடவுள் மீன் வடிவில் வந்து மனுவைக் காத்தான் என்பது செய்தி. மகாவிஷ்ணுவின் பத்துப் பிறப்புகளில் மீனே முதல் பிறப்பு என்றும் ஆரியத்தொன்மங்கள் கூறுகின்றன. மெசபத்தோமிய, சுமேரிய, விவிலியக் கதை நிகழ்வுகளே ஆரியக் கதையிலும் சொல்லப்பட்டுள்ளன. மரக்கலம், கடல்காக்கை, மலையில் மரக்கலம் நிலை கொண்டது, கடவுளுக்குப் பலி கொடுத்தது என்றவாறு அக்கதையின் நிகழ்வுகள் உள்ளன. எனவே, ஆரியக் கதையென்பது வட இந்தியாவில் சொல்லப்பட்டு வந்த வெள்ளக் கதையின் மறு வடிவமே எனக் கருதலாம். வெள்ளக் கதைகளில் காலத்தால் மிகவும் பின்னோக்கி அறியப்படுவது ஆரியக் கதையே.

வெள்ளப் பாழினால் தமிழர்களே பெருமளவில் மாண்டு போனார்கள் என்ற செய்திகளை விளக்கும் கதைகள், தமிழகத்தில் கிடைக்கவில்லை. சுமேரியர்களைப் போல களிமண் தட்டுகளிலோ, எகிப்தியரைப் போல புற்றாளிலோ (பாப்பிரஸ்) தமிழர்கள் தங்களுடைய செய்திகளைப் பதிவு செய்யவில்லை. எளிதாகக் கிடைத்த ஓலைச் சுவடிகள், 200 ஆண்டுகளுக்கு மேல் இயற்கையான சூழல்களில் தாக்குப் பிடிக்க இயலாதவை. படியெடுக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள் நிலைத்தன. மற்றவை அழிந்து போயின. அவ்வாறான அழிவுகளில் வெள்ளம் பற்றிய

பதிவுகளும் இருந்தன எனக் கருதலாம். ஆரியத் தொன்மம் கூறும் வெள்ளக் கதையும் தமிழ் மூலத்தைக் கொண்டதே என்க.

11:4 – அரபுக் கதை

உலகச் சமயங்களில் கதைகளாகக் கூறப்பட்ட வெள்ளச் செய்திகள், திருக்குர்ஆனில், கடவுளே அச் செய்தியை நபிகள் நாயகத்துக்கு அருளியதாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே, இந்நிகழ்வு சமய நம்பிக்கையாக வலியுறுத்தப்படுகின்றது. இந்நிகழ்வைக் கதையாக இசுலாமியர் கருதுவதில்லை. மாறாக இது உண்மையான நிகழ்வே என நம்பப் படுகின்றது. மனு, ஊட்நா பிஷ்டிம், சேய் சூத்திரன் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் வெள்ளமாந்தன், இசுலாத்தில் நூஹ்நபியென்று அழைக்கப்படுகிறான். நூஹ் (Nuh) என்பது அரபுச் சொல்லாகும்.[64]

நபி என்ற எபிறேய, அரபுச் சொல் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட மாந்தன் என்ற பொருளைத் தருவதாகும். உலக மக்களை நல்வழிப்படுத்த கடவுள் அவ்வப்போது சில நல்லவர்களைப் படைத்து, தனது நல்வழியை மக்களுக்கு எடுத்துச் சொல்லவைப்பதாக நம்பிக்கை. நபி என்பது பெருமைக்குரிய தகுதியாகும். கலிமா (Kalimah) என்று அரபு மொழியில் சொல்லப்படுகின்றது. நபியு இலா (Nabiyuila) என்ற சொல்லுக்கு இறைத்தூதன் என்பதே பொருளாகும். நூஹ் ஒரு நபியு இலா என்ற தகுதியைப் பெற்றவனாவான்.

நா - பி என்ற வாறு எபிறேய மொழியில் சொல்லப்படும் நபி என்ற சொல்லுக்கு செய்தியை அறிவிப்பவன் என்றும், ஒருவருக்காக மற்றவரிடம் பேசுபவன் என்றும் பொருள் சொல்லப்பட்டுள்ளது. கடவுள் தனது விருப்பத்தை அல்லது ஆணையை மாந்தனுக்கு, அவனது உள்ளுணர்வுத் தூண்டுதல் மூலமோ (inspiration), கனவு மூலமோ அல்லது தேவதூதன் மூலமாகவோ கூறுவார் என்பது நம்பிக்கை. தேவ செய்தியைப் பெற்றுக் கொள்பவர்களை நபி என்றும், தேவதூதன் காட்டும் புத்தகத்திலுள்ள வற்றைக் கண்டு அறிந்து கொள்பவரை ரசூல் என்றும் அரபுமொழி குறிப்பிடுகின்றது. இசுலாத்தின் ஒரே ரசூலாக நபிகள் நாயகம் கருதப்படுகிறார். கடவுள் ஒருவரே, ரசூலும் ஒருவரே (லாஇலாஹா இல் அல்லா, முகம்மது ரசூலுல்லா).

நா என்ற தமிழ்ச் சொல்லுக்கு, நாக்கு என்ற பொருளோடு, சொல் மொழி பேச்சு என்றவாறும் பொருள் கொள்ளப்படும். நாவாடுதல் என்பது, பேசுதல் என்றே சொல்லப்படும். நாபா (Naba) என்ற அரபுச் சொல்லுக்கு, ஒருவரிடம் சொல்லப்பட வேண்டிய செய்தி (information) என்பதே பொருளாகும். நாவு என்ற தமிழ்ச் சொல்லே, நாபு - நாபி - நபி எனத் திரிந்தது என்க. நூஹ் என்ற சொல்லும், நா நாவி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. நோவா என்ற எபிரேயச் சொல்லின் திரிபாகவும் கூறுவர். (நோவா பற்றி அடுத்த தலைப்பில் காணலாம்) அக்காலத்தில் மக்கள் கடவுளை மறந்திருந்தனர். பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர். இதனால் சினம் கொண்ட கடவுள் நூஹ் நபியை அழைத்து, மக்களுக்கு நல்லுரை கூறுமாறு பணித்தார். நூஹ் நபி பலவாறு முயன்று மக்களை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகள் வீணாயின. எனவே நூஹ் நபியை தவிர்த்த உலக மக்களை கடவுள் வெள்ளத்தால் அழிக்க முடிவு செய்து அதனை நூஹ் நபிக்குத் தெரிவித்தார். மற்ற சமய நூல்கள் கூறுவது போல், கதையாக வெள்ள நிகழ்வு திருக்குர்ஆன் நூலில் சொல்லப்படவில்லை. மாறாக, நூஹ்நபி பற்றிய செய்திகளை அவ்வப்போது நபிகள் நாயகத்திடம் கூறியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. விவிலியச் செய்திகளே இங்கும் இடம் பெற்றுள்ளன. வெள்ளக் காலம் ஆறுமாதங்களாக திருக்குர் ஆனில் சொல்லப்பட்டுள்ளது. ரஜாப் மாதத்தின் பத்தாம் நாளில் தொடங்கி, முகரம் மாதத்தின் பத்தாம் நாள் வரை)

அல் பெய்காவி (Al - Baizawi) என்ற இசுலாமிய ஆய்வாளர், தமிழ்நாட்டுடன் தொடர்புடைய பல செய்திகளைத் தெரிவிக்கின்றார். இவ்வாறான செய்திகள் மற்ற சமய நூல் ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படவில்லை யென்பது நோக்கத்தக்கது. "நூஹ்நபி மரக்கலத்தைக் கட்டி முடிக்க இரண்டு ஆண்டுகளாயின. மரக்கலத்தின் வெளிப் பகுதியை இந்திய மரத்தைக் கொண்டு மூடினார். கீழ்த்தட்டு விலங்குகளையும், இடைத்தட்டு மக்களையும், மேல்தட்டு பறவைகளையும் கொண்டதாக, மூன்றடுக்கில் அம்மரக்கலம் கட்டப் பெற்றது. இடைத்தட்டில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. கூடுதலான ஒரு செய்தி, ஆதாமின் பாதுகாக்கப்பட்ட உடலையும் நூஹ்நபி தன் மரக்கலத்தில் வைத்துக் கொண்டது தான்"[65]

பெய்காவி தரும் செய்தியில், மரக்கலத்தின் வெளிப்பகுதி இந்திய மரத்தால் அறுக்கப்பட்ட பலகைகளைக் கொண்டு மூடப்பட்டதாகக் கூறுவது, நூஹ் நபியைத் தமிழ் நாட்டுடன் தொடர்பு படுத்துகின்றது. அம்மரத்தை Plain tree என ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். அதற்கு அடி பெருத்த மரம் என்பதே பொருளாகும். பெரு மரம் என்றும் கூறுலாம். தமிழ் நாட்டில் அறியப்படும் அப்பெரு மரங்களாக, ஆல், மா, பலா ஆகியவை உள்ளன. இவற்றில் மா அல்லது பலா மரத்தின் பலகைகளை நூஹ்நபி பயன்படுத்தியதாகக் கருத முடியும். மரக்கலம் 300 கூபித்துகள் (cubits) நீளமும், 50 கூபித்துகள் அகலமும், 30 கூபித்துகள் உயரமும் கொண்டிருந்தது. முற்றிலும் இந்திய மரத்தால் கட்டப் பெற்றதாக மற்றொரு இடத்தில் பெய்காவி கூறுகிறார்.

நூஹ்நபி எந்நாட்டில் வாழ்ந்திருந்தார் என்பதை குர் ஆன் தெளிவு படுத்தவில்லை. என்றாலும் இந்திய மரங்களோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளதால், நூஹ்நபி தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்ததாக (அல்லது குமரிக்கண்டத்தில்) கருத இடமளிக்கப்பட்டுள்ளது. வெள்ளக் கதையின் தலைவன் தமிழனே என்பதை மெய்ப்பிப்பதற்கான அடிப்படையான சான்றை மேற்கண்ட செய்தி தெளிவு படுத்துகிறது.

11:5. விவிலியக் கதை

விவிலியத்தின் பழைய ஏற்பாடு என்பது, உண்மையில் யூத சமய நூலான தோரா என்ற தொகுப்பே. தோரா என்ற நூல் கி.மு. 1250 ஆண்டுகளில் முதன்முதலாக எழுதத் தொடங்கப் பட்டிருக்கலாம் என்பர். மோசே என்ற சமயத்தலைவனே அந்நூலின் முற்பகுதியை எழுதியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். உண்மையில் தோரா நூல் கி.மு. 2000 ஆண்டுக் காலத்திலிருந்தே தொடங்குகிறது. முற்பட்ட 750 ஆண்டுக் கால வரலாற்றை, மோசேயின் முன்னோர் கூறியபடி, மோசே தொகுத்திருக்க வேண்டும். இந்தப் பகுதிக்கு முன்னர் கூறப் படும் பதினோரு அதிகாரங்களும், அதாவது உலகப்படைப்பு முதல் வெள்ளக் காலம் வரையிலும், அறிவியல் கூற்றுப்படி 650 மில்லியன் ஆண்டுகள் முதல், கி.மு. 18000 ஆண்டுகள் வரையிலுமான மிக நீண்ட வரலாற்றை, பதினோரு அதிகாரங்களில் சுருக்கமாகக் கூறியுள்ளனர். இவை மெசபத்தோமிய, சுமேரியக் கதைகளின் தழுவல்களே என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

உலக சமயங்கள் கூறும் வெள்ளக் கதையின் நாயகர் களின் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன. அவர்களைக் காப்பாற்றியதாக அறியப்படும் கடவுளரின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன. தோரா கூறும் நாயகனின் பெயர் நோவா என்பதாகும். இவனுக்கு நாகன் என்ற மற்றொரு பெயரும் இருந்ததாக, தோரா கூறுகிறது. நாகன் என்ற சொல்லுக்கான பொருள் தெரியவில்லை யென்றும், அது சுமேரியச் சொல்லாக இருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அது போல், நோவா என்ற சொல்லுக்கான பெயரும் மூலமும் அறியப்படவில்லை. மெச பத்தோமிய, சுமேரியக் கதைகளில் சொல்லப்பட்ட வெள்ள நாயகர்களின் பெயரை தோரா மாற்றிக் கூறுகிறது. இதற்கான கரணியமும் விளக்கப்படவில்லை. நோவா என்ற சொல், அக் காலத்தில் பேசப்பட்ட எம்மொழிகளிலும் காணப்படவில்லை. வெள்ளக் கதையை எழுதிய (மோசே) ஆசிரியர் தன் விருப் பத்துக்கு அப்பெயரை வைத்திருக்கவும் வாய்ப்பில்லை. எனவே எபிறேய மக்கள் மரபில் நோவா என்ற சொல் அறியப்பட் டிருந்தது எனக் கருதலாம்.

மேலும் யூதர்களிடையே கூட, வெள்ளம் பற்றிய கதைகள் பலவாறாகக் கூறப்பட்டிருக்க வேண்டும். ஓரினத்தார் அறிந் திருந்த செய்திகளிலேயே முரண்பாடுகள் காணப்படுகின்றன. படைப்புக் காலம் தொடங்கி, எகிப்திலிருந்து மீண்ட காலம் வரையிலான செய்திகளிலும் முரண்பாடான செய்திகளை அம்மக்கள் கொண்டிருந்தனர். மோசே மட்டுமே தோரா என்ற நூலைத் தொகுத்ததாகத் தெரியவில்லை. மோசே காலத் துக்குப் பிறகும் சிலர் தனித்தனியாக குறிப்புகளை எழுதி வைத் திருந்தனர். அவை நான்கு குழுவினரிடம் இருந்ததாகக் கருதப் படுகிறது. கி.மு. 700 ஆண்டுகளில், அந்நான்கு குழுவினரையும் அழைத்து, அவர்களது குறிப்புகளை ஆய்வு செய்து, மூன்று குழுவினர் கொடுத்த தகவல்களைமட்டும் ஏற்றுக் கொண்டு, ஒருவர் மட்டுமே கூறிய குறிப்புகளை விடுத்து, புதிய நூலாக அவர் வரலாற்றைத் தொகுத்தனர். அதுவே தோரா எனப்பட்டது. எனவே, தோரா என்ற நூல், பல்வேறு தரப்பாரிடமிருந்து பெற்ற செய்திகளின் தொகுப்பே என அறியலாம். இருப்பினும் அந்நான்கு மரபினர் வைத்திருந்த குறிப்புகளை அவர்கள் அழித்துவிடவில்லை. மாறாக அவை எகிப்திலிருந்த அலெக் சாந்திரியா நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

இவைகளில் ஏராளமான வரலாற்றுச் செய்திகள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. கிறித்துவ சமயம் எகிப்தில் பரவத் தொடங்கிய (கி.பி. 400) காலத்தில், கிரேக்கர்கள் பாதுகாப்பிலிருந்த அந்நூலகத்தில் ஏராளமான வரலாற்றுக் குறிப்புகளும் இடம் பெற்றிருந்தன. கிறித்துவ சமயத்தின் வெறிக்கும்பல் ஒன்று, அந்நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்தும் கடவுளுக்கு எதிரான கருத்துகள் கொண்டவை எனக் கருதி, அந்நூல் நிலையத்தையே தீக்கிரையாக்கியது. அந்நூல்கள் பாதுகாக்கப் பட்டிருந்தால் பண்டைய மேற்கித்திய வரலாற்றில் விடுவிக்கப் படாத பல செய்திகளுக்கு விடைகிடைத்திருக்கும். (இடைக் காலத்திய சோழர் மதுரையை அழித்து தீக்கிரையாக்கியதாலும், பாண்டியர்கள் கங்கை கொண்ட சோழபுரத்தைத் தீயிட்டுக் கொளுத்தியதாலும், தமிழர் தொடர்பான வரலாற்றுப் பதிவுகள் எல்லாம் அழிந்து போயின).

வெள்ளக் கதைபற்றிய தெளிவான மேலும்பல செய்திகள், தீக்கிரையாக்கப்பட்ட நூலகத்தில் இருந்திருக்க வேண்டும். இதனால் தோராவில் சொல்லப்பட்டிருந்த பல செய்திகளுக்கு விளக்கங்களைப் பெற இயலாமல் போய்விட்டது. மேற்கண்ட நான்கு மரபுகளின் தொகுப்புகளில், யூதர் சமயம் தொடர்பான செய்திகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டு, அவர்தம் வாழ்க்கை முறை, அரசியல் நடப்புகள், வானவியல், கணக் கியல், வழக்குகள், வழக்காறுகள் தொடர்பான செய்திகள் அனைத்தும் நீக்கப்பட்டன. தோரா என்பது முழுக்க முழுக்க சமயம் சார்ந்த நூலாகவே கருதப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

மேற்கித்திய ஆய்வாளர்களால் விளக்கவியலாத சொற் களாக நாகன், நோவா என்பவை ஒதுக்கப்பட்டன.[66] இச்சொற் களுக்கான மூலமும் பொருளும் தெரியவில்லை என்றே ஆய்வா ளர்கள் கூறுகின்றனர். அவர்கள் தமிழ்க் கண்ணோட்டத்தில் இச்சொற்களை அணுகவில்லை என்பதை உணர முடிகின்றது. வெள்ளக் கதை எந்தச் சூழல்களை விளக்குகிறது அந்நிகழ்வு எங்கே அறியப்பட்டது என்பதற்கான மூலத்தை விவிலிய ஆய்வாளர்கள் இதுவரையிலும் கூட அறிந்திருக்கவில்லை. மேற்கித்திய சூழல்களை கருத்தில் கொண்டு அளிக்கப்பட்ட விவிலிய விளக்கங்கள் முரண்பாடான தகவல்களைத் தருவ தோடு, உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் தந்துள்ளன.

நாகன் என்பது தனித்தமிழ்ச் சொல்லே என்றும், நோவா என்பது தமிழ்த்திரிபுச் சொல்லே என்றும் நாம் விளக்கிக் கூறலாம்.

நாகன்: நா என்ற வேர்ச் சொல்லிலிருந்து விரிந்ததே நாகன்என்ற சொல்லாகும். நா: நீண்ட, மிக விரிந்த என்றவாறு பொருள் கொள்ளப் படும்.

நா = நாக்கு, நாவு, மணியின் நடுத்தண்டு, தீக்கொழுந்து, மையம்.

நாவாடு = பேசு. நாவெழவில்லை = பேச இயலவில்லை.

நாவினால் சுட்ட வடு - குறள்

நா வசைய நாடசையும் - பழமொழி.

யாகாவராயினும் நா காக்க - குறள்.

நாத்தடிப்பு = இனிமையற்ற பேச்சு.

நாமகள், நாவடக்கம், நாவரசர், நாவலர், போன்ற சொற்கள், பேச்சைக் குறிப்பன.

நா = மொழி, தமிழ்ப் பொருளையே Mother tongue என்ற ஆங்கிலச் சொல் விளக்கும்.

நா - நகல் - நகர் - நகர்வு = அசைவு, ஓட்டம், போக்கு.

நகர்: நீண்டு விரிந்து செல்லும் ஆறு. நகர்தல் என்ற பொருளில் கொள்க.

நகர்: ஆற்றைக் குறித்த பழந்தமிழ்ச் சொல். பிற்காலத்தில் வழக்கிழந்து போனது. ஆனால் அச் சொல்லை மூலமாகக் கொண்டு விரிந்த சொற்கள் உள்ளன. மூலம் வழக் கொழிந்து, விரிவுகள் பயன் பாட்டில் உள்ளன.

நகர்: வளர்ந்து கொண்டிருக்கும் பேரூர், நகரம்.

நகர் என்பது ஆறு. ஆற்றங்கரைகளிலேயே அக்காலத்தில் ஊர்கள் தோன்றின. அவை பேரூர்களாக விரிந்தன. நகரின் (ஆற்றின்) கரையிலிருந்த பேரூர்களும் நகர் என்றே சொல்லப்பட்டன. நகர் - நகரம் என்ற சொற்களுக்கான மூலச் சொல் நகர் (ஆறு) என்பதே.

நகர் (எபிறேயம்): வடி, நகர், ஆறு, ஓடு ஆகிய தமிழ்ச் சொற்கள் நகர்தலைக் குறித்தனவே. இவையனைத்தும் அவ்வாறே எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ளன. (Wadi, Nahar, Yor, Oddu)[67]

வடி: சிறிய அளவில் ஓடும் சிற்றாறு.

நகர்: வடியினும் நீளமானது, ஆற்றிலும் குறைந்தது.

ஆறு: நகரிலும் நீளமானது.

ஓடு: பேராறு. (சிந்து ஆற்றை, ஓடு என்றே எபிறேய மொழிச் சொல் குறிப்பிடுகின்றது. ஓடு பாயும் நாடும் ஓடு என்றே சொல்லப்பட்டது. ஓடு (எபிறேயம்): சிந்து ஆறு, இந்தியா.

இந்தியாவை இன்றும் ஓடு என்ற சொல்லால் இசுரேலிய அரசு குறிப்பிடுகிறது.

நகர் - நகல் - நகம் = வளரும் விரல் நகம்.

நகம் - நாகம் = நீண்ட உடலைக் கொண்ட பாம்பு.

நாகம் - நாகர் = பாம்பை வழிபட்ட மக்கள்.

நாகம் - நாக என எபிறேய மொழியிலும் சொல்லப்பட்டது (ஏவாள் கதை).

நாகம் என்ற தமிழ்ச் சொல் நா என்று சமற்கிருதத்தில் திரிந்தது.

சாரைப் பாம்பு - சார்ப்ப - சர்ப்ப என சமற்கிருதத்தில் திரிந்தது.

சர்ப்ப - செர்ப்போ (கிரேக்கம்) - செர்ப்பண்ட் (Serpent - ஆங்கிலம்)

சுனுப்பு = வளைவு; சுன்னுதல் வளைதல்; மூலையிலுள்ள நிலம் சுனுப்பு எனப்படும்.

சுனுக்கு = வளைவு, வட்டம்.

சுனுக்கு சுந்தரி = ஆடவரிடம் வளைந்து நெளிந்து உறவாடும் பரத்தை. பாம்பு வளைந்து வட்ட மிட்டுப் படுப்பதால், சுனுக்கு என்ற சொல்லே, Snake என்றும் திரிபுபட்டிருக்கலாம்.

நாகர்: நாகத்தை வழிபட்டோர்.

நாகர்: நகரத்தில் வாழ்ந்திருந்தோர், நகரிய நாகரிக மக்கள்.

நகர் - நாகர் - நாகரிகர் - நாகரிகம் = முன்னேற்றமான நகர வாழ்க்கை.

நாக நாடு = இந்தோனேசியாவிலுள்ள சாவாத் தீவு. பாம்புகள் நிறைந்த அத்தீவில் பாம்பு வழிபாட்டுக் குரியதாயிற்று.

> **கீழ்நில மருங்கி னாகநா டாளு**
>
> **மிருவர் மன்னவர் – மணிமேகலை, 9:54 – 55.**

நாக நாட்டின் அரசுச் சின்னமாக நாகம் அறியப்பட்டிருந்தது. சாவாவின் தலை நகரம் நாகபுரம் எனப்பட்டது.

நாகர்கள் என்ற பெயரிலேயே நாகரிகம் அறியப் படுவதால், நாகர்கள் காட்டு மிராண்டிகளாக இருந்தனர் என்ற மணி மேகலையின் கூற்று, புத்த சமயத்தில் இணைந்த நாகர்கள் நாகரிகமடைந்தனர் எனக் கூறுவதற்கேற்ற உத்தியாகும்.

நக்கம்: சட்டையைக் கழட்டிய நாகம்.

நக்கம்: அம்மணம், ஆடையில்லா நிலை.

நக்கன்: அரைகுறையான ஆடையை உடுத்தியிருப்பவன், சிவன்.
நக்க சாரண நாகர் = ஆடைமயற்ற மலைக் குடியினர்.

நக்க சாரணர் நாகர் வாழ் மலைப்
பக்கம் சார்ந்தவர் பான்மைய மாயினன்
– மணிமேகலை, 16: 4 – 59)

குமரிக் கண்டம் அழிந்த போது, சாவாத் தீவினரில் பலர், வங்கக் கடற்கரைப் பகுதிகளின் (ஒரிசா) குடியேறினர் என்பர்.

நாகரிகம் என்பது தமிழ்ச் சொல்லே. அது நாக்ரிக் என சமற்கிருதத்தில் திரிந்தது. இதுவே மூலச் சொல் எனத் தவறாகக் கருதிய சிலர், நாகரீகம் என எழுதினர்.

நகர் = பேரூர், மன்னனின் குடியிருப்பு

பாழியன்ன கடியுடை வியனகர் - அகநானூறு, 15.

நகர் = **அரண்மனை. நிதி துஞ்சு வியனகர்** - சிலப்பதிகாரம், 27:200.

நகர் = கோயில். முக்கட் செல்வர் நகர்வலம் செய்கே - புறநானூறு.

நகர் = மண்டபம். அணிநகர் முன்னினானே - சீவகசிந்தாமணி, 701.

நகர் = மனைவி. நகர், வீட்டையும் குறித்ததால் வீட்டின் தலைவி நகர் எனப்பட்டாள்.

வருவிருந் தோம்பித் தன்னகந் விழையக்கூடி - கலித்தொகை, 8.

நகர்: ஒளி பொருந்திய காட்சிக்கினிய நகர மாதலால், ஒளியென்றும் சொல்லப்பட்டது.

நகர் - நகு - நகை = ஒளிர்தல், மகிழ்தல், இன்புற்றிருத்தல்.

இடுக்கண் வருங்கால் நகுக – குறள்.

நகர்: பேரூர்களையே குறித்தது. **நெடுநகர் வினை புனை நல்லில்** - புறநானூறு, 23.

நெடுநகர், மாநகர், கோநகர் எனவும் பேரூர்கள் சொல்லப் பட்டன.

நாகர் என்போர் தமிழரே. குமரிக்கண்டத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்திருந்த அம்மக்கள், குமரிக் கண்ட அழிவின் போது, தென்னிந்தியக் கடற்கரைப் பகுதியிலும், இந்தியாவின் கிழக்கு மலைகளிலும் குடியேறினர். நாகாலாந்து அம்மலைப் பகுதியாகும். நாகபுரி, கோட்டா நாகபுரி, போன்ற வடக்கி லிருக்கும் நகரங்களும், நாகப் பட்டினம், நாகூர், நாகர் கோயில் தமிழகத்து நகரங்களும் அவர்கள் குடியேற்றங்களாகும்.

எபிறேய மொழியிலும் நாகம் என்ற சொல்லும், நாகர் என்ற பெயரும் காணப்படுகின்றன. நாகஸ் (Nahas) என்ற

பெயரில் அம்மான் (Ammon) என்ற பகுதியில் ஒரு மன்னன் இருந்ததாக விவிலியம் கூறுகிறது (1 சாமு: 11). யூத இனத்தின் முதுபெரும் தந்தையான அபிறகாம் என்பவனின் பாட்டனின் பெயர் நாகர் என்றே சொல்லப்பட்டுள்ளது. இச்சொல், நாகோர் (Nahor) என்று திரிபுபட்டுள்ளது. அபிறகாமின் உடன் பிறப்பும் நாகோர் என்ற பெயரில் அழைக்கப்பட்டான். (ஆதி. 11:22 - 25; 11:26 - 29). இப்பெயருக்கான மூலமும் பொருளும் தெரியவில்லையென விவிலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாட்டனுக்கும் பெயரனுக்கும் ஒரே பெயர் இருந்திருக்க வாய்ப்பில்லை என விவிலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாட்டன் பெயரைப் பெயரனுக்கு வைப்ப தென்பது தமிழர் மரபு, வழக்கு என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

மேலும் நாகூர் என்ற நகரமும் மெசபத்தோமியாவின் வடமேற்குப் பகுதியில் அரண் நகருக்கு அருகே (Haran) அறியப்பட்டுள்ளது (ஆதி. 24:10). ஆசீரிய, அறமிய மக்களில் நாகர் என்ற பிரிவினர் இருந்ததாக விவிலியம் கூறுகிறது. (ஆதி.22:20 24) நாகர் என்ற மரபினர் வாழ்ந்திருந்த நகரங்கள், அவ்வினக் குழுக்களின் பெயரால் நாகர் என்றே அழைக்கப் பட்டதாக விவிலிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக் குழுக்கள் அபிறகாமுடன் மரபுத் தொடர்பைக் கொண்டிருந் தவை என்பதும் ஆய்வாளர்களின் கருத்து.

நா ஓட்டம், நாவாய் ஓட்டம் என்ற தமிழ்ச் சொற்களின் திரிபுகளாக, நாயோட் (Nayot), நாவா யோட் (Nawayot) ஆகிய பெயர்களைத் தாங்கிய ஊர்களும் பாலத்தீனத்தில் அறியப் பட்டுள்ளன. (I சாமு. 19:18-23)

மேலும் நா என்ற முன்னொட்டில் தொடங்கும் எபிறேய மொழிச் சொற்கள் பல உள்ளன. அவை நீளம், நீட்சி, வளர்ச்சி போன்ற பொருளில் அறியப்படுகின்றன.

நோவா:

நோவா என்ற பெயருக்கான பொருளை விவிலிய ஆய்வா ளர்களால் அறிய இயலவில்லை.[68] ஆனால் அக்காலத்தில் எபிறேய வழக்கில் அச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்க வேண் டும் என்பது தெளிவாகின்றது. மேலும் அவர்கள் அச்சொல்லின் பொருள் தெரிந்தே பயன்படுத்தியிருக்கின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது. முந்திய கதைகளில் சொல்லப்பட்ட வெள்ள

மாந்தனின் பெயரை மாற்றி, நோவா எனக் குறிப்பிட்டுள்ள தால், எபிறேய மொழியில் பண்டைக்காலத்தில் அறியப்பட்ட அச்சொல், பிற்காலத்தில் வழக்கிழந்து போயிற்று எனக் கருதலாம். எபிறேய மொழியில் ஏராளமான சொற்களுக்கு மூலமும் பொருளும் தெரியவில்லையென விவிலிய ஆய்வா ளர்கள் கைகளை விரிக்கின்றனர். அவ்வாறு பொருள் தெரி யாமல் விடப்பட்ட சொற்களில் பல தமிழ்ச் சொற்களாக, திரிந்தும் திரியாமலும் உள்ளதை தற்கால ஆய்வுகள் மெய்ப் பிக்கின்றன.

நா என்ற தமிழின் வேர், நாவு - நாக்கு என விரிந்தது. நீண்ட உருவத்தைக் கொண்டவை நா என்ற வேரினின்றே சொற்களாக விரிந்துள்ளன.

நா + அகம் - நாவகம் - நாயகம் : ஒரு குழுவின் தலைமை.

நாயக்கன் = தெலுங்கானவின் அறியப்பட்ட ஒரு குழு.

நா - நாயப் (அரபு மற்றும் பாரசீக மொழி) = வருவாய்த் தலைமை அலுவலர். நாயப் சிரஸ்தார் (தலைமை) என்று சொல்லப்பட்டது.

நாயர் - வேளாண் தலைவன். நாயன் - நாயர் என ர் விகுதி பெற்றது.

நா + இல் = வீட்டைச் சுற்றி நீண்டிருந்த மதில்சுவர், நாயில்.

நா + இறு = நீண்ட கதிர்களைக் கொண்ட கதிரவன், நாயிறு.

நாய் : நீண்ட வாலைக் கொண்ட விலங்கு.

நாவலம் (தீவு) : நீர் சூழ்ந்துள்ள நிலம் (தென்னிந்தியா).

நாவாய்: நீண்ட வாயை அல்லது முகப்பைக் கொண்ட மரக்கலம்.

நாவி: மரக்கலம். வங்க நாவி = இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

நாவி: இப்போதும் மலையாளத்தில் மரக்கலத்தைக் குறிக்கும் வழக்கிலுள்ள சொல்.

நாவியன் - நாவிதன்: நீண்ட கத்தியை வைத்திருப்பவன்.

நாழி, நாள், நாளம், நீளை, நாற்றம், நாற்று, நானம் (ஞானம்), நாலம் போன்ற சொற்கள், நீட்சியைக் குறிப்பனவே.

நாவி, நாவாய் என்ற மரக்கலத்தைக் குறித்த சொற்கள், நோவா என எபிறேய மொழியில் திரிபுபட்டுள்ளது. நோவா என்பது மாந்தனைக் குறித்த பெயரன்று. அம்மாந்தனின் வினையைக் குறித்த சொல்லே.

நோவா: மரக்கலத் தலைவன், மீகாமன், நாவாயோட்டி என விரியும்.

ஊட் நா பிஷ்டிம் என்ற சொல்லும் (மெச. கதை), பெயரைக் குறிக்காமல் வினையைக் குறித்த சொல்லே என்பதை நோக்க வேண்டும். ஒருவனுடைய இயற்பெயரைக் குறிப்பிடாமல், தொழிற் பெயரைக் கூறி அழைப்பதும் தமிழர் வழக்காகும்.

பொன்னைத் தட்டி கலன் செய்பவன் தட்டான்.

மரங்களை (பலகைகளை)த் தைப்பவன் தைக்கன் - தச்சன்

பண் இசைப்பவன் பாணன்.

பறை யொலிப்பவன் பறையன்.

செக்குடையோன் செக்கான் என விரியும்.

எனவே, நோவா என்ற சொல், நாவாயன் அல்லது நாவியன் என்ற தமிழ்ப் பொருள் தரும் சொற்களின் எபிறேய மொழித் திரிபே என்க.

நோவா என்பான் கட்டிய மரக்கலம், இந்திய மரத்தால் உருவாக்கப்பட்டது, குறிப்பாகப் பலா மரத்தால் செய்யப் பட்டது என்ற தகவலை, திருக்குர் ஆன் ஆய்வாளர்கள் விளக் குகின்றனர். இவ்வாறு கூறியவர்கள் மேலை நாட்டு ஆய்வா ளர்களே என்க. எனவே, நோவா என்ற வெள்ள மாந்தன் தமிழனே என்ற கருத்து வெளிப்படுகின்றது. விவிலிய ஆய்வா ளர்கள் கருதுவதுபோல் அவன் மேலை நாட்டைச் சார்ந்தவன் என்ற கருத்தில் உண்மையில்லை.

நோவாவின் மரக்கலம், அராரத் என்ற மலைத் தொடரில் தரை தட்டியதாக விவிலிய ஆய்வாளர்கள் கருதினர். அராரத் என்பது எபிறேய மொழிச் சொல்லாகும். எபிறேய மொழிக்கும் முந்திய மொழியான அக்காடிய மொழியில் ஊராற்று (Urartu) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊராற்று என்ற சொல்லின் திரிபே அராரத் (Ararat) என்பதாகும். ஆய்வாளர்கள், ஒரு சொல்லுக்கான பொருளை அறிய முற்படும்போது, திரிபுச் சொல்லை விடுத்து, மூலச் சொல்லையே கொள்ள வேண்டும். அசீரியக் குறிப்புகளில் (கி.மு. 9ஆம் நூற்றாண்டு) ஊராற்று என்ற சொல்லே காணப்படுகிறது.

அராரத், ஊராற்று என்று சொல்லப்படும் மலைத்தொடர், மெசபத்தோமியின் வடதிசையில் உள்ளது. வரைபடத்தை நோக்குவோர் இதன் திசையை அறிந்து கொள்ளலாம். இம் மலைக்கு அருகில் வண் (Van) என்ற ஏரியும் உள்ளதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. (வண் என்பது ஏரி அல்லது குளத்துக்குரிய தமிழ்ச் சொல்லே. வண்ணில் துணி வெளுப்பவன் வண்ணன் அல்லது வண்ணான் எனப்பட்டான்.) ஆர்மீனிய நாட்டில்தான் அராரத் என்ற மலைத்தொடர் இருப்பதாகக் குறிப்பிடுகின் றனர். மெசபத்தோமியாவிற்கு நேர் வடக்கேயுள்ள நாடு ஆர்மீனியா.

ஆனால் விவிலியம் கூறும் மற்றொரு செய்தி, ஆர்மீனியா வுடன் தொடர்பற்றுக் காணப்படுகின்றது. நோவாவின் மக்கள் கிழக்கிலிருந்து (கிழக்கிலுள்ள நாட்டிலிருந்து) வந்து தைகிரீஸ் ஆற்றங்கரையில் குடியேறினார்கள் என்று விவிலியம் வேறு ஓர் இடத்தில் தெளிவாகக் கூறுகிறது. அராரத் மலையிலிருந்து நோவாவின் மக்கள் மெசபத்தோமியாவுக்குள் நுழைந்தனர் எனக் கண்டால், அவர்கள் வடக்கிலிருந்து வந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு சொல் லப்படவில்லை யென்பதால், விவிலிய ஆய்வாளர்கள் கூறும் மரக்கலம் தரை தட்டிய இடமும், மக்கள் வந்த திசையும் முரண்படுவதால், அராரத் என்பது ஆர்மீனிய மலை என்ற கருத்து தவறானது என அறியலாம். மேலும் இசுலாமிய ஆய்வாளர் விஸ்டன் என்பார், அரராபியா (Araratia) என்பது மலையைக் குறித்த சொல் அல்லவென்றும் அது ஓரிடத்தைக் குறித்த சொல்லே என்றும் கூறுகிறார் (ஆர்மீனிய வரலாறு, ப. 361) வெள்ளத்தில் சிக்குண்ட மரக்கலம், மலைமுகட்டில்தான் தரை தட்ட வேண்டுமென்பது ஆய்வாளர்களின் சிந்தனையாக இருந்துள்ளது. விவிலியம் அவ்விடத்தை மலை என்று குறிப் பிடவேயில்லை. மரக்கலம் எங்கு வேண்டுமானாலும் நிலை கொண்டிருக்கலாம் என்று விஸ்டன் கருதுகிறார். அராரத் மலையில் தரை தட்டியதற்கானச் சான்றுகள் எவையும் அம் மலையில் இல்லை. விவிலிய ஆய்வாளர்கள் கருதியபடி, ஆர்மீ னியாவில் உள்ள தேவாலயம் ஒன்றில் நோவா மரக்கலத்தின் துண்டு ஒன்று இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. உண்மையில் உடைந்த மரக்கலத்தின் துண்டுதான் அது என்பதை இதுவரை எவரும் மெய்ப்பிக்க முன்வரவில்லை. அது ஒரு நம்பிக்கையின் பாற்பட்ட செய்தியாகவே உள்ளது.

அராரத் என்ற சொல்லைவிட, ஊராற்று என்ற சொல் தமிழோடு நெருக்கமாக உள்ளதை அறியலாம்.[69] இச்சொல்லில் ஊர் + ஆறு ஆகிய இரண்டு சொற்கள் உள்ளன. இதன் வழியில், ஆற்றங்கரையிலிருந்த ஊர் என்ற பொருள் விஞ்சி நிற்கிறது. ஆற்றூர் என்ற சொல்லே இடம் மாறி ஊர் ஆற்று என்று சொல்லப்பட்டுள்ளது. ஆற்றூர் என்ற தமிழ்ப் பெயர் இன்றும் வழக்கிலுள்ளது.

ஆற்றூர் - ஆத்தூர் என மருவியுள்ளது.
கூடல் ஆற்றூர் - கூடலையாத்தூர் (சிதம்பரம் வட்டத்திலுள்ளது)

கல் ஆற்றூர் - கல்லாத்தூர் (உடையார் பாளையம்)

ஆத்துக்குறிச்சி, ஆத்தங்கரை, ஆத்து நத்தம், ஆத்தம்பாடி போன்ற ஊர்களின் பெயர்கள் இன்னும் அறியப்படுகின்றன.

ஊராற்று என்ற இடம், மெசபத்தோமிற்குக் கிழக்கே அறியப்படும் சிந்துவெளிப் பகுதியில் உள்ள ஆற்றையே குறிப்பிடுகிறது எனலாம். இன்றைய பாகிஸ்தானத்தின் தென் பகுதியில் ஆற்றுக் கழிமுகத்திலிருந்த ஊரில் அம்மரக்கலம் கரையேறியது எனக் கருதுவதற்கு நோவா பற்றி முன்னர் சொல்லப்படும் செய்திகளில் விளக்கங்கள் காணப்படுகின்றன. அங்கேயே தங்கிய நோவாவின் குடும்பம், அங்கு கொடி முந்திரிப் பழத்தோட்டம் போன்ற வேளாண் தொழிலில் ஈடு பட்டது எனக் கருதலாம். நோவா அவ்விடத்திலேயே இறந்து பட, அவனது மக்களும் மற்றவரும் அடுத்த சில ஆண்டுகளில், மேற்கு நோக்கிச் சென்று, தைகிரீஸ் ஆற்றங்கரையில் குடியேறியதாகக் கருதுவதற்கான சூழல்கள் உள்ளன. மெசபத்தோமியாவிற்கு நோவா வரவில்லை என்றும் அறியப்படுகின்றது. வெள்ளக் காலத்துக்குப் பிறகே மெசபத்தோமியாவில் வேளாண் தொழில் மேற்கொள்ளப்பட்டது என ஆய்வாளர்கள் கூறும் செய்திகள், நோவாவின் மரபினரே அங்கு முதன்முதலில் அத் தொழிலை மேற்கொண்டனர் எனக் கருதலாம்.

12. உலகின் புவியியல் வரலாறு

1. சமயப் பார்வை

உலகத் தோற்றம்: சூரியனின் தோற்றம்:

விரைவாக சுழன்று கொண்டிருந்த முகிற்கூட்ட தூசிகளும், வாயுக்களும் இணைந்து ஒரு மையப் பகுதியை உருவாக்கிக் கொண்டன. அம்மையப் பகுதி ஒரு கோடி (1,000, 000) செல்சியஸ் வெப்ப அளவு உயர்ந்தது. நீர்வாயுவும் ஹீலியமும் இணைந்து வெப்ப அளவை அதிகப்படுத்தியதோடு ஒளியையும் உமிழ்ந்தது. இரண்டு இலக்கம் அயிரத் தொலைவுக்கு (கி.மீ.) அந்தக் கதிர்வீச்சின் தாக்கங்கள் இருந்தன. இதுதான் கதிரவன்.[70]

கோள்களின் தோற்றம்:

இந்தக் கதிரவனின் கட்டுக் கடங்காத வெப்பக் குழம்புகள், வெடித்துச் சிதறியபோது உருவானவைகளே கோள்களாகும். தொடக்கத்தில் கோள்களின் மேற்பரப்புகளும் சூரியனைப் போலவே வெப்ப உருண்டையாகவே இருந்து நாளடைவில் மேற்பரப்புகள் குளிர்ந்தன. எட்டுப் பெருங்கோள்களும், சிறிய கோள் ஒன்றும், எண்ணற்ற பாறைத் துகள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. அவைகளில் இவ்வுலகம் சரியான இடத்தில் இயற்கையாக அமைந்து விட்டதால் வெப்பமும் தண்மையும் வேண்டிய அளவில் உருவாகி, தொடர்ந்து உள்ளிருந்து வெளிப்பட்ட தீப்பிழம்புகளால் கரிவாயு, நீர், நீராவி போன்றவை வெளிப்பட்டன. காலப்போக்கில் நீரின் அளவு பெருகி கடல்களாயின. கரிவாயு வெளியேறி மேகங்களை உருவாக்கின. சூரியனின் வெப்பத்தால் நீர் சுழற்சி தோன்றியது. கடல், மேகம், மழை, ஆவியாதல் என்ற சுழற்சி உருவானது.[71]

அணுக்களால் உருவான உயிரினங்கள், கரிவாயுவை உயிர் வாயுவாக மாற்றின. அணுக்களின் வளர்ச்சி கடல் வாழ்

உயிரினங்களையும், நில உயிர்களையும் தோற்றுவித்தன. பல கோடி ஆண்டுகளில் நிகழ்வுற்ற வளர்ச்சியின் இறுதியாகவே மாந்தன் உருவானான். இவ்வுலகிலுள்ள உயிரினங்களில் மாந்தனே அகவையில் குறைந்தவனானான்.[72]

அறிவியல் கூற்று:

ஒளி, காற்று, நீர், உயிரினங்கள், விலங்குகள், மாந்தன் என்றவாறு உயிரினங்களின் வளர்ச்சி நிலைகளை அறிவியல் விளக்குகின்றது. ஒவ்வொரு உயிரினமும் அடுத்த நிலைக்கு முன்னேற பல கோடி ஆண்டுகளை எடுத்துக் கொண்டது. இறுதியாக குரங்கிலிருந்தே மாந்தன் பிறந்தான் என்று டார்வின் வலியுறுத்தினார். இது அறிவியல் பார்வையாகும்.

சமயப் பார்வை:

உலகின் பல்வேறு சமயங்களும் பேரண்டம், அண்டம், சூரியன், கோள்கள், உயிரினங்கள், மாந்தத் தோற்றம் ஆகியவை தோன்றிய நிகழ்வுகளை எடுத்துரைக்கின்றன.

மெசபத்தோமியச் சமயம்[73]:

ஈனும் - மா - எல் - இஷ் (Enum - ma - el - ish) என்ற சமய இலக்கியம் இவ்வாறு கூறுகிறது.

“தொடக்கத்தில் எங்கும் வெறுமையே காணப்பட்டது. இன்னதென்று தெரியாத, மயக்கமான காட்சி தென்பட்டது (Chaos). அப்போது நிலமோ நீரோ இல்லை. இந்த மயக்கமான உணர்வு, அப்சு, அவன் மனைவி தீயமத் (Apsu - Tiamat) என்ற கடவுள் இணையாகச் சொல்லப்பட்டது. முதலில் இவ்விணை பல கடவுளர்களை (தேவர்களை)ப் பெற்றெடுத்தது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே பகைமை உருவாயிற்று. இறுதியில் யா என்ற ஒரு மகன் தன் தந்தையாகிய அப்சுவைக் கொன்றான். இந்த யா என்பவனே முதற்கடவுள் என்று மற்றொரு இலக்கியம் கூறுகிறது. தன் பிள்ளைகள் தனக்கெதிராக வந்ததைக் கண்ட தாயாகிய தீயமத், கொடிய நஞ்சைக் கொண்ட பாம்பு அரக்கியாகத் தன்னை வெளிப்படுத்தினாள். தன்னுடைய கருவிலிருந்து கோடிக்கணக்கான பேய்களை அவள் உருவாக்கினாள். இப்பேய்கள், தீயமத்தைப் பாதுகாத்தன.”

பிற கடவுளர்கள் தாயாகிய அரக்கியை எதிர்க்க இயலாமல் ஓடிப்போனார்கள். இறுதியில் யா என்ற கடவுள் தனது மகனான மருது-க என்பவனை அரக்கியை எதிர்த்துப் போரிட அனுப்பினான். மருது - க, அரக்கியைத் தனது அம்பால் எறிந்து கொன்று, பிற பேய்களையும் அழித்தான். தந்தையின் ஆசியுடன், மருது - க இப்பேரண்டத்தைப் படைத்தான். உலகைப் படைத்தான், மாந்தனைப் படைத்தான். மற்ற கடவுளர்கள் இதனைக் கண்டு மகிழ்ந்தனர். யா என்பவன் முழு முதற் கடவுளானான். அவன் மகன் மருது - க, பாபிலோனில் தனக்கென ஒரு கோயிலை உருவாக்கிக் கொண்டு (Esagil), அங்கிருந்து அந்நாட்டை ஆண்டு வந்தான். அவன் படைத்த முதல் மாந்தனின் பெயர் ஆதப்பா (Adappa) என்பதாகும்.

பிற கதைகள்:

மெசபத்தோமியக் கதையைத் தழுவியே கனானிய, உகாரியக் கதைகளும் உள்ளன. ஆழியன் பால் (Aliyen Baal) என்ற கடற் கடவுளும் மோட் என்ற இறப்புக் கடவுளும் போரிட்டதில், மோட் இறந்து போனான். ஆழியன் பால் இவ்வுலகைத் தோற்றுவித்தான்.[74]

விவிலியக் கதை:

மற்ற கதைகளுக்கு மாறுபட்டது. பல கடவுளர் குழப்ப மின்றி ஒரே கடவுள் இவ்வுலகைப் படைத்தார். ஆனாலும் மெசபத்தோமியக் கதையின் பல கூறுகள் விவிலியத்திலும் உண்டு. அக்கதை யூத சமயக் கொள்கைகளுக்கு ஏற்ப மாறுதல் செய்யப்பட்டது.

ஆறுநாளில், ஒவ்வொரு நாளாக, ஒளி - நீர் - கடலும் நிலமும் பிரிப்பு - கோள்கள் உள்ளிட்ட சூரியக்குடும்பம் - மீன்களும் பறவைகளும் - விலங்குகள் - மாந்தன் என்ற வரிசையில் படைப்பு மேற்கொள்ளப்பட்டது.[75]

Yom *(யோம்) : எபிரேய மொழியில் யோம் என்ற சொல்லுக்கு நாள் என்று மட்டும் பொருளில்லை. ஒரு விநாடியிலிருந்து ஒரு யுகம் வரையிலான காலத்தை யோம் என்பர். இது யுகம் என்று சமற்கிருதத்திலும், ஊழி என்று தமிழிலும் சொல்லப்படும். 6 நாள் கணக்கு மொழி பெயர்ப்பின் முரண்பாடாகும்.*[76]

தமிழ்க்கதை: மேற்கண்ட மேற்கித்திய படைப்புக் கதைகளைப் போன்று தமிழில் கதைகள் அறியப்பட்டிருந்தனவா? மேற்கித்திய கதைகளே

தமிழ்ச் சூழலில் சொல்லப்பட்ட தமிழ்க் கதைகள் தாம். அது குடியேற்றத் தமிழர்கள் கொண்டு சென்றதாகும். ஆதப்பா - ஆதாம் என்ற சொற்களை ஒப்பு நோக்குக.

பரிபாடல் சொல்லும் படைப்பு:

விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செல்ல
கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண் பெய றலை இய ஊழியும் அவையில்
உணமுறை வெள்ளம் மூழ்கி யார் தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி அவற்றிற்கும்
உள்ளீடாகிய இரு நிலத்து ஊழியும் – பரிபாடல் 2 : 3 – 12.

ஊழி என்பது விவிலியம் கூறும் யோம் என்ற சொல்லுக்கான பொருளைத் தரும். பரம்பொருளின் படைப்பில் ஒவ்வொரு ஊழியாக, ஆகாயம் தோன்றி, அதனின்றும் காற்று தோன்றி, அதனின்றும் தீத்தோன்றி, அதனின்றும் நீர் தோன்றி, அதனின்றும் நிலம் தோன்றி, இறுதியில் உயிரினங்களும் மாந்தனும் தோன்றினான்.

ஆழிமுதல்வ! நிற்பேணுதும் தொழுதும் ஆதி முதல்வனே! உன் சக்கரம் என்ற ஆயுதம் அவுணர்களுடைய தலைகளைப் பனங்காய்களைச் சீவுவது போல் அரிந்து அழித்தது. யா என்ற கடவுளின் மகன் மருது - க, பேய்களின் தலைகளை வெட்டிச் சாய்த்ததை இங்கு ஒப்பு நோக்குக.

ஆரியக் கதை:

1. இரிக்கு வேதத்தின் பத்தாவது சூக்தம், புருஷா என்ற கடவுளால் இவ்வுலகம் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுகிறது.
2. மனு நூல் மற்றொரு கதையைக் கூறுகிறது. மனு நடத்திய வேள்வியில் பெண் ஒருத்தி தோன்றினாள். அப்பெண்ணைப் புணர்ந்த மனு, உயிரினங்களையும் மாந்தனையும் தோற்றுவித்தான். முதல் மாந்தனும், மனு என்றே சொல்லப்பட்டான்.[77]

பொது நோக்கு:

எல்லாச் சமயங்களும் ஏறக்குறைய ஒரு கருவையே கதைகளாகக் கொண்டுள்ளன.

1. விவிலியம் ஒரு கடவுளையும்,
2. பிற கதைகள் பல கடவுளர் போராட்டத்துக்குப் பிறகு ஒரு கடவுளையும் சுட்டுகின்றன.

அறிவியல் நோக்கு:

சமயக் கதைகளோடு அறிவியல் செய்திகள் முரண்படவில்லை. யோம், யுகம், ஊழி, பல பில்லியன் ஆண்டுகள் என சொல்லப்பட்டன.

மக்கள் பெருக்கம்:

முதல் மாந்தனிலிருந்து வெள்ளக்காலம் வரை மக்கள் பல்கிப் பெருகினர்.

1. விவிலியம் 10 தலை முறைகளைக் கூறுகிறது. ஆதாம் - நோவா.
2. மெசபத்தோமிய - சுமேரியக் கதைகள், 10 மரபுவழி மன்னர்களைக் குறிப்பிடுகிறது.

வெள்ளக் கதை:

படைப்புக் கதைபோன்றே, வெள்ளக் கதையும் ஒன்று போலவே காணப்படுகின்றது.

1. விவிலியம் - நோவா மற்றும் நாகன்.
2. சுமேரியம் - சேய்சூத்திரன்.
3. மெசபத்தோமியம் - ஊட்நா
4. குர்ஆன் - நூஹ்
5. ஆரியம் - மனு.

பெயர்கள்தான் மாறுபடுகின்றன. நிகழ்வுகள் ஒன்றே.

ஏனோக்[78]:

1. விவிலியத்தின் ஏழாம் தலைமுறைத் தலைவன். சுமேரியக் கதையின் ஏழாம் மன்னன்.
2. வானியல் அறிஞனாக இரு கதைகளும் கூறுகின்றன. (365 ஆண்டுகள்).
3. கடவுளோடு இணைந்தவன்.

புதிய உலகம்:

1) படைக்கப்பட்ட காலம் தொட்டு வெள்ளக் காலம் வரையில் முதல் பகுதி.
2) வெள்ளக் காலத்துக்குப் பிறகு புதிய உலகம். II வது பகுதி.

வெள்ளம் எவ்வாறு தோன்றியது ?

1) கடவுளால் தோற்றுவிக்கப்பட்டது - சமயங்கள்.

2) இயற்கையின் மாறுபாடுகளால் தோன்றியது - அறிவியல்.

2. அறிவியல் பார்வை

வெள்ளம் தோன்றியதற்கான அறிவியல் கூறுகள்:

1. இவ்வுலகம் படைக்கப்பட்ட அல்லது உருவான காலத்திலிருந்து, பல்வேறு தாக்கங்களால் சிதைக்கப்பட்டது.

2. ஒழுங்கற்ற வடிவத்தில் வீசப்பட்ட கோள்கள், சூரியனின் ஈர்ப்பு விசையால் சுழலத் தொடங்கின. தொடர்ந்து சுழலத் தொடங்கியதால் கோள வடிவத்தைப் பெற்றன.

3. இயற்கையின் மாறுபாடுகளால் உலகம் தாக்கப்பட்டு வருவது தொடர் நிகழ்வாகும்.

4. நில அதிர்வுகள், எரிமலை வெடிப்புகள், ஆழிப் பேரலைகள் தோன்றுவதற்கு நிலத்தடித் தட்டுகளே காரணிகளாகும்.
   1. இவை நிலப்பகுதிகளைக் கடலாக மாற்றுகின்றன.
   2. நீர்ப் பகுதிகளை நிலமாக மாற்றுகின்றன.
   3. புதிய தீவுகளை உருவாக்குகின்றன அல்லது அழிக்கின்றன.
   4. மலைகளை எழச் செய்கின்றன, நகர்த்துகின்றன.
   5. நில அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன.
   6. ஆழிப் பேரலைகளை உருவாக்குகின்றன.
   7. எரிமலைக் குழம்புகளை வெளியேற்றுகின்றன.

குயவன் கைக் களிமண்ணைப் போல், இவ்வுலகம் இயற்கையால் துவட்டி எடுக்கப்படுகின்றது.

வெகனர் கொள்கை:

1920ஆம் ஆண்டில், இயற்கையின் சீற்றங்களுக்கும் பேரழிவுகளுக்கும் நிலத்தடித் தட்டுகளே காரணம் என, ஆல்பிரட் வெகனர் (Alfred Wegener) கூறினார். அவரது கொள்கை தொடக்கத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 1960களில் அக்கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.[79]

கண்டப் பெயர்ச்சி என்றால் என்ன ?

தற்போதுள்ள உலகின் நிலப்பகுதிகளும், கடற்பகுதிகளும் காலந்தோறும் மாறுபட்டு வந்துள்ளன. இன்று அறியப்படும்

பல நாடுகள் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே கண்டமாயிருந்தன. அதற்குப் பாஞ்சியா எனப் பெயர் சூட்டப்பட்டது. இக்கொள்கையை வெகனர் வெளியிட்ட போது, அதற்கு உலக அறிவியலாளர்களிடையே வரவேற்பு காணப்படவில்லை (1910). பிறகு ஒரு சிலர் ஏற்றுக் கொண்ட நிலையில், 1960 ஆண்டுகளில் வெகனருடைய கண்டப் பெயர்ச்சிக் கொள்கை அறிவியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்கண்டப் பெயர்ச்சிகளுக்கான காரணம், நிலத்தடித் தட்டு களின் அசைவுகளே என்று தற்போது ஏற்றுக் கொள்ளப்பட் டுள்ளது. இவ்வுலகை அச்சுறுத்தும் நில அதிர்வுகள், எரிமலை வெடிப்புகள், ஆழிப் பேரலை வெள்ளங்கள் ஆகியவை நிலத்தடித் தட்டுகளாலேயே நிகழ்வுறுகின்றன என்றும், அவைகள் அசைவுகளில் ஏற்படும் விளைவுகளே இயற்கையின் சீற்றங்களாக வெளிப்படுகின்றன என்றும் 1960 ஆண்டுகளில் அறிவியலாளர்களால் உறுதிசெய்யப்பட்டன.[80]

நிலத்தடித் தட்டுகள் (teehtonic plates) என்றால் என்ன ?

1. இவ்வுலகின் ஆழ்நிலப் பகுதியில் தென்வடலாக, நிலத்தின் கீழும், நீருக்கு அடியிலும், சிறியதும் நீளமானதுமான தட்டுகள் இயற்கையில் உருவாகி உள்ளன.

2. அவை நிலத்திற்கடியிலுள்ள தீக்குழம்புகளின் மேல் மிதந்து கொண்டிருக்கின்றன.

3. நிலத்தட்டுகள் 3-5 அயிரத் தொலைவு (கி.மீ) அகலமும் பல நூறு அயிரத் தொலைவான நீளமும் கொண்டவை. இவ்வாறான தட்டுகள் பெரியதும் சிறியதுமாக உள்ளன. அத்தட்டுகளின் அமைப்புகளை தற்கால அறிவியல் கண்டுபிடித்துள்ளது. அவை இடம் பெற்றுள்ள பகுதிகளும் வரைபடங்களாக விளக்கப்பட் டுள்ளன.

தட்டுகளின் வகைகள்:[81]

1. தரைப் பகுதிகளின் அடியில் காணப்படுபவை நிலத்தட்டுகள்,
2. கடலுக்கு அடியில் உள்ளவை நீர்த்தட்டுகள்.

அறியப்பட்டுள்ள தட்டுகள்[82]:

1. வட அமெரிக்காவின் அலாஸ்கா தொடங்கி, தென் அமெரிக் காவின் தென்முனை வரை நீண்டுள்ள நிலத்தட்டு.

2. வடமுனை தொடங்கி அட்லாண்டிக் கடல்வழியே தென்முனை வரை நீண்டுள்ள நீர்த்தட்டு.

3. பாரசீக வளைகுடாவில் தொடங்கி, இந்தியப் பேராழி வழியே சென்று தென்முனையைத் தொடும் நீர்த்தட்டு.

4. திபெத்தில் தொடங்கி பர்மா, சுமத்திரா, இந்தோனேசியா, போர்னியோ வரை நீண்டுள்ள நிலத்தட்டு.

5. சைபீரியாவின் கிழக்குப் பகுதியில் தொடங்கி சப்பான், பிலிப்பைன்ஸ், நியுகினித் தீவுகள், சாலமன் தீவுகளைத் தொட்டு, நியூசிலாந்தில் முடியும் நில, நீர்த்தட்டுகள். இது சப்பானுக்கு அருகில் மற்றொரு கிளையாகி, பிலிப்பைன்சுக்கு அருகே மீண்டும் இணைகிறது.

தட்டுகள் என்ன செய்கின்றன ?

1. ரயில் தண்டவாளம் போல் அவை இருப்பதில்லை.
2. சிறியதும் பெரியதுமான துண்டுகள் குறிப்பிட்ட திசைகளில் நீண்டுள்ளன.
3. அவை முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் அசைகின்றன.
4. நிலத்தட்டு அசைவதால் நில நடுக்கங்களும்.
5. நீர்த்தட்டு அசைவதால் சுனாமிகளும் ஏற்படுகின்றன.
7. ஒரே நேரத்தில் நிலத்தட்டும், நீர்த்தட்டும் அசைவதுண்டு. அக்காலங்களில் பேரழிவுகள் தோன்றுகின்றன.
8. இந்தத் தட்டுகள் உலகம் குளிர்ந்து தன்னிலைப்பட்ட நாளில் இருந்து அறியப்பட்டுள்ளன. தொடர்ந்து உலகம் உள்ள வரையிலும் இருக்கும்.
9. இந்தத் தட்டுகளே உலக வரைபடங்களை மாற்றி வந்துள்ளன.
10. எதிர்காலத்தில் இப்போதுள்ள வரைபடம் கூட மாற்றப்படலாம்.
11. ஆப்பிரிக்காவின் வடமேற்குப் பகுதி இந்தியப் பரப்பு அளவில், துண்டாக்கப்பட்டு, அரபிக்கடலில் ஆஸ்திரேலியா போல் ஒரு தீவாக்கப்படுவதற்கான சூழல்கள் உள்ளதாக அறிவியலார் கூறுகின்றனர்.
12. அப்போது இரு நாடுகளுக்கும் இடை ஒரு நீர்வழித் தோன்றி விடும்.

மோதலின் விளைவுகள் யாவை?

1. நிலத்தட்டு மற்றொரு நிலத்தட்டுடன் மோதும் போது ஏற்படும் விளைவுகள்.

2. நிலத்தட்டுகள் ஒன்றோடொன்று மோதாமல் உரசிக் கொள்ளுதல்.

3. நிலத்தட்டுகள் நகர்வின்போது ஒன்றின் மேல் ஒன்று ஏறிக் கொள்ளுதல்.

இதன் விளைவுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

4. நீர்த்தட்டுகள் மோதிக் கொள்வதால், ஏற்படும் விளைவுகள்.
5. நீர்த்தட்டும் நிலத்தட்டும் மோதிக் கொள்வதால் ஏற்படும் விளைவுகள் ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டுகள்[83]:

1. அட்லாண்டிக் நீர்த்தட்டுகள் மோதிக் கொண்டதால், ஐஸ்லாந்தில் தோன்றியுள்ள நீளமான மேடு.
(The mid Atlantic - Ridge rises above sea level in Iceland producing geysers and volcanoes.)

2. பசிபிக் கடலின் கடற்கரையிலுள்ள பைனாதுபோ எரிமலை வெடிப்பு.
(Mount Pinatubo is an active volcano lying on the Pacific region.)

3. நீர்தட்டும் நிலத்தட்டும் மோதிக் கொண்டதால் ஏற்பட்டுள்ள அந்தியன் மலைத் தொடர் (கலிபோர்னியா).
(The Andean mountain chain is the typical result of the oceanic plate driven undernearth with the continental plate).

4. இதே பகுதியில் இரு தட்டுக்களும் உரசிக் கொண்டதால் ஏற்பட்ட நீளமான மேட்டுத் தொடர்.
(The deep fracture caused by the sliding plates of the San Andeas Fault can be clearly seen in p arts of California).

5. இரண்டு நிலத்தட்டுகள் மோதிக் கொண்டதால் தோன்றும் நீளமான மலைத்தொடர்கள் (தென் அமெரிக்க மலைத் தொடர்).
(When two continental plates collide, great mountain chains are thrust up ward as the crust buckles and folds under the force of the impact.)

6. கடலுக்கடியில் தோன்றும் மலைகள் (Geniss metaphoric rocks) நார்வே, உப்புப் படிமக் குன்றுகள் (வடக்கு அயர்லாந்து), பவழப் பாறைகள் (ஆஸ்திரேலியா), கிரானைட் மலைகள் (நமீபியா), கனிமப் பாறைகள் (schist metophoric rock - சூடான், எத்தியோப்பியா), எரிமலைக் குழம்புப் பாறைகள் (அவாய்த் தீவுகள்), மணற் பாறைகள் (உடா மாநிலம், வட அமெரிக்கா) போன்ற பல்வேறுபட்ட பாறைகள், தட்டுப் பெயர்ச்சிகளால் உருவானவைகளே.

சீனாவிலுள்ள உப்பு மலைகள் (land stone hills, Guilin, China) வியப்புக்குரியவைகளாகும்.

நீர் – நிலப் பகுதிகளை வடிவமைப்பவை யாவை? (shapaig the landscape)

1. நீர் - நிலப்பகுதிகளை உருவாக்குபவை நிலத்தட்டுகளாகும்.
2. அதனை வடிவமைப்பவை : காற்று, மழை, ஆறுகள், ஆற்றுக்கழிமுகங்கள், நிலச்சரிவுகள் என விரியும்.

   : நிலநடுக்கங்களும், எரிமலை வெடிப்புகளும் கடல் பகுதிகளை உருவாக்குகின்றன.

3. புவியியல் பார்வை

3) இவ்வுலகம் தோன்றி 300 கோடி ஆண்டுகளாகின்றன என்பது புவியியலாரின் கருதுகோளாகும். உலகப் புவியியல் வரலாற்றை 9 பகுதிகளாகப் பிரித்துள்ளனர்.[84]

1. கம்பேரியன் காலம் (cambarian p eriod) - 570 - 510 மில்லியன் ஆண்டுகள்.
2. தேவோனியன் காலம் (Devonian) - 408 - 362 மில்லியன் ஆண்டுகள்.
3. கார்பனி பெரஸ் காலம் (Carboniferious) - 362 - 290 மில். ஆண்டுகள்.
4. திரியாசிக் காலம் (Triassic) - 245 - 208 மில். ஆண்டுகள்.
5. ஜுராசிக் காலம் (Jurasic) - 208 - 145 மில். ஆண்டுகள்.
6. கிரீட்தேசியஸ் காலம் (Cretaceious) - 145 - 65 மில். ஆண்டுகள்.
7. தெர்த்தியரி காலம் (Tertiary) 65 - 2 மில். ஆண்டுகள்.

8. பிளியஸ்டோ சீனிக்காலம் (Pliestocene) 2 - 1 மில். ஆண்டுகள்.

9. ஆலோசீனிக் காலம் (Holocene) - 50000 - 10000 ஆண்டுகள்.

மேற்கண்ட கால அளவுள், நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற் காகக் கூறப்பட்ட ஆண்டுகளாகும். இவைகளில், 2 மில்லியன் ஆண்டுகளுக்குப்பின் அறியப்படும் செய்திகள் அறிவியல் கண் கொண்டு, சான்றுகளுடன் அறியப்பட்டவைகளாகும்.

பிளியஸ்டோசீனிக் காலம்: (2 மில்லியன் ஆண்டுகள்)

1. இக்கால அளவுகளில் உலகின் தண்மை - வெப்பக் கூறுகள் பெரும் மாறுதல்களுக்குள்ளாயின. இக்கால அளவில் நான்கு முறை உலகைப் பனிபடர்ந்து மூடியதாகக் கூறுவர். தற்போ துள்ள உலகின் பெரும் ஏரிகள், பள்ளத்தாக்குகள், கடற்கரைகள் ஆகியவை இக்காலத்தில் உருப்பெற்றவைகளே. ஈராக்கின் வடக்கிலுள்ள காஸ்பியன் கடல், வண் ஏரி, ஆப்பிரிக்காவின் விக்டோரியா, தாங்கனிக்கா போன்ற பெரும் நீர்நிலைகள் இக் காலத்தில் தோன்றியவைகளே.

2. மாந்தனின் முன்னோர் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கிய காலமும் அதுவே. சூழ்நிலைக்கேற்ற வாழ்க்கை முறையை மாந் தன் தேர்வு செய்தான்.

3. கடந்த ஐம்பது ஆண்டுகளில், ஆழ்கடலின் தரைப்பகுதிகள் துளையிடப்பட்டு, பாறைகள் ஆய்வு செய்யப்பட்டன. அவை இவ்வுலகின் புவியியல் கமுக்கங்களை (Secretes) வெளிப்படுத்தி யுள்ளன.

4. பல்வேறு கால அளவுகளில் உலகைப் பனிமூடிய செய்திகள் இந்த ஆய்வுகள் வழியே வெளிப்பட்டுள்ளன. 2.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உலகைப் பனிமூடிய செய்தி அறியப்பட் டுள்ளது.

5. கைக் கோடரியை மாந்தன் இக்காலத்தில் தான் பயன்படுத்தி னான்.

6. உலகின் பெரும் ஏரிகள், உண்மையில் நிலநடுக்கத்தால் உருவான பள்ளங்களே. அவைகளுக்கு வடிகால்கள் இல்லாமலிருந்தது. இதனால் ஆறுகள் அறியப்படவில்லை. அவற்றிற்கானத் தடங் களும் இல்லை.

7. பெரிய பாலைவனங்களும் இக்காலத்தில் தோன்றியவைகளே.

8. இக்காலத்தில் புவியியல் தொடர்பான பாறைகள், மலைகள், ஆழ்கடல் பாறைகள் கார்பன் - 14 என்ற ஆய்வுக்குட்படுத்தப் பட்டன.

9. கி.மு. 25000 ஆண்டு, உலகில் பெரிய மாற்றங்கள் நிகழ்வுற்ற காலமாகக் கருதப்படுகின்றது.

10. கி.மு. 25000 - 18000, பனி உருகல் காலமாகக் கருதப்படுகின்றது. அண்மையில் நிகழ்வுற்ற பனி உருகல் காலமும் இதுவே.

11. இப்பனி உருகல் காலத்தில் கடலின் நீர்ப்பரப்பு 300 அடிகள் வரை உயர்ந்தன. வறண்டு போயிருந்த உலகின் பெரிய ஏரிகள் நீர்ப்பிடிப்பால் நிறைந்த தோடு, அவை வழிந்தோடி, புதிய ஆறுகளைத் தோன்றிவித்தன. நைல், அசோகன் போன்ற ஆறுகள் இக்காலத்தில் தோன்றியவைகளே.

12. கி.மு. 22000 - 18000 ஆண்டுகளில் வடஅமெரிக்கா, ஸ்காண்டி நேவியத் தீவக் குறையில், மிக அதிக அளவில் பனிப்பாறைகள் படர்ந்திருந்தன.

13. இப்பனிப்பாறைகள் கடகக் கோடு வரை நீண்டு, 10 முதல் 15 அடிகள் வரையில் பனிப்பாறைகளாக உறைந்திருந்தன.

14. கி.மு. 18000 ஆண்டுகளில் ஓசோன் என்ற வளி மண்டலத்தில் மிகப்பெரிய ஓட்டை விழுந்தது. மிகு வெப்பமும் கடுங்குளிரும் வளி மண்டலத்தில் மாற்றங்களைத் தோற்றுவிக்கும். (தற்போதும் மிகு வெப்பமாக உள்ளதால், ஊடகங்களில் வெப்ப மயமா தலைத் தடுப்பது பற்றிய செய்திகள் வந்த வண்ணமுள்ளன).

15. அதன் விளைவாக, கி.மு. 18000 ஆயிரம் ஆண்டுகளில் தென் வடமுனைகளில் உறைந்திருந்த பனி உருகத் தொடங்கியது.

16. கி.மு. 18000 - 11500 ஆண்டுகள் வரையிலும் இப்பனி உருகல் காலம் நீடித்தது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

17. பனி உருகியதால் கடல் நீரின் அளவு 300 முதல் 500 அடிகள் வரை உயர்ந்தன.
    1. பல நிலப்பகுதிகள் கடலில் மூழ்கின.
    2. பல தீவுகள் உருவாயின.
    3. அதுவரையிலும் ஒன்றாக இருந்த நாடுகள் பிரிக்கப் பட்டன.
    4. புதிய வளைகுடாக்களும், நீர்வழிகளும் தோன்றின.

5. பல நாடுகள் கடலுள் மூழ்கின.

18. கி.மு.11000 ஆண்டுகளில் உலகம் தன்னிலை பெற்றது.

1. புதிய நாடுகள் பல உருவாகி இருந்தன.
2. நிலப்பகுதியில் இருந்த பெரிய ஏரிகள் நிரம்பி வழிந்தன.
3. புதிய ஆறுகள் தோன்றின.
4. வேளாண் தொழில் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டன.
5. உலகில் புதிய குடியேற்றங்கள் தோன்றின.
6. மக்கள் நாடுவிட்டு நாடுபெயர்ந்தனர்.
7. புதிய உலகம் தோன்றியது.
8. தற்போது அறியப்படும் உலகின் வரைபடம் உருவாயிற்று.
9. அரபிக்கடல், பசிபிக், அட்லாண்டிக் பகுதிகளில் பல தீவுகள் உருவாயின.
10. நடுத்தரைக் கடல் சுருங்கியது.

19. அண்டார்க்டிக் என்ற தென்முனையில் நிலப்பகுதிகள் விரிந்தன.

20. வட ஆஸ்திரேலியா, நியுகினித்தீவுகளில் பனிப்படலம் மறைந்து போனது.

21. குமரிக்கண்டம் முற்றிலும் அழிந்தது. அதன் எச்சங்களாக இந்தியா, இலங்கை, மடகாஸ்கர், செஷல்ஸ் தீவுகள், இலக்கத் தீவுகள், மாலத்தீவுகள், அந்தமான் நிக்கோபார்த் தீவுகள், சுமத்திரா, இந்தோனேசியா, போர்னியோ ஆகிய புதிய நாடுகள் தோன்றின.

4. மாந்த இனத் தோற்றம்

லெமூர் (Lemur)[66]:

70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த, காட்டு விலங்கினம் ஒன்று, மரங்களைக் குடியிருப்பாகக் கொண்டிருந்தது. அவ்விலங்கின் வளர்ந்த நிலையாக லெமூர் என்ற குரக்கினம் சொல்லப்படுகின்றது. இந்த விலங்கு மேற்கில் தென் ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் பகுதிகளிலும், கிழக்கில் பிலிப் பைன்ஸ் இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் அறியப்பட்டது. உலகின் மற்ற பகுதிகளில் இக்குரக்கினம் அறியப்படவில்லை. மற்றவர்களின் கண்களில் படாமல் இலை மறைவில் வாழ்ந்

திருந்த இக்குரக்கினம் அறியப்பட்டிருந்த பகுதிகள், லெமூரியா என அழைக்கப்பட்டது. ஆப்பிரிக்கா முதல் பிலிப்பைன்ஸ் வரையிலான பகுதிகளை உள்ளடக்கியதே லெமூரியா ஆகும்.

சிமியன்[87]:

இவை 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு புதிய தோற்றத்தைப் பெற்றன. அவை சிமியன் (Simians) என்று அழைக்கப்படுகின்றன. தொடர்ந்த வளர்ச்சியில் அவை இரு கிளைகளாக தங்களை உருமாற்றிக் கொண்டன. (catarrhines and p latyrrhynes). இவை மேலும் வளர்ச்சி பெற்று அடுத்த 20 மில்லியன் ஆண்டுகளில் பல்வேறு இனங்களாக மாறின. (Parapithecus, Apidium, Oligopithecus, Aelopethecus, Aeygypithecus). பிசுகுஸ் (Pithecus) என்பது பொதுப்பெயர். அவை வாழ்ந்திருந்ததாகக் கருதப்பட்ட பகுதிகளை முன்னொட்டாகக் கொண்டு அழைக்கப்பட்டன.[88] இவைகளில் முதல் இரண்டு விலங்கினங்களும் 36 பற்களைக் கொண்டிருந்தன; மற்றவை 32 பற்களைக் கொண்டிருந்தன. Catarrhines இனத்தைச் சார்ந்த இந்த விலங்குகளே மாந்தனின் முன் இனமாகும். இவைகளுடைய கற்பதிவுகள், கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் தீவுகளில் அறியப்பட்டுள்ளன.[89]

ஆஸ்ட்ரிரோ பிதருஸ் (Austropithecus)[90]:

2 முதல் 2.5. மில்லியன் ஆண்டுகளில் இவ்வினம் (18,00,000 ஆண்டுகள்) எத்தியோப்பியா, தென் ஆப்பிரிக்கா, தான்சானியா ஆகிய பகுதிகளிலும், ஆஸ்திரேலியாவின் வட பகுதிகளிலும் அறியப்பட்டிருந்தன. இவை மூன்றடி உயரமும் 65 கிலோ வரையிலான எடையையும் கொண்டிருந்தவை. இவற்றின் மூளை வளர்ச்சி 530 (530 cm^3) என்ற அளவில் இருந்தது.

1.5 மில்லின் ஆண்டுகளில் தான்சானியாவில் அறியப்பட்ட முதுகு நிமிர்ந்த (homoerrectus) குரக்கினம், தான்சானியாவில் கற்பதிவுகளாக அறியப்பட்டுள்ளன. இவை 1000 சி.எம். மூளை வளர்ச்சியைப் பெற்றிருந்தன. குகைகளில் கூட்டமாக வாழவும், கூரிய பற்களால் வேட்டையாடவும் இவ்வினம் அறிந்திருந்தது.

இவ்வினமே மாந்த வினத்தின் முன் விலங்கினம் எனப்படுகின்றது.

சிம்பன்சி (Chimpanzees)[91]:

அடுத்த கட்ட வளர்ச்சியில் சிம்பன்சி குரங்கினம் தோன்றியது. இது மாந்தனின் தோற்றத்துக்கு முந்திய நிலையாகும். பல்வேறு கூறுகளில் மாந்தனின் உடலமைப்பை இவை கொண்டிருந்தன.

ஓமோ சேப்பியன் (Homo Sapians)[92]:

இவ்வினம் அடுத்த நிலையில் வளர்ந்தது. இதனுடைய மூளைத்திறன் 1400 சி.எம். ஆகும். இவ்வினமே நிமிர்ந்த மாந்தன் தோன்றுவதற்கு முன்பிருந்த நிலையாகும்.

மாந்தன் (Man)[93]:

நிமிர்ந்த முதுகைக் கொண்ட மாந்தன் (homo errectus) 1½ இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு அறியப்படுகிறான். இம்மாந்தனின் மண்டையோடுகள் (Skulls), தான் சானியாவிலும், சாவாத்தீவுகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பொதுக்கருத்து:

உயிரினங்கள், விலங்குகள், மரம் செடி கொடிகள் ஆகிய இயற்கையின் படைப்புகள் ஆப்பிரிக்கா முதல் பிலிப்பைன்ஸ் வரையிலுள்ள நாடுகளில் ஒன்றுபோலவே காணப்படுகின்றன. தென் ஆப்பிரிக்காவின் புவியியல் அமைப்பு முற்றிலும் தென்னிந்திய புவியியல் அமைப்போடு தொடர்புடையதாக உள்ளது. நிலத்துக்கு அடியில் காணப்படும் கனிமங்கள் (பிளாட்டினம் உள்ளிட்ட) இவ்விரு பகுதிகளிலும் அறியப்படுகின்றது. எனவே ஆப்பிரிக்கா முதல் பிலிப்பைன்ஸ் வரையில் உள்ள நிலப்பகுதிகள் அனைத்தும் 20 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலப்பகுதியாக இருந்தன. அதனைக் கோண்டுவானா என்று புவியியலார் கூறுகின்றனர்.

கோண்டுவானா (Gondwana)[94]:

நிலநடுக் கோட்டுக்குத் தெற்கே அறியப்பட்ட பரந்த நிலப் பரப்பைக் கொண்டிருந்த நிலப்பகுதி. உலகின் வடபகுதி இலாரேசியா கோண்டுவானா போல் பெருநிலப்பரப்பாக இருந்ததில்லை.

1. 650 மில்லியன் ஆண்டுகளிலிருந்து 2 மில்லியன் ஆண்டுகள் வரை கோண்டுவானாவின் நிலப்பரப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

2. தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்கள் ஒன்றாக இருந்த நிலப்பரப்பே கோண்டுவானா ஆகும்.

3. கோண்டுவானா மேற்கே அட்லாண்டிக், இடையே இந்தியப் பெருங்கடல், கிழக்கே சைபீரியா தொடங்கி ஆஸ்திரேலியா வரையிலான கடல் - நிலத்தட்டுகள் அமைந்திருந்த பகுதியாகும்.

4. இம்மூன்று தட்டுகளின் நகர்வுகளால் கோண்டுவானா பல்வேறு கால அளவுகளில் சிதைக்கப்பட்டது.

5. குமரிக் கண்டத்தின் மறுபெயரே கோண்டுவானா என்பதாகும்.

6. 2 மில்லியன் ஆண்டுகளில், கோண்டுவானா பல்வேறு பகுதிகளாகச் சிதறிப் போயிற்று.

7. இந்தியப் பேராழி இருக்குமிடத்தில் குமரிக்கண்டம் நிலை கொண்டிருந்தது.

8. 2 மில்லியன் ஆண்டுகளாக உலகின் தென்பகுதியில் அமைந்திருந்த பழைய கோண்டுவானாவின் பகுதிகள் மாறுதல்களுக்குள்ளாகி வந்துள்ளன.

9. கோண்டுவானாக் கண்டமே உயிரினத்தின் தோற்ற வளர்ச்சிப் பகுதியாகும். இயற்கையில் அமைந்திருந்த தண்மை - வெப்பச் சூழல்கள் அவ்வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின.

10. இலாரேசியாவில் அவ்வாறான சூழல்கள் இல்லை.

11. கி.மு. 25000 - 18000 ஆண்டுகளில் குமரிக்கண்டத்தின் பரப்பளவு மிகவும் சுருங்கியே இருந்தது. ஆப்பிரிக்கா - ஆஸ்திரேலியா ஆகியவை பிரிந்திருந்தன.

12. தென் இந்தியாவுக்குத் தெற்கே 1000 அயிரத் தொலைவு வரை பரந்திருந்தது என்பர்.

13. குமரிக்கண்டம் பனி உருகல் காலத்தில் முற்றிலும் மறைந்து போயிற்று.

14. வெள்ளம் மட்டும் குமரிக்கண்டத்தை அழிக்கவில்லை. அதன் ஊடே தென்வடலாகச் சென்ற நீர்த்தட்டின் அசைவும் ஒரு காரணமாகும்.

15. கி.மு. 12000 ஆண்டுகளுக்குப் பிறகு இந்நீர்த்தட்டு அழிவுகளை ஏற்படுத்தவில்லை.

16. சைபீரியத்தட்டு இப்போதும் அசைந்து கொண்டிருக்கிறது.

17. 2004 சுனாமிக்கு இத்தட்டின் அசைவே காரணமாகும்.

18. இந்தோனேசியா இத்தட்டின் மையப் பகுதியில் உள்ளதால், தொடர்ந்து அங்கே நில நடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன.

19. சவூதி அரேபியா தொடங்கி தென்முனை வரையிலான ஒரு மலைத்தொடர், அரபிக்கடல், இந்தியப் பேராழியைத் தொட்டு கோண்டுவானாவில் நிலை கொண்டிருந்தது. அம்மலைத் தொடர் கடலுக்குள் அமிழ்ந்தது. அம்மலைத் தொடரின் தடயங்கள், நாசா வெளியிட்டுள்ள புகைப்படங்களில் தெளிவாகத் தெரிகின்றன.

20. பர்மாவிலிருந்து அந்தமான் தீவுகளைத் தொட்டு ஆஸ்திரேலியா வரை மற்றொரு மலைத் தொடரும் காணப்படுகிறது. அவை கோண்டுவானா நிலக்கண்டத்திலிருந்து பிறகு குமரிக்கண்டத்தில் அறியப்பட்டிருந்தன. குமரிக்கண்ட அழிவுக்கு இம்மலைத் தொடரின் அடியில் இருக்கும் நிலத்தட்டும் ஒரு காரணமாகும். அம்மலைத் தொடரின் எச்சங்களே இன்றைய அந்தமான் நிக்கோபார் தீவுகளாகும்.

21. குமரிக்கண்ட அழிவிற்கு முன்பே, ஆப்பிரிக்கா பிரிந்து போயிற்று. குமரிக்கண்ட அழிவின்போது உயர்ந்து காணப்பட்ட மலைப் பகுதிகளே இன்றைய அரபிக்கடல், இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவுகளாகும்.

22. மடகாஸ்கர் குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. (குமரிக் கண்டத்தை அழிவுறச் செய்த தட்டு, எதிர்காலத்தில் வடகிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியைத் துண்டித்துவிடும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அரபிக்கடலில் ஒரு பெரிய நாடு எதிர்காலத்தில் உருவாகும் என்று கருதப்படுகின்றது.)

23. கோண்டுவானா கண்டம் சுருங்கி இலெமூரியா எனப்பட்டது. கடந்த 2 மில்லியன் ஆண்டுகளில் இலெமூரியாவும் சுருங்கி, இந்தியா என்ற பெருநிலப் பரப்பையும், பல தீவுகளையும் கொண்டிருந்தது. பனி உருகல் காலத்துக்குப்பிறகு இன்றைய நிலப்பரப்பு உருவாயிற்று. இந்தியா, கோண்டுவானாவின் இன்றைய பகுதியே எனலாம்.[95]

5. குமரிக்கண்டம்

குமரிக்கண்டம் அல்லது குமரிக்கோடு என்றழைக்கப் பட்ட நிலப்பரப்பு, இரண்டு இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பே கோண்டுவானாவிலிருந்து பிரிந்தது எனலாம். கோண்டுவானா

என்ற கண்டம் அழிந்து போய்விட்டது என்பதைவிட, பல பகுதிகளாகப் பிரிந்து போய்விட்டது என்பதே சரியான சிந்தனையாகும்.[96]

கோடு என்ற தமிழ்ச்சொல், கோண்டுவானா என்ற சொல்லோடு தொடர்புடையது.

குமரிக்கண்டம்[97]:

1. அட்லாண்டிக் முதல் ஆஸ்திரேலியா வரையிலான பகுதிகளைக் கொண்டிருந்த பெரு நிலப்பரப்பை இலெமூரியா என அழைக்கின்றனர் (மதாம் பிளாவட்ஸ்க்கி)

2. இது கோண்டுவானா என்ற நிலப்பரப்பைக் குறிப்பதே. உண்மையில் குமரிக்கண்டம் என்பது கோண்டுவானா நிலப் பரப்பையே குறிப்பதாகும்.

3. கோண்டுவானா பல மில்லியன் ஆண்டுகளில் (650 - 2 மில்லியன் ஆண்டுகள்) தனது பரப்பளவை மாற்றிக் கொண்டு வந்துள்ளது.

4. கோண்டுவானாவின் மையப் பகுதியே குமரிக்கண்டமாகும்.

5. குமரிக்கண்டத்தின் நிலைப்பாட்டை இன்றுள்ள புவியியலாளர் கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

6. குமரிக்கண்டப் பரப்பளவு இரண்டு இலக்கம் ஆண்டுகளி லிருந்து படிப்படியாகக் குறைந்து, பனி உருகல் காலத்தில் முற்றிலும் மறைந்து போனது. ஒரே நாளில் குமரிக்கண்டம் அழிந்தது என்பது சரியான கண்ணோட்டமாகாது.

7. அடுத்தடுத்த நிலநடுக்கங்கள், ஆழிப்பேரலைகள் அவ்வப்போது குறிப்பிட்ட பகுதி மக்கள் இறந்துபட கரணியங்களாக இருந் துள்ளன.

8. தமிழரின் மேலை நாட்டுக் குடியேற்றங்கள், பல காலங்களில் அறியப்படுவதால் குமரிக்கண்டம் ஆறாயிரம் ஆண்டுக்கால அளவில் (18000 - 12000) விரைவாகவும், அதற்கு முன்பு சீராகவும் அழிந்துபட்டது.

9. தென்னாப்பிரிக்காவிலுள்ள அனைத்து உயிரின, விலங்கின, கனிம வளங்கள் அனைத்தும் இன்றைய தமிழகத்தில் காணப்படு கின்றன. உலகிலேயே பிளாட்டினம் பெருமளவில் கிடைக்கும் தென்னாப்பிரிக்காவைப் போன்றதொரு பிளாட்டினப் பதிவுகள் அண்மையில் நாமக்கல் மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளன. சேலம் இரும்புத் துகள்களின் அதே தன்மைகள் தென்னாப்பிரிக்

காவிலும் காணப்படுகின்றன. தென்னாப்பிரிக்க மொழி தமிழோடு தொடர்புடையதென்பதை அண்மையில் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

10. நிமிர்ந்த மாந்தனின் (Homo Sapiens) மண்டையோடுகள் தான் சானியாவிலும் இந்தோனேசியாவிலும் கிடைத்துள்ளன. இப்பகுதிகள் முறையே குமரிக்கண்டத்தின் மேற்குக் கிழக்கு எல்லைகளாகும்.

11. இடைப்பட்ட நிலப்பகுதியான தமிழகத்திலும், இந்தியப் பெருங்கடல் பகுதியிலும் முறையான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

12. ஆதித்த நல்லூரில் காணப்படும் முதுமக்கள் தாழிகளின் காலம் தமிழகத் தொல்லியல் துறையைச் சார்ந்தவர்களால் பின்னோக்கிக் கூறப்பட்டுள்ளது. கி.மு. 2000 ஆண்டுக்கணக்கென்பது தவறான கருதுகோளாகும். தமிழகத் தொல்லியல்துறை இதுவரையிலும் உருப்படியான ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. (எ.கா. தமிழ் மொழியின் எழுத்து வடிவங்கள் கி.மு. 300 ஆண்டுகளுக்குப் பிற்பட்டவையே என தமிழகத் தொல்லியல்துறை கூறிவருவது எவ்வளவு அப்பட்டமான பொய்ச்செய்தி என அறியலாம்)

13. அண்மையில் பூம்புகாருக்குக் கிழக்கே மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் அகழ்வாய்வு, கடலுக்கடியில் பழைய நகரம் ஒன்றைக் கண்டுபிடித்தது. இங்கிலாந்து நாட்டு ஆய்வாளர்கள், அந்நகரின் காலம் கி.மு. 11000 ஆண்டுகள் எனக் கூறுகின்றனர். தமிழகத் தொல்லியல் துறையினர் அக்கூற்றை மறுத்து வருகின்றனர். இங்கிலாந்துக் குழுவினர் கூறுவது உண்மையாயின், அந்நகரம் குமரிக்கண்டத்து நகரமே எனலாம்.

14. குசராத் தொடங்கி, கல்கத்தா வரையிலான கடற்கரைப் பகுதிகளுக்கு 200 அயிரத் தொலைவில், பல நகரங்கள் கடலுக்குள் மூழ்கியிருப்பதாக ஆழ்கடல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (ஆய்வாளர் ஒரிசா பாலசுப்பிரமணியன்). இவை குமரிக்கண்டத்தின் நகரங்களா என்பதை அறிய இதுவரை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

15. கடற்கரைகளுக்கு மேலும் உள்ளே (200 அயிரத் தொலைவுக்கு மேல்) இன்னும் முறையான கடல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

16. பாரசீகம் முதல் தென்முனை வரை நீண்டிருக்கும் நீர்த்தட்டு பற்றிய ஆய்வுகளில் இந்திய அறிவியலாளர்கள் இதுவரை

கவனம் செலுத்தி, அத்தட்டு அசைந்ததால் ஏற்பட்ட விளைவு களைப் பற்றி அறிய முற்படவில்லை.

17. அரபிக் கடலில் தென்வடலாக கடலுக்குள் அமிழ்ந்திருக்கும் மலைத்தொடர், தமிழர்களின் நம்பிக்கையான மேரு மலை யாகவும் இருக்கலாம்.

18. ஆப்பிரிக்க நாடான காங்கோவில், மேரு (Mount Meru) என்ற பெயரால் ஒரு பெரு மலைத்தொடர் தற்போதும் அழைக்கப்படு கிறது. இது குடியேற்றத் தமிழர்கள் சூட்டிய பெயராக இருந் திருக்கலாம்.

19. இதுவரையிலும் புவியியலார் அளித்துள்ள சான்றுகளும் செய்தி களும், குமரிக் கண்ட நிலைப்பாட்டை உறுதி செய்கின்றன. அவைகளைத் தொடர்ந்து, ஆய்வுகள் மேற்கொள்ள எவரும் முன்வரவில்லை.

20. மேலை, கீழை நாட்டுக் குடியேற்றங்கள்:

1. ஆப்பிரிக்க மக்களின் மொழிகளின் மூலம் தமிழ்மொழியே என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
(Mille Homburger went even further when she started out from the premise that all African languages were derived from Ancient Egyptian and even further back in the past, from the Dravidian languages of India - African History, P. 115)

2. எகிப்திய, மெசபத்தோமிய, பாலத்தீன, சுமேரிய நாகரிகங்கள் தமிழருடையதே (ம.சோ.விக்டர், பல்வேறு ஆய்வு நூல்கள்).

3. ஆஸ்திரேலியப் பழங்குடியினர் தமிழ் மரபினரே (பல்வேறு ஆய்வுகள்).

4. சப்பானிய, கொரிய மொழிகளின் முதன் மொழி தமிழே (அண்மையில் வெளியான ஆய்வுகள்).

5. இந்தோனேசிய, மலாய், தாய்லாந்து மொழிகளும் தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே.

6. செமிட்டிக் - இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பங்களின் முன்மொழியும் தமிழே (ஆசிரியரின் ஆய்வுகள்).

21. குமரிக் கண்டத்தின் ஒரு பகுதி தட்டு அசைவுகளால், இமய மலை நோக்கித் தள்ளப்பட்டு, அது வடக்கு நோக்கிச் சென்ற வரைபடம் புவியியல் ஆய்வாளர்களால் அண்மையில் வெளி யிடப்பட்டுள்ளது.

22. நடுத்தரைக் கடலிலிருந்து கொரியா வரையிலான நிலநீர்ப் பகுதிகளை, ஒரு நீண்ட கடல்வழி பிரித்திருந்ததை புவியியலார் உறுதிப்படுத்தியுள்ளனர். குமரிக்கண்ட அழிவுத் தொடங்கிய போது, அந்நீர்ப்பகுதி மறைந்து ஆசியா என்ற கண்டம் உருவானதாகவும் கூறுகின்றனர்.

23. இந்தியப் பெருங்கடலில் தெற்கே அமைந்துள்ள தீகோ கார்சிகா என்ற தீவு (தற்போது அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ளது) லெமூரியாவின் தெற்கு எல்லையாக இருந்திருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் கருத்து.

24. சகாரா பாலைவனம், நடுத்தரைக் கடல்பகுதியில் இருந்த மணல் பெயர்க்கப்பட்டு, அப்பகுதி நீரால் சூழ்ந்தபோது, வடக்கே தள்ளப்பட்ட மணலால் உருவானதே என்பர்.

25. ஆப்பிரிக்க மலைத் தொடர், தட்டுகளின் அசைவினால் வடக்கு நோக்கித் தள்ளப்பட்டதால் தோன்றியதே ஆல்ப்ஸ் மலைத் தொடர் என்பது புவியியலாரின் கருத்து. இது அட்லாண்டிக், அரபிக்கடல் பகுதிகளில் அறியப்படும் இரு தட்டுகளின் பெயர்ச்சியால் ஏற்பட்டதின் விளைவே என்பர்.

26. குமரிக்கண்ட அழிவு உலகில் பல்வேறு நில நீர்ப் பகுதிகளிலும் பெரிய மாற்றங்களை உருவாக்கிய காலத்தின் நிகழ்வே எனலாம்.

27. கோண்டுவானா கண்டத்தின் கடந்த கால வரலாறே குமரிக் கண்டத்தின் வரலாறும் ஆகும்.

மொழியியல் – இலக்கியப் பார்வை

1. கடந்த 150 ஆண்டுகளில் குமரிக்கண்டம் பற்றிப் பல்வேறு (இந்திய மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள்) அறிஞர்கள் கருத்துரைத்துள்ளனர்.

2. மாந்தவினத்தின் தோற்றம் குமரிக்கண்டத்திலேயே நிகழ்வுற்றது என்பர்.

3. முதல் மாந்தன் தோன்றிய நாடே முதல் மொழி தோன்றிய நாடென்பதால், தமிழே உலகின் முதன்மொழி என்ற கருத்து ஏற்கப்பட்டுள்ளது.

4. குமரிக்கண்டத்து மக்கள் வாழ்க்கை முறையை அறிந்துகொள்ள தமிழில் எழுதப்பட்ட நூல்கள் அழிந்து போயின. ஆயினும் மேற்கித்திய பாபிலோனிய, சுமேரிய, கனானிய, எகிப்திய இலக்கியங்கள் குமரிக்கண்ட நிகழ்வுகளைச் சுட்டுகின்றன.

5. ஈனும் மா எலிஸ் (மெசபத்தோமிய இலக்கியம்), சுருப்பாக்க வரலாறு (சுமேரிய இலக்கியம்) ஆகியவை குமரிக்கண்ட மக்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

6. யூத சமய இலக்கியமான தோரா (விவிலியம்) வின் படைப் பதிகாரத்தின் முதல் 11 பிரிவுகள், குமரிக்கண்ட மக்கள் பற்றிய செய்திகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.

7. வெள்ளச் செய்திகளைக் கூறும் உலகின் பல்வேறு சமய நூல்களும், குமரிக்கண்டச் செய்திகளை விளக்குகின்றன.

8. நடுத்தரைக் கடலையொட்டிய நாடுகளின் பண்டைக்காலத்து மொழிகள், தமிழாகவோ அல்லது தமிழினின்றும் திரிபுபட் டவைகளாகவோ அறியப்படுகின்றன.

9. அந்நாடுகளில் முன் சொல்லப்பட்ட ஊர்கள், மலைகள், சம வெளிகள், ஆறுகள், ஏரிகள், நகரங்கள், கடல்கள் ஆகியவை களின் பெயர்கள், குடியேற்றத் தமிழர்களால் சூட்டப்பட்ட தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.

10. அப்பகுதி மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள், வழக்குகள், வழக்காறுகள் அனைத்தும் தமிழருடையவையே.

11. மேற்கித்திய இலக்கியங்கள் தமிழ்ச் சூழல்களிலேயே தொகுக் கப்பட்டுள்ளன.

12. தமிழ் இலக்கியங்களும் குமரிக் கண்டத்தைப் பற்றிய செய்தி களைத் தருகின்றன.

13. ஆரிய இலக்கியங்களிலும் இச்செய்திகள் காணப்படுகின்றன.

14. இந்தியாவை மையமாகக் கொண்டு, தென் ஆப்பிரிக்கா தொடங்கி அதன் வடக்கு நோக்கிச் செல்லும் வழியில் உள்ள நாடுகளும் இன்னும் மேலேயுள்ள எகிப்து, கனான், பாபிலோன், ஈழம், கல்தேயம், பாரசீகம், சிந்துவெளி என வளைந்து, கிழக்கே அறியப்படும் பர்மா, தாய்லாந்து, மலேசியா, காவா, புரூனே, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஒரு வட்டத்தின் முக்கால் பகுதி யளவு காணப்படுகின்றன. ஏறக்குறைய இன்றைய அரசியல் எல்லைகளைக் கொண்ட 35 நாடுகளின் பழங்காலப் பெயர் களும் தமிழ்ப் பெயர்களாகவே உள்ளன.

15. சீனம் என்ற பெயர், சேணம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே எனலாம். சேணம் = தொலைவிலுள்ள நாடு.

16. சப்பான் என்ற நாடு, அவர்தம் மொழியில் யாப்பான் என்றே சொல்லப்படுகின்றது. யா என்ற தமிழ்ச் சொல்லுக்குக் கடல் என்பதே பொருளாகும். யாப்பான் = கடலால் சூழப்பட்ட நாடு.

17. குமரிக்கண்ட அழிவிற்குப்பின் குடியேறிய மக்களால் சூட்டப் பெற்ற பெயர்களே மேற்கண்டவை என அறியலாம்.

18. யாத்திரை என்பதற்குத் தென்கடல் என்பதே பொருளாகும். யாத்திரை ஆழியம் என்ற தமிழ்ச் சொற்களே ஆஸ்திரேலியா எனத் திரிபுபட்டதென்க. யாத்திரை ஆழியம் = தென்திசைக் கடல்.

19. மேற்கண்ட நாடுகளின் பெயர்களையும் தமிழ் மூலத்தில் காட்ட இயலும்.

20. மொழி மற்றும் இலக்கியச் சான்றுகள், குமரிக்கண்ட நிலைப் பாட்டினை உறுதி செய்கின்றன.

(விரிவான விளக்கங்களுக்கு ஆசிரியரின் குமரிக்கண்டம் உள்ளிட்ட ஆய்வு நூல்களைக் காண்க).

13. புதிய உலகம்

வெள்ளக் காலம் முடிவுற்ற போது, உலகின் பல நிலப் பகுதிகள் வெள்ளத்தால் எவ்வகையான மாறுதல்களுக்கும் உட்படாமலும் இருந்தன. ஆகவே, சமயங்கள் கூறுவது போல் உலகம் முழுவதும் அழிந்துவிடவில்லை. உலகம் முழுதும் அழிந்துவிட்ட பிறகு மீண்டும் அவை எவ்வாறு பிறந்தன உயிர் பெற்றன என்ற கேள்வி எழும் என்பதால், வெள்ளக்கதையில் விலங்குகள், பறவைகள், மக்கள் ஆகியோர் மரக்கலத்தில் இருந்ததாகக் கதை பின்னப்பட்டது. வெள்ளக் காலத்தில் முற்றிலுமாக அழிந்தது குமரிக்கண்டமே எனக் கருதலாம். அரபிக்கடலுக்கு அடியில் செல்லும் கடல் தட்டும், இந்தோ னேசியாவைத் தொட்டுச் செல்லும் நிலத்தட்டும் கொடுத்த அசைவுகளினாலும், குமரிக்கண்டம் ஆப்பிரிக்காவைவிட தாழ்வான நிலப்பகுதியாக இருந்ததாலும், பனி உருகல் காலத்திய கடல் நீரின் உயர்வாலும் குமரிக்கண்டம் அழிந்தது.

குமரிக்கண்டத்தின் நிலப்பகுதியில் இன்று எஞ்சியுள்ள எச்ச நிலப்பகுதிகளைக் காணும்போது, அவை மேற்கில் உயர்ந்தும் - கிழக்கில் சரிந்தும் காணப்படுவதை உணரலாம். இத்தகைய சரிவும் குமரிக்கண்டம் அழிந்ததற்கொரு காரண மாகும். தென்னிந்திய நிலப்பகுதி இத்தகையை சரிவைக் கொண் டதே என்க. வெள்ளக்காலத்தில் உலகம் முற்றிலுமாக அழிந்து போயிருந்தால், இவ்வுலகின் கடந்தகால வரலாறுகளும் மாண் டுபோயிருக்கும். எஞ்சியுள்ள நிலப்பகுதிகளில் அறியப்படும் செய்திகளாலும், புதிய அறிவியல் தொழில் நுட்பங்களாலும், மாந்த இன வரலாறு உட்பட பல செய்திகள் நமக்குக் கிடைத் துள்ளன. ஆப்பிரிக்காவின் ஓல்டுவாய் மண்டையோடுகளும், சாவாவின் மண்டையோடுகளும், அப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தால், அறியப்படாமலேயே போயிருக்கும்.

நிலநடுக் கோட்டுப் பகுதிகளில் இன்று அறியப்படும் புவியியல் தொடர்பான செய்திகள் அனைத்தும் குமரிக்

கண்டத்துக்கும் பொருந்தும். குமரிக்கண்ட அழிவிற்கு முன்னர் மேலை, கீழை நாடுகளில் மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை அறிவியலார் உறுதி செய்துள்ளனர். ஆப்பிரிக்காவின் ஒல்டு வாய்ப் பகுதி மண்டையோடுகள், இரண்டு இலக்கம் ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்திருந்த மக்களைப் பற்றி அறிவிக்கின்றன. இன்று உலகின் பல நாடுகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ள மண்டையோடுகள் ஒல்டுவாய் - சாவா மண்டையோடுகளை விட காலத்தால் பிற்பட்டவை எனவும் கண்டறியப்பட் டுள்ளது. வெள்ளக் காலத்துக்கு (கி.மு. 10000) முன்பு உலகின் எந்த நாட்டிலும் வேளாண் தொழில் நடைபெற்றதற்கானச் சான்றுகள் கிடைக்கவில்லை. குமரிக்கண்டத்து மக்கள் வெள்ளக் காலத்துக்குமுன்பே வேளாண் தொழிலில் சிறப்புற் றிருந்ததாலும்,வெள்ளக் காலத்துக்குப் பிறகு மேற்கில் உள்ள பல நாடுகளில் குடியேறியதாலும், மேற்கு நாடுகளில் அக் காலம் முதல் வேளாண் தொழில்கள் தொடங்கப்பட்டன.

வெள்ளக் காலத்துக்குப் பிறகு மேற்கில் குடியேறிய நோவாவின் மக்கள் பல்கிப் பெருகி, இரட்டை ஆறுகளின் சமவெளிகளில் நிறைந்தனர். அம்மக்கள் பேசியது ஒரே மொழியாகவும், அம்மொழியின் சொற்களாகவுமிருந்தன என்று விவிலியம் கூறுகிறது. அம்மொழி தமிழே என்பதை பல்வேறு மேலை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். அவ்விலக்கியங் களை படித்தறிந்தவர்கள் அவ்விலக்கியங்கள் தரும் செய்தி களைப் புரிந்து கொள்ளவில்லை எனலாம். நோவாவின் பெய ரும், அவனது மக்கள், பெயரக் குழந்தைகள், மரபினர்களின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாக உள்ளன என்பதையும் அறியலாம். அம்மரபினர் காலப்போக்கில் மேற்கில் பல்வேறு திசைகளிலும் சிதறிப்போயினர் என்ற செய்தியால், நடுத் தரைக்கடல் பகுதிகள், ஆப்பிரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலும் தமிழைக் கொண்டு சென்றனர்.

குமரிக்கண்ட அழிவு, மேலை நாடுகளில் தமிழரின் குடி யேற்றங்களைத் தோற்றுவிக்கக் கரணியமாய் இருந்தது என்ப தும், தமிழ்மொழி பரவலாகப் பேசப்பட்டது என்பதையும் அறியலாம். அக்கால அளவிற்குப் பிறகே மேற்கில் நாகரிகத்தின் வித்து ஊன்றப்பட்டது. அடுத்த சில ஆயிரம் ஆண்டுகளில் மெசபத்தோமியாவிலும், எகிப்திலும் தலைசிறந்த நகரிய நாகரிகம் இணைந்து வளர்ந்தது. கலை, கல்வி, அறிவியல்,

வானியல், சமயம், கட்டிடக்கலை, வேளாண்மை என்றவாறு அப்பகுதிகளில் வளர்ச்சிகள் அறியப்பட்டன. குமரிக்கண்ட அழிவும், மேலை நாடுகளில் தமிழரின் குடியேற்றங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிகழ்வுகளாயின.

